
விலை 20 ரூபா

# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 12 • 11.10.2015


ஐயப்பன் கைத்தொழிலகம்
IYAPPAN INDUSTRIES
கொப்பராய் அரைத்தல்
என்ரூ அரைத்தல்
இலுப்பை விதை அரைத்தல்
வேப்பம் விதை அரைத்தல்
விளக்குமாறு, தும்புத்தடி
தும்புவகை உற்பத்திகள்
சிரட்டை, ஈக்கின் என்பன
கொள்வனவு செய்யப்படும்
077 4821455
Mannar Road, Veppankulam, Vavuniya.
மன்னார் வீதி, வேப்பங்குளம், வவுனியா.



நமது கலாசாரம், பண்பாட்டின் எல்லைக்கோடுகளை கடந்து கொண்டு இளைய சமூகம் வெளியில் சென்று கொண்டிருக்கிறதா? வடக்கு முழுவதையுமே தலையை பிய்க்க வைத்துக் கொண்டிருக்கும் கேள்வியிது தினமும் வாள்வெட்டு, கடத்தல், பாலியல் வன்முறை, முறையற்ற கர்ப்பங்கள் பற்றிய செய்திகளினாலேயே பத்திரிகைகள் நிரம்பி வழிகின்றன. இந்தக்கதைகளையே பேசிப்பேசியே நம்மவர்களின் பொழுதுகளும் தீர்கிறது. என்ன ஆயிற்று நமது சமூகத்திற்கு?

தொடர்ச்சி 7-ம் பக்கம்


# காதல் முதல் கர்ப்பம் வரை

## எல்லை தாண்டுகிறதா இளம் சமூகம்?

# அமெரிக்கா வைத்த ஆப்பு! கூட்டமைப்பும் சிதறுமா?

தமிழரசுக்கட்சி தனித்துப் போகப் போகிறதா? தமிழ்தேசிய அரசியலில் புதிதாக உருவெடுத்துள்ள சுனாமி பரபரப்பு இதுதான். தமிழரசுக்கட்சிக்காரர்களின் அண்மைய சொல், செயல்களை பார்த்தால் அப்படித்தான் நடக்குமென்பதை அரசியலில் 'அ' எழுத தெரியாதவர்களும் புரிந்து கொள்ளலாம். 'நாங்கள் எல்லாம் ஒன்றுக்குள் ஒன்று' என தேர்தல் சமயத்தில் பேசியவர்கள், புள்ளடியிட்ட சனங்களின் கைவிரல் மை காய முன்னரே ஆளுக்கொரு திசையாக நின்று பிடுங்குப்பட தொடங்கியதன் இறுதி நிகழ்வே இது. தனித்து களமிறங்கினாலும் ஒன்றும் பாதகமில்லை, சனங்கள் கண்ணை மூடிக்கொண்டு வீட்டுக்கு மேல் புள்ளடியிடுவார்கள். எங்களுடன் நிற்கும்வரைதான் பங்காளிக்கட்சிகளிற்கு மரியாதை என்று தமிழரசுக்கட்சிக்காரர்கள் கணக்குப்போட்டுள்ளதாக தெரிகிறது. தமிழ்தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில் கடந்த 13 வருடங்களாக


தொடர்ச்சி 19-ம் பக்கம்

திரு. 'சம்பந்த' நாயனார்! 4



யாழினியின் கனவு கலையுமா? 6



ஒரேயொரு ஊரில் ஒரேயொரு ராசா 8

உள்ளே...

# சேயா கொலை சர்ச்சை

சிறுமி சேயா கொலை ஏற்படுத்திய அதிர்வுகளிற்கு சற்றும் குறைவில்லாத அதிர்வுகள் அந்த விவகாரத்தில் தொடர்ந்தும் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. பச்சிளம் சிறுமியொருத்தியை கழுத்தை நெரித்து கொன்று, துஷ்பிரயோகம் செய்தது ஒரு மனித மிருகம்தான் என்பது வெளிப்படை. இந்தவகையானவர்களுடன்தான் உலகத்தை பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்றபோது அயர்ச்சிதான் ஏற்படுகிறது.

ஒவ்வொரு கொலையின் பின்னரும் எல்லோரும் கண்ணைக்கசக்கி கொள்வதும், ஊடகங்கள் சுடச்சுட செய்திகள் போட்டு பரபரப்பை தக்க வைத்துக்கொள்வதும் வழக்கமாகிவிட்டது.

சேயா கொலையை தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சி நாளாந்தம் வேறுவேறு வடிவங்களில் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. குறிப்பாக குற்றவாளிகள் தொடர்பில் பொலிசார் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் அறிக்கை, பொலிசார் வெளியிடும் அறிக்கைகள் தொடர்பில் சந்தேகத்துடனேயே இருக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில், கிட்டத்தட்ட கொலைக்குற்றவாளியென பொலிசாரால் அடையாளப்படுத்தப்பட்ட இருவர் நிரபராதிகள் என பொலிசாரே சொல்லிவிட்டனர். அதுவும் வரிசையாக. முதலில் 17 வயது மாணவனை சந்தேகத்தில் கைது செய்தனர். அவர் தொடர்பில் பொலிசாரிடம் சந்தேகத்தை ஏற்படுத்தும் தடயங்கள் சிக்கவில்லையென பொலிசாரே கூறினார்கள். பின்னர் மரபணு பரிசோதனை செய்தார்கள். அவர் நிரபராதியென நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார்கள். மாணவன் விடுதலையானார்.

மாணவன் விவகாரத்தில் பொலிசாரும், ஊடகங்களும் தமது மனச்சாட்சிகளை தொட்டு சில கேள்விகளை கேட்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அப்படி அவர்கள் செய்வார்களெனில், அவர்களது சேவை இன்னும் தொழில்நேர்த்தியுடையதாகும்.

முதலில் கைதான மாணவன், இன்னொரு குடும்பஸ்தர் கொடூரமான சித்திரவதைக்குள்ளானதாக கூறப்படுகிறது. அவர்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு புகைப்படங்களும் எடுக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பில் பொலிசார் அடிக்கடி ஊடகங்களில் பேசினார்கள். 'சேயா கொலையாளிகள் கைது' என்றே ஊடகங்களும் செய்திவெளியிட்டன.

பொலிசார் சந்தேகத்தினடிப்படையில் ஒருவரை கைது செய்வதை கேள்விகேட்க முடியாது. கைது செய்வதற்கு நியாயமான காரணமிருந்தால்த்தான் அவர்கள் கைது செய்வார்கள், அவசியமான, உணர்வுபூர்வமான விவகாரங்களில் விரைவாக செயற்பட வேண்டிய தேவையுள்ளதென்பதெல்லாம் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். சந்தேகத்தினடிப்படையில் கைதாகுபவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் அல்ல, சான்றுகள் நிரூபிக்கப்படாவிட்டால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டு விடுகிறார்கள் என்பதும் சரிதான். ஆனால், இந்த வாதங்களை வைத்தே சேயா விவகாரத்தில் பொலிசார் நடந்து கொண்டதை நியாயப்படுத்த முடியாது.

கைதான மாணவன் நிர்வாணப்படுத்தப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்டார், கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார் என்பதெல்லாம் இயல்பு வாழ்விற்கு சவால்விடுபவை. பொலிசாரின் அறிக்கைகளின் பிரகாரம் அந்த மாணவனில் அவர்கள் சந்தேகப்பட இருந்த ஒரே, வலுவான சான்று, மாணவன் நீலப்படங்கள் பார்ப்பதே. இந்த அடிப்படையில் மட்டும் ஒருவரை கைது செய்வதும், அவர் இன்னும் சந்தேகநபர்தான் என்ற பொறுப்புணர்வற்று செயற்படுவதும் நியாயப்படுத்த முடியாதவை.

குற்றம் நிரூபிக்கப்படாதவரையிலும், மாணவன் சந்தேகநபரே. வாக்குமூலம் பெறுவதற்கு பொலிசார் இன்னும் அடித்து சித்திரவதை செய்வதையே வழிமுறையாக கொண்டுள்ளார்கள் என்பதும் கவலைளிக்கும் விடயமே. பாதுகாப்பு, இராணுவத்துறையில் இலங்கை அண்மைக்காலங்களில் எட்டிய தேர்ச்சியும், வளர்ச்சியும் அபரிமிதமானது. உத்திரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் இலங்கைப்பாதுகாப்புதுறைகள் தெற்காசியாவிலேயே அதிக 'அப்டேற்' கொண்டவை என்றும் கொள்ளலாம். எனினும், சிவில், மனிதஉரிமை விவகாரங்களுட் தொடர்புடைய பொலிஸ் விசாரணை முறைகளில் நவீன தொழில்நுட்பங்கள் இன்னும் சாத்தியப்படவில்லை. இலங்கைமீது அண்மைக்காலமாக மெலெழுந்துவரும் மனிதஉரிமைக் குற்றச்சாட்டுக்களிலிருந்து ஓரளவு தப்பிக்கவும் இது உதவலாம்.

மாணவன் நிரபராதியென விடுவிக்கப்பட்டதும், 'கொண்டயா' என்பவர் கைதானார். அவர்தான் உண்மையான குற்றவாளியென நீதிமன்றில் அறிக்கையிடப்பட்டது. சிறுமியை எப்படி கடத்தினேன், எப்படி கொன்றேன் என கொண்டயா கூறியதாக ஒரு வாக்குமூலமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பின்னர் கொண்டயாவின் சகோதரன் கைது செய்யப்பட்டுள்ளார். கொண்டயாவிடம் மேற்கொள்ளப்பட்ட மரபணு பரிசோதனையில், சிறுமியின் உடலிருந்து மீட்கப்பட்டது கொண்டயாவின் மரபணு அல்லவென்பது தெளிவாகியுள்ளது.


இப்பொழுது கொண்டயாவின் சகோதரனின் முறை.

பொலிசாரின் குறி இனியும் தவறுமென நம்பவில்லை. என்றாலும், இதுவரை தவறியவை பெருமளவிற்கு பொலிசார் தம்மத்தியிலுள்ளவர்களின் தொழில்தேர்ச்சி பற்றிய சுயவிமர்சனத்திற்கு உதவும்.

உணர்வுபூர்வமான விடயங்களில் பொலிசாரும் உணர்ச்சிவசப்பட்டு நடக்க முடியாது. அவர்களின் நேர்த்தியான செயற்பாடே கொந்தளிப்பான சமூகத்தை கட்டுப்படுத்தும்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633 ✉ deepamdesk@gmail.com

# சொன்னார்கள்



**இரா.சம்பந்தன்**
**எதிர்க்கட்சி தலைவர்**

தமிழ்மக்கள் ஏன் வன்முறையை கையிலெடுத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. தந்தை செல்வாவின் வழியில் அகிம்சையை கையிலெடுத்திருக்க வேண்டிய தமிழினம், ஏன் வன்முறையை கையிலெடுத்தது என்பது இப்பொழுதும் எனக்கு குழப்பமாகவே உள்ளத.



**அல்பட ஜஸ்ரின்**
**தலைவர், மன்னார் மாவட்ட கடற்றொழில் சம்மேளனம்**

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் பாதிக்கப்படுவது வடக்கு மீனவர்கள் தானே என அரசு பாராமுகமாக உள்ளது. நமது அரசியல்வாதிகளும் இந்திய அரசு, தமிழக அரசை பகைக்காமல் இருக்க இந்த விடயத்தில் மௌனமாக இருக்கிறார்கள். மக்கள் கொந்தளிக்கும்போது மாத்திரம் இடையிடையே பாராளுமன்றத்தில் பேசுகிறார்கள்.



**சந்திரகுமார்**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்**

தமிழ் சமூகத்தின் கல்வித்துறையை அழிக்க பல வழிகளிலும் சுழன்றடித்த சூறாவளிகளிற்கு மத்தியிலும் நிமிர்ந்து நின்று நமது கல்வியை கட்டிக்காத்த தூண்கள் நமது ஆசான்கள். யுத்தத்தின் பின் கல்வித்துறையை கட்டியெழுப்பிய பெரிய பொறுப்பை நிறைவேற்றுபவர்களிற்கு தமிழ் சமூகம் மதிப்பளிக்கும் நாளே, ஆசிரியர் தினம்.



**ஜாக்கிரதா சைதன்யா சுவாமிகள்**

மாதா, பிதா, குரு போன்றவர்களை நாம் வணங்க வேண்டும். ஒவ்வொருவருமே தனக்குத்தானே கட்டுப்பாடுகள் விதித்துக்கொண்டு, தங்கள் மனச்சாட்சிக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கையை சரியாக கொண்டு நடத்த அதுவே காரணமாக அமையும்.



**நிமல் சிறிபால டி சில்வா**
**போக்குவரத்து அமைச்சர்**

இராணுவம் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கமே செயற்பட வேண்டும். இராணுவத்தினரை நியாயப்படுத்தி காப்பாற்ற வேண்டியது அவர்களின் கடமை. அதனை முன்னைய மகிந்த அரசு செய்யவில்லை. தற்போது நாம் குற்றச்சாட்டுக்களை நிவர்த்தி செய்யும் விதத்திலும், சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் விதத்திலும் செயற்படுகிறோம்.



**இளஞ்செழியன்**
**யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி**

இராணுவச் சிப்பாய்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவது இராணுவத்தின் நற்பெயரை கெடுக்கும் செயலாகும். எனவே, இலங்கை இராணுவத்தின் கௌரவத்தை பாதுகாக்க வேண்டுமானால், இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களிற்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். இராணுவத்தின் பாலியல் வல்லுறவு குற்றமென்பது, சர்வதேச குற்றம். போர்க்குற்றம்.

# க்ளிக் பக்கம்

**யு**த்தம் முடிந்து மக்கள் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னரான ஒரு மாலைப்பொழுது. கடலும், காவலும் சூழ்ந்த மக்களின் வாழ்வின் காட்சியிது.

**என்னைப்பற்றி:** மனிதர்களையும், இயற்கையையும் எழுத்திலும் காட்சியிலும் தொடர்ந்து பதிவு செய்து வருகிறேன். எழுத்தைப்போலவே புகைப்படக்கலையிலும் தீராக்காதல். மண்ணையும், மக்களையும் ஆவணமாக்கும் பணியின் ஒரு எத்தனமிது.



**படப்பிடிப்பாளர்:**
**சி.கருணாகரன்**
**இடம்:**
**பூநகரி**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் deepamdesk@gmail.com





# இலங்கை தாத்தா

தங்கையின் வாழ்வை வில்லன்கள் சிதைப்பதும், பின்னர் அண்ணன் அவர்களை தேடித்தேடி பழிவாங்குவதும் தமிழ்சினிமாவில் சர்வசாதாரணம். ஆனால் அதனை நிஜத்தில் நிகழ்த்திக்காட்டியுள்ளார் ஒரு சிங்களவர்.

1972 இல் சிங்கள புத்தாண்டு தினத்திலன்று அழகியாக தேர்வு செய்யப்பட்ட இவரது தங்கையை சிலர் காரில் கடத்திச் சென்று சீரழித்து கொன்றுள்ளனர்.

'ஹிதுமதே ஜீவதே' என அழைக்கப்படும் சுமதிபால என்ற அந்நபரின் சகோதரியை கொன்ற குழுவில் உயர் பொலிஸ் அதிகாரியும் இருந்தாராம்.

இதனையடுத்து அண்ணனின் வேட்டை ஆரம்பமானது. முதல் கொலை பொலிஸ் அதிகாரி. இதனையடுத்து கைதான அவருக்கு 1975இல் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. தூக்கிலிடுவதற்கு முதல் நாள், உணவுப்பீங்கானை உடைத்து உடலெங்கும் குத்திக் கொண்டார். இதனால்தூக்குபிற்போடப்பட்டது. இவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர், அப்போதைய ஜனாதிபதியுடன் பேசி தூக்குத்தண்டனையை இரத்து செய்தார்.

இதன்பின்னர் பலதடவைகள் சிறையிலிருந்து தப்பிச் சென்று, தங்கையை கொன்ற ஒவ்வொருவரையும் போட்டுத் தள்ளினார். இவர் சிறைகளில் இருந்த சமயங்களில் கூடவே பல பிரபலங்களும்இருந்துள்ளன. மகிந்த ராஜபக்ச, ரோஹண விஜேவீர, அந்தக்காலத்தில் புகழ்பெற்ற கொலையாளியான 'மருசிரா' ஆகியோர் இதில் சிலர்.

1978இல் மீண்டும் இவருக்கு தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டது. எனினும், அப்போதைய அரசு தூக்குத்தண்டனையை இல்லாமலாக்கியதால் தப்பித்தார்.

பின்னர் 39 வருடங்கள் சிறையில் காலத்தை கழித்தார். ஒருநாள் திடீரென கூரையில் ஏறி போராட்டம் நடத்தினார். தன்னை விடுதலை செய்யுங்கள், அல்லது தூக்கில் போடுங்கள் என்பதே கோரிக்கை. மீண்டும் அதிஸ்டம்.

தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 'அட நம்ம தோஸ்த்' என சொல்லி, அவருக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார்.

அதன் பின்னர் 8 மாதங்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு, சந்தோசமாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி விட்டார். தன்கு சொந்தமாக காணியை தங்கை மற்றும் தாயின் பெயரில் விகாரைக்கும் வழங்கிவிட்டார்.

தங்கையை கொன்ற 5 பேரையும், சிறையில் தன்னை கொல்ல வந்த ஒருவரையும் கொன்றுள்ளதாக கூறுகிறார்.

## இணைய ஜன்னல்

**Addalaichenai Mirsath**
புலி படம் பார்த்து இதுவரைக்கும் உயிருடன் இருப்பவங்க வந்து சொல்லுங்க நாளைக்கு புலி பார்க்காலாமா வேண்டாமா என்று பி.கு பழய பகையை மனசுல வைச்சுக்கு பழி வாங்க வேண்டாம் நட்பூஸ்

**Neethujan Bala**
பரபரப்போடு ? புலி'யைக் கலாய்க்கக் காத்திருக்கும் அன்பர்கள் இரண்டு வழிகளைப் பின்பற்றலாம்.
1) பாகுபலியோடு ஒப்பிட்டு, இது மரண மொக்கை என்று சீரியஸாகக் கலாய்க்கலாம்.
2) கோச்சடையானோடு ஒப்பிட்டு, அதைவிட இந்தக் கார்ட்டூன் படம் செம்மை என்று இரக்கமில்லாமல் கலாய்க்கலாம்.
ஐம் வெய்ட்டிங்..

**Surabi Kanthasamy**
ஜெனீவாக்கு போனவங்க எல்லாரும் வந்திட்டாங்களா?

**Ahilan Nadarajah**
கைராசிக்கார டாக்ரம்மா என்றால் நாடி பிடித்துப் பார்த்தாலே போதும். காய்ச்சல் போய்விடும்.
கண்ராசிக்கார டாக்ரம்மா என்றால் ஒரு லுக் விட்டாலே போதும். இதயம் லேசாகிவிடும்.

**Baskaran Matheesan**
பெண்ணு முகத்த மட்டும் பாத்து காதலிக்கிறதும் புலி பட TRAILER பாத்து படம் பாக்க போறதும் ஒண்டு . # பாடம் பாத்திட்டு வந்தவன் சொன்னது

## இந்திய மீனவர்கள் வருடத்தில்

**36,000**
தடவை இலங்கை கடலுக்குள் அத்துமீறுகிறார்கள்.

**5,293**
மில்லியன் ரூபா கடல்வளத்தை சூறையாடுகிறார்கள்.

**29.015%**
தமிழ் மீனவரொருவரின் ஆண்டு வருவாயை அபகரிக்கிறார்கள்



கிளிநொச்சியில் நடந்த உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிக் கொண்டிருந்த சமயத்தில், போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.



# திரு. 'சம்பந்த' நாயனார்!

என். நிக்சன்

இலங்கை எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டதன் பின்னர் இரா.சம்பந்தன் மூன்றுநாள் 'பக்திவிசிட' ஒன்றை யாழ்ப்பாணத்திற்கு அடித்து முடித்துவிட்டு சென்றிருக்கிறார். அமெரிக்கா தீர்மானத்துடன் ஒத்துழைத்தது, ரணில் உரையாற்றிய போது எஸ்கேப் ஆனது என பல சர்ச்சைகள் ஓடிக்கொண்டிருக்க, எதுபற்றியும் அலட்டிக் கொள்ளாமல் ஆலய தரிசனத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார். இதுவரை அரசியல்மேடைகளில் முழங்கிய தலைவரை பார்த்து பார்த்து பழகிவிட்ட தொண்டர்கள், பக்திப்பழமாக நின்ற தலைவரைப்பார்த்து 'சாட்சாத் சிவபொருமானே 'ரெயாட்டோலான்குருசர் வி.ஐ.பி' வாகனத்தில் வந்திறங்கி விட்டார்' என நெக்குருகி நின்ற 'சிலீர்' காட்சிகளையெல்லாம் காண முடிந்தது.



மக்கள் சந்திப்பு

பொதுவாகவே நமது அரசியல் தலைவர்கள் எல்லோரும் பக்திப் பழங்கள்தான். ஆனால் அதிலும் சம்பந்தன்தான் தலைவர் என்று மெய்சிலிர்க்கிறார்கள் கட்சித் தொண்டர்கள். அப்படியொருபக்திமானாம். எளிமையான வேட்டி, வயிற்றுக்குமேல் கட்டிய சால்வை, நெற்றிநிறைய பட்டை, சந்தனம், குங்குமம் என பக்திக்கோலம் பூண்டிருந்தார் சம்பந்தன்.







ஆலய தரிசனங்கள்

ஆனால் எதிர்க்கட்சி தலைவரின் விஜயத்தில் உறுத்தலாக இருந்த விடயம், பெரிளயவிலான மக்கள் வரவேற்பை மூன்று நாளிலும் காண முடியவில்லை. குறிப்பாக கட்சி தலைமையகத்தில் நடந்த வரவேற்பாகட்டும், தந்தை செல்வாவின் தூபியில் மலரஞ்சலி செலுத்தியதாகட்டும், எதிலும் கூட்டம் மிஸ்ஸிங். நரைத்த, பளத்த தலைக்காரர்கள்தான் சிலர் நின்றனர். ஆட்களை சேர்க்க கட்சியலவில்லையா அல்லது முடியவில்லையா என்பது கட்சிக்காரர்களிற்குத்தான் வெளிச்சம்.

கொழும்பிலிருந்து மூன்றுநாள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். முதல் நிகழ்வாக தந்தை செல்வாவின் நினைவுத்தூபிக்கு மலரஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வு தடல்புடலாக நடக்குமென பத்திரிகையாளர்கள். மத்தியில் ஒரு தகவல் பரவியது. கமராவும் கையுமாக பத்திரிகையாளர்கள் அந்தப்பகுதியை முற்றுகையிட்டால், நடந்ததோ வேறு. காதும்காதும் வைத்ததைப் போல நிகழ்வு நடந்தது. வெகு சிலர்தான் அங்கு வந்திருந்தனர்.

அடுத்த நிகழ்வு சென்.பற்றிக்ஸ் கல்லூரியில். சம்பந்தன் பற்றிக்ஸ் பழைய மாணவன் என்பது இந்த நிகழ்வின் பின்னர்தான் பலரிற்கு தெரிய வந்தது. நிகழ்வின் பிரதம விருந்தினர் தலைவர்தான். வழக்கம் போல கம்பீர, கலக்கல் உரை. வயசானாலும் அது விட்டுப்போகவில்லையென்பதுதான் தலைவரின் பிளஸ். 'தந்தை செல்வா ஏற்காத எந்த தீர்வையும் நாமும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்' என கூறி கைதட்டலை அள்ளினார். (தந்தை செல்வா வட்டுக்கோட்டையில் தமிழீழ பிரகடனம்தான் செய்தாரே என யாரும் கேட்கப்படாது)

அதன்பின்னர் தலைவரின் ஆலய தரிசன சுற்றுப்பயணம் ஆரம்பித்தது. யாழிலுள்ள பெரும்பாலான பிரபல்ய ஆலயங்கள் அனைத்திற்கும் சூறாவளி தரிசனம் செய்தார். இந்த விஜயங்களின் போது திடீர் ஆச்சரியமாக ஒருவர் முளைத்தார். அவரைத்தான் கூட்டத்தின் அத்தனை கண்களும் மொய்த்தன. கமராக்கள் கண்டபடி க்ளிக் அடித்தன. கட்சிக்காரர்களும் வருங்கால தலைவி பாணியில் பவ்வியம் காட்டினார்கள்.

அவர்தான்... ருத்ரா. செல்வி ருத்ரா சம்பந்தன். தலைவரின் ஒரே பெண் வாரிசு.

மூன்றுநாள் ஆலயதரிசனத்திலும் சம்பந்தனின் பின்னால் கையில் பூத்தட்டோ, பழத்தட்டோ ஏந்தியபடி பத்தியே உருவாக ருத்ரா வலம் வந்தார்.

சம்பந்தனின் மூன்றுநாள் பயணத்திலும் மூன்றுபேர் அவருடன் நிழல்போல திரிந்தார்கள். தலைவரின் நிழலாக உலாவியவர்களில் முதலாமவர் என்ன... இல்லை. தலைவர் எள் என்பதற்குள் எண்ணெயாக நின்ற அவர்களின் விசுவாசம் பார்ப்பவர்களையே சங்கடப்படுத்தியதாக பத்திரிகையாளர்கள் சொன்னார்கள். சரவணபவன் எம்.பி, மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன், வலி.வடக்கின் முன்னாள் தவிசாளர் சுகிர்தன் ஆகியோரே அவருடன் மூன்றுநாளும் திரிந்த மெய்ப்பாதுகாவலர்கள்.



உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் நுழையும் சர்ச்சை

முதல்நாள் நயினாதீவு நாகபூசணியம்மனில் தரிசனம் ஆரம்பித்தது. பற்றிக்ஸ் நிகழ்வு முடிந்ததும், நேராக நயினாதீவு சென்றிரங்கியது 'தமிழரசுப்படை'. கூடவே கமராக்கூட்டமும்.

இரண்டாம்நாள் தரிசனத்திற்கு யாழின் முக்கிய வழிபாட்டு தலங்களான தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு தொடரணி சென்றது.

மாவிட்டபுரத்தில் ஆலய தரிசனம் செய்து கொண்டிருந்த போதுதான் திடீர் விருப்பமொன்று சம்பந்தனிற்கு ஏற்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச பெரும் பணச்செலவில் கீரிமலையில் மாளிகையொன்று அமைத்தார். போரின் பின்னர் பிரபாகரனின் இருப்பிடங்கள் காட்சிப்பொருளானதைப் போல, ஆட்சிமாற்றத்தின் பின் மகிந்த ராஜபக்ச அமைத்த மாளிகைகள் காட்சிப்பொருளானது. புதிய தென்னிலங்கைத் தலைவர்கள் எல்லோரும் அதை வந்து பார்த்து வாய்பிளந்தனர். அந்த மாளிகையை பார்க்கவேண்டுமென சம்பந்தனிற்கு திடீர் ஆசை வந்துவிட்டது. அதனை சுகிர்தனிடம் சொன்னார். அதற்கென்ன பார்த்துவிடலாமென்றார் சுகிர்தன்.

திட்டமிட்டதைப் போல, தெல்லிப்பழை துர்க்கையம்மனையும் தரிசித்துவிட்டு ஜனாதிபதி மாளிகை பார்க்க செல்வதென முடிவுவானது.

தெல்லிப்பழையில் பிரதேச தமிழரசுக்கட்சிக்காரர்கள் சிலர் வரவேற்றனர். சிறிய வழிபாடு. பிறகு வாகனத் தொடரணி புறப்பட்டது. கீரிமலையிலுள்ள உல்லாசமாளிகையை பார்க்க சென்றனர். இராணுவத்தினர் உள்ளே செல்ல முடியாதென தடைவிதித்து விட்டனர். வேறு வழியில்லாமல், சற்று தொலைவில் வீதியோரமாக நின்று பார்த்துவிட்டு திரும்ப வேண்டியதாகிவிட்டது.

அங்கிருந்து வீமன்காமம் பயணம். உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதி. சம்பந்தன் சென்ற பகுதிக்கு மக்கள் சிலர் அழைக்கப்பட்டிருந்தனர். சம்பந்தனை கண்டதும், தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை கொட்டித்தீர்க்க தொடங்கினார்கள். அவர்களிற்கு ஆறுதல் சொல்லி, விரைவில் உயர் பாதுகாப்பு வலய பிரச்சனையை தீர்ப்பதாக வாக்களித்தார்.


வெளியில் நின்று மாளிகையை பார்க்கும் போது

அங்கு உறுத்தலாக இருந்த விடயம், எதிர்க்கட்சி தலைவர் வாகனத்தை விட்டு இறங்காமலே மக்களுடன் பேசியது. அது சற்று சங்கடமான காட்சியாக இருந்தது. கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த தமிழரசுக்கட்சி பிரமுகர்கள் யாராவதாவது இதனை கவனித்திருக்கலாம்.

பின்னர், ஒட்டகப்புலம் நோக்கிய பயணம். அதுவும் அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிதான்.

இதில் குறிப்பிட்டு சொல்லத்தக்க விடயம், ஒட்டகப்புலத்திற்கு சென்ற வாகனத்தொடரணி வசாவிளான் பாடசாலைக்கருகில் உள்ள உயர்பாதுகாப்பு வலய எல்லைக்கு ஊடாகத்தான் சென்றது. இராணுவத்தினர் மிக பவ்வியமாக எதிர்க்கட்சி தலைவரை உள்ளே செல்ல அனுமதித்தனர். ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சி தலைவராக இருந்த சமயத்தில், பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் நுழைய எத்தனித்திருந்தார். இதேபாதையின் ஊடாகத்தான் அவர் செல்ல முயன்றார். ஆனால் அப்பொழுது இராணுவம் அனுமதிக்கவில்லை. இம்முறை, எதிர்க்கட்சிதலைவரை அனுமதித்த இராணுவம், அவருடன் சென்ற ஊடகவியலாளர்களை அனுமதிக்கவில்லை.

இந்த சந்திப்புக்கள் முடிந்து தங்குமிடம் சென்ற சம்பந்தன், அரச

**இந்தக்கூட்டத்தை பார்த்தபோது சிந்தனையை தூண்டும் கேள்வியொன்றும் எழுந்தது. 'தமிழரசுக்கட்சி வயோதிபர்களின் கூடாராமா?. இளையவர்களிற்கு இடமில்லையா?**

உயர்மட்டத்தை இரவோடிரவாக தொடர்பு கொண்டு ஒரு இணக்கப்பாட்டை பெற்றார். அது பற்றி அவர் யாரிடமும் வாய் திறக்கவில்லை. அதனால் நாமும் அந்த பகுதிவரும் வரை மூச்சும் விட மாட்டோம்.

மறுநாள் செல்வச்சந்நிதி முருகன் ஆலயம். வுடமராட்சி தமிழரசுக் கட்சிக்காரர்கள் கூடியிருந்தார்கள். பக்திபூர்வழிபாட்டின் இடையே, 'நேற்றுப்பார்க்க முடியாத கீரிமலை ஜனாதிபதி மாளிகையை இன்று பார்ப்போம்' என்றார் சம்பந்தன். உள்ளே செல்ல நேற்று அனுமதி கிடைக்காதபோது, இன்று எப்படி கிடைக்குமென கட்சிக்காரர்கள் குழப்பமானார்கள். கடந்த இரவில் அரசஉயர்மட்டத்துடன் பேசி அனுமதி பெற்ற விடயத்தை அப்பொழுதுதான் வெளியில் சொன்னார்.

செல்வந்நிதியிலிருந்து புறப்பட்ட தொடரணி வலி கிழக்கின் வளலாய்ப் பகுதிக்குச் சென்றது. அங்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடமொன்றில் கொஞ்சப்பேர் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுடன் சிறிதுநேரம் பேசினார்.

அடுத்து ஜனாதிபதி மாளிகை பார்க்கும் பயணம். இடையில் காங்கேசன்துறை தல்செவன விடுதிக்கு சென்று சிறிய ஓய்வு. அங்கு இராணுவத்தினர் பயண ஏற்பாடுகளை செய்தனர்.

சம்பந்தனின் வாகனத்தை பாதுகாப்புடன் அழைத்து சென்றனர். பத்திரிகையாளர்களின் வாகனத்தை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அவர்கள் பாதியில் திரும்பி விட்டனர்.

மீண்டும் மாலையில் சம்பந்தனின் நிகழ்வில் இணைந்து கொண்டனர். யாழ் நகரத்திலுள்ள தமிழரசுக்கட்சியின் அலுவலகத்தில் வரவேற்பளிக்கப்பட்டது. கட்சிக்காரர்கள் பெருமகிழ்ச்சியுடன் தலைவரை வரவேற்றனர். எல்லோருடைய முகங்களிலும் பெருமகிழ்ச்சி நிறைந்திருந்தது. ஆனால் இந்தக்கூட்டத்தை பார்த்தபோது சிந்தனையை தூண்டும் கேள்வியொன்றும் எழுந்தது. 'தமிழரசுக்கட்சி வயோதிபர்களின் கூடாராமா?. இளையவர்களிற்கு இடமில்லையா?'.

இந்த நிகழ்வை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இந்தியதுணை தூதரகம் ஏற்பாடு செய்த அகிம்சை நிகழ்வில் கலந்து கொண்டார். அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான அவரது சுற்றுப்பயணம் முடிவடைந்தது.

இந்த பயணத்தில் உறுத்தலாக இருந்த விடயம், தமிழ்தேசிய கூட்டமைப்பின் மிஸ்ஸிங். சம்பந்தனின் விஜயம் முழுக்க முழுக்க தமிழரசுக்கட்சி சம்மந்தப்பட்டதாகவே இருந்தது. மூன்றுநாளில் ஒரு இடத்தில்கூட கூட்டமைப்பின் பிறகட்சிக்காரர்கள் ஒருவரையும் காண முடியவில்லை. சம்பந்தனின் விஜயத்தை அவர்கள் புறக்கணித்தார்களா? அல்லது தமிழரசுக்கட்சிக்காரர்கள் அவர்களை புறக்கணித்தார்களா?

எதுஎப்படியோ, தமிழர்களின் பெருந்தலைவராக உருவெடுத்துள்ள சம்பந்தன், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை பேணுவதுடன், கூட்டமைப்பின் தலைவராகவுமல்லவா நடந்து கொண்டிருக்க வேண்டும்.

கடவுள்களே, நீங்கள்தான் தமிழர்களின் ஒற்றுமையை காப்பாற்ற வேண்டும்!



ரணிலுக்கு கிட்டாத பாக்கியம்

- வடமராட்சியின் கரணவாய் மணலாவெளியில் மக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்ட தண்ணீர்தாங்கிப்பணி பாதியிலேயே நிற்கிறது. அந்தப்பகுதி மக்களின் பெரியதலைவலியான குடிதண்ணீர்ப்பிரச்சனையை தீர்க்க, தண்ணீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டது. நிதிநிறுவனங்களின் உதவி மற்றும் பிரதேசமக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டது. எனினும், அதற்கான மின்சார இணைப்பு வழங்கப்படாதமையினால் மக்களின் குடிநீர்ப்பிரச்சனை தீர்க்கப்படாமல் இழுபட்டுக் கொண்டே செல்கிறது. பிரதேசசபை மற்றும் பிரதேச அரசியல்வாதிகளிடம் மக்கள் தொடர்ந்து முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தில் கல்வி பயில்பவர்களின் நன்மைகருதி, அவர்களிற்கான போக்குவரத்து சேவையொன்றை ஏற்படுத்தி தரவேண்டுமென மாணவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். காலையிலும், மாலையிலும் யாழ்நகரத்திலிருந்து பரமேஸ்வர சந்திவரையான தூரத்தில் ஏற்படும் நெருக்கடியால் பயணிகள் பெரும் சிரமங்களை சந்திக்கிறார்கள். இந்த நேரங்களில் பேரூந்துகளில் தொங்கிக்கொண்டு பெருமளவான மாணவர்கள் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்களும் உள்ளன. அண்மையில் தனியார் பேரூந்தொன்றில் தொங்கிக்கொண்டு சென்ற ஒருவர் அந்தப்பகுதியில் தவறி நிலத்தில் விழுந்திருந்தார். எனினும் தெய்வாதீனமாக ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கவில்லை.

- யாழ்ப்பாணம் கோட்டைக்குள் பெருமளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். யாழின் முக்கிய பொழுதுபோக்கிடமாக மாறிவரும் அங்கு சிலரால் தவறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. தூர இடங்களிலிருந்து வரும் ஜோடிகள் அங்கு தவறான நடத்தையில் ஈடுபட்டு, யாரிடமாவது மாட்டிக் கொள்ளும் சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. கடந்த சிலதினங்களின் முன்னரும் ஜோடியொன்று சிக்கிக் கொண்டுள்ளது. இப்படியான சமயங்களில் அவர்களை புகைப்படம் எடுப்பவர்கள் இதனை தவறாக பயன்படுத்துவதாலும் வீணாண விளைவுகள் ஏற்படுகின்றன. இதனால் அந்த பகுதியில் முறையான கண்காணிப்பை ஏற்படுத்தலாமே?

- கழிவுஎண்ணெய் தாக்கத்திற்கு உட்பட்டு கிணற்றுநீரை பயன்படுத்த முடியாமல் தவிக்கும் சுதுமலை வடக்கு மக்கள் தமக்கான குடிநீர் விநியோகம் சீராக நடப்பதில்லையென முறையிடுகிறார்கள். குடிநீர் விநியோகத்திற்காக அமைக்கப்பட்ட தண்ணீர்தாங்கிகளில் சீராக நீர் நிரப்பப்படுவதில்லை. இதனால் கழிவு எண்ணெய் கலந்த தமது கிணற்றுநீரையே அவர்கள் பயன்படுத்த ஆரம்பிக்கிறார்கள். ஆபத்தான நீர் என அடையாளம் காணப்பட்ட பின்னரும், அலட்சியமாக இருக்கலாமா அதிகாரிகளே?



# சாதனை மாணவி யாழினியின் கனவு கலையுமா?

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

“இலங்கையின் ஒன்பது மாகாணங்களின் பெண் சாரணிய அமைப்புக்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான யாழினி ராஜேந்திரன் அகில இலங்கை ரீதியில் சிறந்த பெண் சாரணி விருதை பெற்றுள்ளார்.” இந்தச் செய்தி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் பத்திரிகைகள், இணையத்தளங்கள் என ஊடகங்களில் வெளியாகி இருந்தன.

சாதாரணமாக இந்த செய்தியை படித்தவர்களில் பலருக்கு யாழினி இந்த விருதை எப்படிப் பெற்றிருப்பார்?, விருதை வாங்க அவர் செய்த முயற்சிகள், குடும்ப பின்னணிகள், அவரின் கல்வி நடவடிக்கைகள், ஏனைய சாதனைகள் பற்றி மனதுக்குள் கேள்விகள் எழுந்திருக்கும். இதே, எண்ணம் எனக்குள்ளும் தோன்றியது.

அண்மையில் எதிர்பாராத விதமாக யாழினியை அவரது வீட்டிலேயே சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்” என்ற பழமொழிக்கிணங்க சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, “என்னம்மா யாழினி விருதெல்லாம் வாங்கி கலக்குறீங்க” என யாழினியை பற்றி முழுமையாக அறிந்துகொள்ள அவரிடம் மெதுவாக பேச்சுக்கொடுக்க, “எல்லா பெருமையும் அம்மா, அப்பாக்கு தான்” என புன்சிரிப்போடு பேச ஆரம்பித்தார் யாழினி.

பாடசாலை சாரணியர் இயக்கத்தில் இணைந்துகொண்ட நாள் முதல் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய யாழினி, 2013ஆம் ஆண்டு ஜனாதிபதி சாரணிய விருதை பெற்றுள்ளதோடு, 2010ஆம் ஆண்டு மலேசியா சென்று அங்கும் சாரணியர் பயிற்சிகளைப் பெற்றுள்ளார். தற்போது இலங்கை சாரணியர் மன்றத்தால் இந்த ஆண்டே (2015) அறிமுகப்படுத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான சிறந்த பெண் சாரணி விருதையும் தன்வசப்படுத்தியுள்ளார். விருது வழங்கும் நிகழ்வு ஒக்கேடாபர் 31ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சாரணிய வழிகாட்டிகள் இணைப்பாளர் திருமதி தர்மகுலசிங்கத்தின் வழிநடத்தலில் யாழினி போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்.

ஒன்பது மாகாணங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த ஒன்பது பெண் சாரணியர்கள் இந்த விருதுக்காக போட்டியிட்டபோதும், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த யாழினிக்கு இந்த விருது கிடைத்தமை யாழினிக்கு மட்டுமல்ல வடக்கிற்கே பெருமை.

## என்னுள் பல மாற்றங்கள்

சாரணியர் இயக்கத்தில் இணைந்த பின்னர், தன்னம்பிக்கை, தைரியம், அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் மனப்பாங்கு, பொறுமை என தன்னில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார் யாழினி.

## என்ஜினியர் ஆகும் கனவு கலைகிறது

தரம் ஐந்து வரை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கற்ற இவர், தரம் ஆறு தொடக்கம் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்துள்ளார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததுடன், க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேற்றை (6ஏ, பி, 2சி) பெற்று, உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கற்று 2015 ஒக்ஸ்ட் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றியுள்ளார்.

நிச்சயம் சிறந்த பெறுபேற்றைப் பெறுவேன் என நம்பிக்கையோடு கூறும் யாழினி, எதிர்காலத்தில் பொறியியலாளராக வரவேண்டும் என்ற தன்னுடைய கனவை கலைக்கவுள்ளதாக வருத்தத்தோடு கூறினார். “என்ஜினியர் ஆகவேண்டும் என்டது என்னுடைய கனவு, இலட்சியம். ஏன் என்ர அம்மா, அப்பாக்கும் அதுதான் விருப்பம். ஆனால், அந்தளவுக்கு பொருளாதார வசதி இல்லை. என்ர பெற்றோர் கஸ்ரப்பட்டு என்னை இவ்வளவு தூரம் படிக்க வைச்சு ஆளாக்கினதே போதும், இனி நான் உழைச்சு அவங்கள பார்க்கணும்” என சிரிப்போடு யாழினி சொன்னாலும்;, அவரின் கண்கள் சற்று கலங்கியதை அவதானித்தேன்.

பல்கலைக்கழகப் படிப்பை முடிக்க ஏராளம் செலவுகள் ஆகும் எனவும், அவ்வாறு செலவழிக்க தன் பெற்றோரிடம் பணம் இல்லை எனவும் கவலை வெளியிட்ட அவர், அம்மா, அப்பாவை கஸ்ரப்படுத்தக் கூடாது என்றுதான் படிப்பை பாதியில் நிறுத்த முடிவு செய்துள்ளேன். உதவிகள் கிடைக்குமாயின் நிச்சயம் என்ஜினியர் ஆகுவேன் என்றும் குறிப்பிட்டார்.

## அம்மா, அப்பாதான் கடவுள்!

தரம் ஆறு தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை ஆங்கில மொழியிலேயே பாடங்களை கற்ற யாழினியின் படிப்புக்கான செலவுகள் கணக்கிட முடியாதவை. ஆனால், அனைத்துச் செலவுகளையும் அடுத்தவர்களிடம் கையேந்தாமல் இவரது பெற்றோரே செய்துள்ளனர்.

“இங்கிலீஸ் மீடியத்தில படிப்பிக்கிற ரியூசன்ஸ் எங்காவது ஒன்று தான் இருக்கும். அதுவும் வீட்டில் இருந்து றொம்ப தூரம். அங்க போய் படிக்கிறதென்டா நிறைய காசு வேணும். நான் பல தடவை வீட்ட சொன்னன் தமிழ் மிடியத்தில படிக்கிறன் என்டு. ஆனா, என்ர அம்மா ‘இல்லை எதை பற்றியும் யோசிக்காம நீ படி நான் இருக்கிறன்’ என்டு ஆறுதல் சொல்லி, தைரியம் தந்து, ரியூசனுக்கு ஏத்தி இறக்குவா. ரீயூசன் முடியும் மட்டும் வாசலில காவல் இருப்பா. என்ர மற்றும் தம்பி, தங்கச்சீட படிப்புக்காக அம்மா தன்ர நகைகளை கூட வித்திட்டா. பரீட்சை நேரத்தில் நான் படிக்க என்னோட சேர்ந்து அம்மாவும் தூங்காம இருப்பா. சோர்ந்துபோன பலசந்தர்ப்பங்களில தன்னம்பிக்கை தந்து தூக்கிவிட்டவா. இப்பவும் எனக்கு எல்லாமே அம்மா தான். அவா இல்லை என்டா நான் என்ர குடும்பமே இல்லை”. என அம்மாவை பற்றி பெருமையுடன் கூறிய யாழினி, நிச்சயம் நல்ல வேலைக்கு போய் அம்மா, அப்பாவை கடைசிவரை நன்றாகப் பார்ப்பேன் என்றார்.

## சகலகலா வல்லி

கல்வியில் மட்டுமல்ல, பேச்சு, பாவோதல், திருக்குறள், நடனம், சங்கீதம், நாடகப் போட்டிகளில் பங்குபற்றி கோட்டம், வலயம், மாவட்டம், மாகாண ரீதியிலும் வெற்றி பெற்றுள்ளதுடன், சிலபோட்டிகளுக்காக தங்கப் பதக்கங்களும் பெற்றுள்ளார். அதுமட்டுமல்ல எங்கு என்ன போட்டி நடந்தாலும் யாழினியை அதில் பங்குபற்ற வைத்துவிடுவாராம் அவரது அம்மா.

## வறுமையில் செம்மை

ஒரு சிறிய விறாந்தை, இரண்டு அறைகள் கொண்ட வீடு, பாசமான அப்பா ராஜேந்திரன் மட்பாண்டத் தொழில்செய்கிறார். தன்னம்பிக்கை மிக்க அம்மா லலிதாம்பிகை. தம்பி, தங்கை இருவருமே படிக்கிறார்கள். இதுதான் யாழினியின் அழகான குடும்பம்.

பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் இருந்தாலும். அதன் தாக்கத்தை பிள்ளைகள் மீது செலுத்தாமல் அவர்களுக்கு தேவையான அனைத்தையும்செய்து கொடுத்து வசதியான பிள்ளைகளைப் போல வாழ வைக்கின்றனர் யாழினியின் பெற்றோர். வீட்டில் வறுமை ஆட்சி செய்தாலும் இவர்களின் முகத்தில் புன்னகை மலர்ந்திருக்கிறது. வீட்டிற்கு வருபவர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், பாடசாலைகளில் தங்கள் வறுமையை இவர்கள் காட்டிக்கொள்ளாமல் வாழ்கின்றமை நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவை.

யாராலும் திருட முடியாத சொத்தான கல்வியை முழுமையாக பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என யாழினியின் பெற்றோர் ஆசைப்பட்டாலும் அதற்கு தடையாக வறுமை வந்து நிற்கிறது.

போறியியலாளராக வர வேண்டும் என்ற யாழினியின் கனவுக்கு வறுமை தடையாக அமைந்துவிடக் கூடாது. நிச்சயம் அவரது கனவு நனவாக வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.









> பரீட்சை நேரத்தில் நான் படிக்க என்னோட சேர்ந்து அம்மாவும் தூங்காம இருப்பா. சோர்ந்துபோன பல சந்தர்ப்பங்களில தன்னம்பிக்கை தந்து தூக்கிவிட்டவா. எனக்கு எல்லாமே அம்மா தான். அவா இல்லை என்டா என்ர குடும்பமே இல்லை”

## 1-ம் பக்க தொடர்ச்சி



வாள்வெட்டு, ரௌடித்தனம் இரத்தமும் சதையுமான மிரட்டல் அபாயமென்றால், சத்தமில்லாத இன்னொரு அபாயமும் நமது சமூகத்தை அச்சுறுத்தும் அளவிற்கு வளர்ந்து செல்கிறது. ஆம். முறையற்ற கர்ப்பங்களும், சட்டவிரோத கருக்கலைப்புக்களுமே அவை. அதிகம் பேசப்படாத போதும், அதிக ஆபத்தாக சமூகத்தால் உணரப்படாதபோதும், நமது வாழ்வியல் நெறிகளை அரித்துப் போடும் அபாயக்கிருமியாக வளர்ந்து சென்று கொண்டிருக்கும் பிரச்சனையிது. முறையற்ற கர்ப்பங்கள் என நாம் குறிப்பிடுவது, திருமணத்திற்கு முன்னதான காதலர்கள், திருமணத்திற்கு அப்பாலான, துஷ்பிரயோகங்களால் ஏற்படுத்தப்படும், பராயம் வராத வயதினர் என்ற பல்வேறு வகையானதையுமே.

> **மருத்துவத்துறை வட்டாரங்கள் மாணவிகளின் முறையற்ற தொடர்புகள் பற்றி கவலையுடன் பதிவுசெய்கிறார்கள். மாணவிகளின் கர்ப்ப விகிதம் கவலையளிக்கும் அளவில் உள்ளதாக கூறுகிறார்கள்.**

வடக்கில் முறையற்ற கர்ப்பங்களின் அளவு அபாயகட்டத்தை எட்டியுள்ளதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டமொன்றில் சுகாதார வைத்திய அதிகாரி நந்தகோபன் ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டிருந்தார். அதாவது தெல்லிப்பழை பிரதேசத்தில் மட்டும் அண்மையில் முறையற்ற கர்ப்பங்கள் 30 பதிவாகியுள்ளது. இதில் அதிர்ச்சியிலும் அதிர்ச்சியளிப்பது அவற்றில் பலவற்றின் சூத்திரதாரியாக ஒரேயொரு ஆசாமிதான் உள்ளான்.

இவற்றில் பல திருமணமாகாத யுவதிகளினதும். காதல், வன்முறைகளினால் அவர்கள் இந்தநிலைக்கு ஆளாகியுள்ளனர். இதில் துயரம் என்னவென்றால், சிலர் பாடசாலை செல்லும் வயதுக்காரர்கள் என்கிறார்கள்.

இது குடாநாடு முழுவதும் கடந்த சில வருடங்களாகவே ஏற்பட்டுள்ள அபாய போக்கு. பள்ளிச்சிறுமிகள் 'பெரிய மனுசிகள்' ஆவதெல்லாம் சகஜமாகிவிட்டதாக கூறுகிறது மருத்துவதுறை.

14, 15 வயதில் நினைவிலிருந்து விளையாட்டு பொம்மைகளே அழியாத சிறுமிகள், வயிற்றில் இன்னொரு குழந்தையையும் சுமப்பதென்பது எவ்வளவு பெரிய கொடுமை? ஆனால் அது நமது சமூகத்தில் நடக்கிறது.

அண்மையில் கூட யாழ். நீதிமன்றத்தில்ஒருயுவதிக்குநீதிவழங்கப்பட்டுள்ளது. தொழில் நிமித்தம் யாழ் வந்த மலையக ஆசாமியொருவர் திருமணம் செய்வதாக வாக்களித்து, ஏற்கனவே திருமணம் முடித்து மூன்றுபிள்ளைகளின் தந்தையான ஆசாமி யுவதியை காதலித்துள்ளார். திருமணம் செய்வதாக வாக்களித்து, நெருக்கமாக இருந்துள்ளார். யுவதி கர்ப்பமாகி, பிள்ளை பெற்றெடுத்தபோது, அதற்கு தான் காரணமில்லையென்று அழிச்சாட்டியம் செய்துள்ளார். விடயம் நீதிமன்றத்திற்கு சென்றது. மரபணு பரிசோதனையில் மாட்டிக்கொண்டார். குழந்தையின் பிறப்பத்தாட்சி பத்திரத்தில் கையெழுத்திட்டதுடன், தாபரிப்பு பணமும் வழங்க பணிக்கப்பட்டார்.

இது ஒரு துணிச்சலான உதாரணம். பலபெண்கள் தமக்கிழைக்கப்படும் அநீதிகளிற்கு எதிராக நீதிமன்றம் வருவதில்லை. இந்த விடயங்கள் எல்லாம், வீடுகளிற்குள் பொத்திவைக்கப்பட வேண்டியவை என கருதி, காலம் முழுதும் கண்ணீரில் மிதக்கிறார்கள்.

வடக்கிற்கு வெளியில் இருந்து தொழில்நிமித்தம் வருபவர்கள் பலர், தொழில்முடிந்து போகும் வரை பொழுதுபோக்காக காதல், கல்யாணம் செய்கிறார்கள். இந்த வகையானவர்களிடம் பாடசாலை செல்லும், செல்வதை நிறுத்திய 16, 19 வயதான யுவதிகள்தான் சிக்கிக் கொள்கிறார்கள். இதில் அதிர்ச்சியளிக்கும் விடயமென்றால், பலருக்கு காதலன் பற்றிய உண்மையான தகவல்களே தெரிவதில்லை. விடயம் விவகாரமாகி பொலிஸ் நிலையம் செல்லும் சமயங்களில்த்தான், அவர்களிற்கு போலி விபரங்கள் சொல்லப்பட்ட விடயம் வெளிச்சத்திற்கு வருகிறது.

பெண்களை ஏமாற்றிவிட்டு வடக்கைவிட்டு அவர்கள் வெளியேறிவிடுவதால், பல சமயங்களில் குற்றவாளிகள் யார் என்பதே தெரிவதில்லை.

அதேபோல, பாடசாலை மாணவிகளை உள்ளடக்கிய இளம்யுவதிகள் இந்த விபரீதத்தில் சிக்கிக்கொள்ளும் போக்கும் கவலையளிப்பதாக உள்ளது.

மருத்துவத்துறை வட்டாரங்கள் மாணவிகளின் முறையற்ற தொடர்புகள் பற்றி கவலையுடன் பதிவுசெய்கிறார்கள். பாடசாலை, உயர்கல்வி நிறுவன மாணவிகளின் கர்ப்ப விகிதம் கவலையளிக்கும் அளவில் உள்ளதாக கூறுகிறார்கள்.

தூர இடங்களில் இருந்து யாழ்நகரத்திற்கு கல்வி, வேலை வாய்ப்பு நோக்கங்களுடன் வரும் யுவதிகளே அதிகம் பலியாகிறார்கள். குறிப்பாக கிராமப்புறங்களிலிருந்து வருபவர்கள் நகரத்தில் விரைவாக பலியாகிவிடுகிறார்கள். இவர்களை 'கவர்ந்து' செல்வதற்கென்றே வாலிபராஜாக்கள் விதவிதமான கோலங்களில் நகரத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களிற்கு வாய்ப்பான பல இடங்கள் நகரத்தின் பல பாகங்களிலும் உள்ளன. யாழ்ப்பாணத்தில் பல விடுதிகளில் இளம் ஜோடிகள் எந்தவித சிரமமுமின்றி தங்கிச் செல்வதாக கூறுகிறார்கள். அண்மைய காலங்களில் இப்படியான பல சம்பவங்கள் அம்பலத்திற்கும் வந்திருந்தன. பொலிசாரும், சமூக ஆர்வலர்களும் நடத்திய 'ரெய்ட்'இல் பாடசாலை மாணவிகள் சிக்கிய சம்பவங்கள் கூட பதிவுசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இவற்றில் பல சம்பவங்கள் மாணவிகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, மௌனமாக்கப் பட்டுமுள்ளன.

தனியார் கல்வி நிறுவனங்களிற்கு வரும் மாணவிகள், யாழ்ப்பாண நகரத்திலுள்ள சில பூங்காக்கள், விடுதிகளில் இளைஞர்களுடன் இருந்த புகைப்படங்கள் மிக அண்மையிலும் இணையங்களில் வெளியாகியிருந்தது. இவையெல்லாம் பதச்சோறுகள்தான் என்கிறார்கள். பானைநிறைந்திருக்கும் சோற்றை ஊடகங்களும் இப்பொழுது மூடிமறைக்கின்றன என்கிறார்கள். அதையெல்லாம் சொன்னால், யாழ் சமூகத்திற்கு கௌரவக்குறைச்சல் ஏற்பட்டு விடுமாம்.


அண்மையில் யாழில் 14 வயதான சிறுமியொருவர் காணாமல் போயிருக்கிறார். பெற்றோரும் பதறிப்போய் பல இடங்களிலும் தேடியிருக்கிறார்கள். பலனில்லை. சில வாரங்களின் பின்னர் சிறுமி திரும்பி வந்திருக்கிறார். கர்ப்பிணியாக. சென்ற இடத்தில் யாரோ அறிமுகமானார்களாம்.

சிலகாலத்தின் முன்னர்வரை யாழில் உள்ள பல விடுதிகளின் உரிமையாளர்கள் விபசாரத்தை மறைமுகமாக ஊக்குவித்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். விடுதிகளை இளம்ஜோடிகளிற்கு வாடகைக்கு விடுவதால் அதிக வருவாய் கிடைப்பதால், குடாநாட்டின் பல விடுதிகள் மறைமுகமாக அப்படி நடந்தன. எனினும், பொலிஸ்தரப்பினால் கறாரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் விடுதிகள் பல சிக்கிக்கொண்டன.

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் விடுதிகளில் தங்குவதில் எந்த சிக்கலுமில்லையென்று சட்டம் சொல்கிறது. இதனால் இன்றும் எந்த சிக்கலுமில்லாமல் விடுதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி யாழில் உள்ளது. இந்த வாய்ப்பு கலாசாரத்திற்கு பெரிய சவாலாக உள்ளது.

கட்டற்ற இணைய பாவனை, தொலைபேசி வசதிகள், ததனிமையான தூரப்பயணங்கள் போன்ற காரணங்கள் இளவயது யுவதிகளை இலகுவில் திசைமாற வைக்கிறது. இது பெரிய சமூகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இதனை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தும் பெரிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் உரியது. பிள்ளைகளை வேலைக்கோ, படிக்கவோ அனுப்பிவிட்டு கடமை முடிந்ததென இருக்காமல் அவர்களை கண்காணித்து, முறையான வழிப்படுத்தல் செய்வது அவசியம்.



ரஜிந்தன்
rajinthan2011@gmail.com

# ஒரேயொரு ஊரில் ஒரேயொரு ராசா



கி.மு 2ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வெறிச்சோடிய கிராமமொன்றை முதியவரொருவர் தன்னந்தனியாக காத்து வருகிறார் என்றால் நம்புவீர்களா?

நம்பித்தான் ஆக வேண்டும். கவனிப்பாரற்று, வசதிகளும் குறைந்து மெதுமெதுவாக ஆட்களை இழந்து கொண்டிருந்த கிராமத்தை, யுத்த சுனாமியும் புரட்டிப்போட, கிராமம் பேய்புகுந்த வீடானது. அடர்ந்த கானகத்திற்கு மையத்திலுள்ள கிராமம். ஆனால் இன்றும் ஒரேயொரு முதியவர் தன்னந்தனியாக கிராமத்திற்கு காவல் இருக்கிறார். ஏராளம் வரலாற்று தடயங்களுடன் இருக்கும் இந்தக் கிராமம் அழிந்து விடக்கூடாதென்பதே அவரது நோக்கம்.

சுருக்கமாக சொன்னால், தமிழர்களின் வரலாற்று கிராமமொன்று தன் கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருக்கிறது.

இது எங்கு இருக்கிறதென யோசிக்கிறீர்களா?... உங்கள் எல்லோருக்கும் தெரிந்த பூநகரியில்த்தான் இந்த கிராமம் உள்ளது. பொன்னாவெளியென்பது கிராமத்தின் பெயர். பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் உள்ள பல்லவராயன் கட்டு சந்திக்கு மேற்குப்பக்கமாக 12 கிலோமீற்றர்கள் தொலைவில் அமைந்துள்ள கிராமம் இது.

அடர்ந்த காட்டை ஒட்டியதாக கிராமம் உள்ளது. அந்த கிராமத்தில் ஒரேயொரு முதியவர் மட்டும் வாழ்ந்து வருகிறார் என்ற தகவல் கிடைத்ததும், ஆச்சரியங்களுடனும், கமராவுடனும் உடனே புறப்பட்டோம்.

முன்னர் ஒருகாலத்தில் செழிப்புடன் இருந்துள்ளது. இப்பொழுது மனிதர்களே இல்லாமல் காட்டு விலங்குகளின் ராஜ்யமாகிவிட்டது. கிராமம் முன்னர் ஜீவனுடன் இருந்தது என்பதற்கான தடயங்கள் தான் எஞ்சியுள்ளன. மற்றும்படி எங்கும் மரங்கள்... மரங்கள்.. விலங்குகள், பறவைகள்.. ஒரேயொரு மனிதர். இதுதான் கிராமத்தின் தற்போதைய நிலை.

அடர்ந்த கானகத்திற்கருகில், சிறிய கானகமாக உருமாறி வரும் கிராமத்தில் வசித்து வருகிறார் 64 வயதான செல்லையா இராசநாயகம். கிராமத்தின் வீதிகள் கூட இன்னும் கொஞ்சநாளில் மறைந்துவிடும் போலிருந்தது. அங்கு போகும்போது 'நஷனல் யோக்கிரபி' சனல் பார்க்கும் உணர்வே ஏற்பட்டது. காட்டுயானைகள் தாராளமாக நடமாடும் தடயங்கள் போகுமிடமெல்லாம் காணக் கிடைத்தது. அந்தப்பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் உள்ளதாக, ஆரம்பத்திலேயே அதிகாரிகள் எச்சரிக்கைவேறு செய்திருந்தார்கள்.

காடுபற்றியுள்ள இடமொன்றில் உள்ள சிறிய கொட்டிலில் வசித்து வருகிறார் இராசநாயகம். நாங்கள் போனபோது மனிதர்களை கண்ட பரவசம் அவர் விழிகளில். மனிதர்களால் கைவிடப்பட்ட கிராமத்திற்கு தன்னைத்தேடி யாரும் வருவார்கள் என்பதையே அவரால் அதுவரை கற்பனை செய்திருக்க முடியவில்லை. பரவசமென்றால், அப்படியொரு பரவசம். அதை உங்களிற்கு சொல்ல நமது கமராவிற்கோ, பேனாவிற்கோ வலிமை கிடையாது.

தற்போது கிராமத்திற்கு அவர்தான் ராஜா. அவர்தான் குடிமகன். எல்லாமும் அவர்தான். எல்லோரும் கைவிட்ட கிராமத்தில் எதற்காக இன்னும் தங்கியிருக்கிறீர்கள் என அந்த பெரியவரிடம் கேட்டோம். பேசத் தொடங்கினார்.


'இதொரு வரலாற்று பூமி தம்பி. கிறிஸ்துவுக்கு முன்னர் 2ம் நூற்றாண்டிலேயே பொன்னாவெளியென்ற எங்கள் கிராமத்து பெயர் வழக்கிலிருந்துள்ளது. இந்த கிராமத்தையும், சுற்றயலையும் வரலாற்று பிரதேசமாக பிரகடனப்படுத்தி ஆய்வு செய்தால், எங்கட வரலாற்று ஆவணங்கள் நிறையக் கிடைக்கும். ஆனால் இப்ப கிராமம் பாழடைஞ்சிட்டுது. எல்லாரும்விட்டிட்டுபோயிற்றினம். கிராமத்தை கைவிட ஏலாது தம்பி. இந்தப்பூமிதான் எங்கட முதலாவது தாய். தாயை எப்பிடி தவிக்கவிட்டிட்டு போகலாம்' என்றார் கலங்கிய கண்களுடன்.

பெரியவர் தனிமை வாழ்க்கைக்கு கடந்த சில வருடங்களாகவே பழகிவிட்டார். எல்லாம் அவர்தான். கிட்டத்தட்ட ஆதி வாழ்க்கை. அவர் வேளாண்மை செய்கிறார். வீட்டுடன் சிறிய மரக்கறி தோட்டமும் செய்கிறார். வேளாண்மை விளைச்சலே அவருக்குத் தேவையான அரிசியை கொடுக்கிறது. காய்கறி தோட்டத்தில் விளைகிறது. நிறைவான வாழ்க்கை. அவர் அசைவம் சாப்பிடுவதில்லை.

**இந்தப்பூமிதான் எங்கட முதலாவது தாய். இயற்கை எங்களுக்கு அழித்த கொடை இந்தக் கிராமம். யுத்தத்தால் அனைத்தும் அழிந்துபோயுள்ளன. காயம்பட்ட தாயை விட்டுச் செல்ல முடியாமல் வாழ்கிறேன்.**

அவரிடமும் நல்ல கறவை மாடுகள் நிற்கின்றன. தினமும் பாலுடன் அயல்கிராமங்களிற்கு செல்கிறார். பால் விற்றுவிட்டு வரும்போது, முடிவெட்டுவது போன்ற அவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்.

பொன்னாவெளி கிராமம் நீண்டகாலமாக செழிப்பாகத்தான் இருந்தது. 2006 ஆம் ஆண்டுவரை மனிதர்கள் நிறைந்திருக்கிறார்கள். கிராஞ்சிக்குடா குளம், செக்கட்டிக் குளம், ஈச்சினாவெளி குளம் என கிராமத்தைச் சுற்றி மூன்று குளங்கள். குளத்தை நம்பிய வயல் வெளிகள். இவற்றை நம்பி சுமார் 15 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அனைவரும் விவசாயிகள். அவர்களிடம் பெரியபெரிய, ஆடு, மாடு பட்டிகள். இப்படி கிராமம் பூத்துக்குலுங்கிய காலம் இன்று பெரியவரின் நினைவில் மட்டுமே தங்கியிருக்கிறது.



கிராமத்திற்கு பெரிய சவாலாக இருந்தது போக்குவரத்து. மன்னார் பூநகரி வீதியாகட்டும், அதிலிருந்து கிளைத்து செல்லும் வீதிகளாகட்டும் எதுவே பலபத்தாண்டுகளாக புனரமைக்கப்படாமலிருந்தது. குறிப்பாக கிளைவீதிகள் எல்லாமே மணல் அல்லது கிறவல் வீதிகள்தான். என்றாலும், போக்குவரத்து பிரச்சனையை சகித்தபடி மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

2006 இல் யுத்தம் கிராமத்தை வேரோடு பிடுங்கியெறிந்தது. மனிதர்கள் எல்லோரும் திசைக்கொருவராக சிதறியோடினார்கள். 5 வருடங்களின் பின்னர் மீண்டும் சொந்த இடங்களிற்கு செல்லும் அனுமதி கிடைத்தது. அப்பொழுது திரும்பி வந்தது வெறும் 8 குடும்பங்கள்தான். போன இடத்தில் வாழப்பழகிக் கொண்டவர்கள் திரும்பிவரவில்லை. வந்தவர்களும், வாழ்ந்த இடத்தின் வசதிகளை நினைத்தோ என்னவோ விரைவிலேயே கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டனர். எல்லோரும் வெளியேறிவிட்டபோதும், பெரியவர் இராசநாயகம் மட்டும் கிராமத்தில் வாழ்கிறார். அவர் திருமணம் செய்து கொள்ளாதவர். பொன்னாவெளி கிராமத்தாயே துணையாக வாழ்ந்து வருகிறார்.

கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பார்கள். பொன்னா







வெளி கிராமத்தில் மட்டும் பழைமையான மூன்று கோவில்கள் உள்ளன. சிவன் கோவில், கண்னகை அம்மன் கோயில், பிள்ளயார் கோயில் என்பனவே அவை. கண்னகை அம்மன் கோயிலில் தற்போதும் பூசை தினமும் நடை பெறுகிறது. ஊர் ஓரமாக உள்ள அந்த ஆலயத்திற்கு ஒரு ஐயர் வந்து பூசை செய்துவிட்டு செல்கிறார். ஊர்ஓரம்வரை வரும் ஐயரின் வாடைதான் அந்த ஊரில்வீசும் இரண்டாவது மனிதவாடை. சிவன் கோயில் மற்றும் பிள்ளயார் கோயில் பூசை இன்றி அழிந்த நிலையில் காணப்படுகின்றன.



சைவப் பெரியார் ஆறுமுக நாவலரால் அடிக்கல் நாட்டப்பட்ட சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கட்டட இடிபாடுகள் கூட இன்னும் அங்குள்ளன.

யார் இருந்தாலும் இல்லா விட்டாலும் என்ன நடந்தாலும் இந்தக் கிராமத்தைவிட்டு வேறு இடத்துக்கு போகவே மாட்டேன் என்ற உறுதியுடன் தனிமையிலேயே வாழ்கிறார் பெரியவர். ‘இயற்கை எங்களுக்கு அழித்த கொடை இந்தக் கிராமம். ஆனால் இன்று யுத்தத்தால் அனைத்தும் அழிந்துபோயுள்ளன. காயம்பட்ட தாயை விட்டுச் செல்ல முடியாமல் வாழ்கிறேன். நானும் விட்டிட்டு போனால் பொன்விளையும் பொன்னாவெளிக்கு யார் துணை?’ என திருப்பிக் கேட்கிறார்.

பருவமழை ஆரம்பித்துள்ளதால் கிராமத்தில் இனி சிறிய நடமாட்டம் தெரியுமென்கிறார். வயல் விதைப்பவர்களும், தோட்டம் செய்பவர்களும் வரத் தொடங்குவார்கள். வருபவர்கள் எல்லோரும் என்னிடம் வருவார்கள் என்கிறார் புன்னகையுடன்.

வேளாண்மை ஆரம்பித்தால் காட்டு விலங்குகளின் நடமாட்டமும் அதிகரிக்கும். யானை, மான், பன்றி, பாம்பு போன்றன தாராளமாக உலாவும். அவற்றை குறிவைத்து கொடிய மாமிச விலங்குகளும் வரும் என்றார். அவற்றால் ஆபத்தில்லையா என கேட்டால் பெரிதாக சிரிக்கிறார். ‘என்ர குழந்தையள்’ என்றார்.

கைவிடப்பட்ட கிராமத்தின் ராசாவை அரசாங்கமும் கைவிட்டு விட்டதென்ற புகார் அவரிட முள்ளது. தனக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லையென்கிறார். அத்துடன் சமுர்த்தி உதவித் திட்டமோ, வீட்டுத்திட்டமோ வழங் கப்படவில்லையென்றும் குறை பட்டு கொண்டார். என்றாலும், அரசாங்கத்திடம் வீடொன்றை எதிர்பார்க்கும் நிலையிலில்லை அவர். இருக்கும் கொட்டில் வீடே திருப்தியான உறைவிடம் என்றுதான் வாழ்கிறார்.

‘முன்பெல்லாம் ஊரில் இருக்கும் போது அதிக வேலைகள். என்னைத் தேடி பலர் வந்தார்கள். இன்று தொழில் எல்லாம் கட்டையா போச்சு. அநாதரவாக வேலைகள் இன்றி வறுமையாக உள்ளது. எனக்கும் இப்ப முன்னப் போல உடம்பு நல்லதாகவும் இல்லை.

இந்த கிராமத்தை விட்டு வேற இடங்களில் குடியமர்ந்தவர்களில் யாரும் இனி இங்கு வந்து இருக்கப் போவதில்லை. நானும் தனியாள். எனக்கு பிறகு இந்த கிராமத்திற்கு சொந்தம் என்று சொல்ல யாரும் இருக்கமாட்டார்கள். ‘என்னுடன் இந்த கிராமம் அழிந்து போகும்’ என்று சொல்லி கண்கலங்கினார்.

சக்கரவர்த்திகளின் இறப்புடன், சாம்ராஜ்யங்கள் அழிந்த வரலாறு களை படித்திருக்கிறோம். ஆனால், ஒரு மனிதனின் இறப்புடன் ஒரு வரலாற்றுக் கிராமமே அழியப் போகும் துயரத்தை நேரில் கண்டோம்.




# அரசியல் கிசுகிசு

■ ‘வீட்டுக்காரர்’ போன வாரம் ஒரு யாழ்ப்பாண ட்ரிப் வந்திருந்தார். ‘அமிர்தலிங்கத்தின் இடத்தை பிடித்த ஆள் வரும்போது தடல்புடலான வரவேற்பு இருந்திருக்க வேண்டாமா?. ஆஊ என்றாலே ஆலாய்ப்பறக்கும் கட்சிக்காரர்கள் ஏதாவது செய்வார்கள் என்று பார்த்தால்ஞ் எதுவுமே நடக்கவில்லை. பொலிஸ்காரரின் வாகனம் மட்டும்தான் தலைவரின் வாகனத்துடன் போனது. என்னாச்சு வீட்டுக்காரர்களிற்கு என்று கதவைத்திறந்து பார்த்தால், ஜெனீவாப்பக்கம் வில்லங்கப்பட்டுக் கொண்டு நிற்க தலைவரோட போஸ்கொடுத்தால் லோக்கலில் விமர்சனம் வருமென்றுதானாம் பலர் ஒதுங்கினார்கள். மழையில் நனைந்து காய்ச்சல், அப்பம்மா மோசம போயிற்றா என்ற மாதிரி ஒவ்வொரு காரணத்தையும் கட்சிக்கு சொன்னார்களாம். இந்த வில்லங்கம் போதாதென்று, வந்த தலைவரும் உருப்படியாக ஒன்றும் செய்யாமல் சாமி தரிசனம் செய்துவிட்டு சென்றதும் இப்பொழுது சலசலக்கிறது.

■ போன தேர்தலில் சைக்கிள் ஏன் பஞ்சரானது என கட்சி கடந்த பலவாரமாக மண்டையைப் போட்டு உடைத்து ஒரு வழிகண்டு பிடித்துள்ளது. லோக்கல் எலக்சனை கண்டும்காணாமல் இருந்து, அண்ணன் பாராளுமன்றத்துக்கு செல்ல மட்டும்தான் சைக்கிள் ஓடுவேன் என அடம்பிடித்தால் ஒன்றுக்கும் ஆகாதென கட்சிக்காரர்கள் சொல்வதிலுள்ள நியாயம் அண்ணனிற்கும் புரிந்துள்ளதாம். புரிந்தால் பிறகென்ன உள்ளூராட்சி தேர்தலில் குதிக்க வேண்டியதுதானே என்கிறீர்களா?... அதுதான் இல்லை. லொஜிக் இடிக்கிறதென அண்ணன் யோசிக்கிறாராம். இதுவரை கோட்பாட்டு, கொளுக்கட்டை விளக்கம் கொடுத்து புறக்கணித்துவிட்டு, இனிப் போட்டியிட்டால் சனம் என்ன சொல்லுமென அண்ணன் யோசிக்கிறாராம். ‘சும்மா போங்கண்ணாஞ்உள்ளூராட்சி தேர்தலில போட்டியிட்டால் இலங்கை ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளவதாகிவிடும் என்று சொல்லிக்கொண்டு பாராளுமன்றத்தில் போட்டியிட்டனாங்கள்தானே’ என கட்சிக்காரர்கள் தெம்பூட்சிக் கொண்டிருக்கிறார்களாம்.

■ வீணைக்காரரின் நிலைதான் சிக்கலில் உள்ளது. இதுவரை அமைச்சராக இருந்து பழக்கப்பட்டுவிட்டார். இதனால் கட்சிக்குள் சிக்கலிருக்கவில்லை. நிதி வரத்தெல்லாம் சுமுகமாக சென்றது. மணல் வியாபாரமும் நன்றாக நடந்தது. இப்பொழுது எல்லாம் போய்விட்டது. இப்பொழுது கட்சியை நம்பியிருப்பவர்களை எப்படி கரைசேர்ப்பதென தெரியாமல் திண்டாடுகிறார்களாம். கட்சிக்காக உயிரையும் கொடுத்த பலரது குடும்பங்களை கட்சியே பராமரித்துவரும் நிலையில், எல்லா செலவுகளையும் ஈடுபட்ட முடியாதென யாழில் வெளியிட்டு வந்த அவர்களின் தினப்பத்திரிகையையும் இழுத்து மூடிவிட்டார்கள்.




■ வீட்டுக்காரர்கள் தனிவழியில் செல்வதென்ற முடிவிற்கு கிட்டத்தட்ட வந்துவிட்டதாக தெரிகிறது. நான்கு கட்சிகள் கூட்டமைப்பாக இருந்தாலும், வீட்டுக்காரர்களின் சின்னத்தில்த்தான் களமிறங்கினார்கள். கூட்டமைப்பென்ற பெயரிருந்தாலும், வீட்டுக்காரர்கள்தான் அதில் ஏகபோகம் செலுத்தினார்கள். அவர்கள் ‘சுழித்து’ ஓடிய போதெல்லாம் மற்றவர்கள் கேள்விகேட்க ஆரம்பித்துள்ளதால் இந்த முடிவாம். சர்வதேச விசாரணையில் அவர்கள் எடுத்த முடிவை மற்றவர்கள் பகிரங்கமாக விமர்சிக்க தொடங்கியுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது. ‘அவர்கள் மற்ற ஆட்கள்’ என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தி சனங்களை கட்டுக்குள் வைத்திருக்கலாமென திட்டமிட்டுள்ளார்களாம்.

■ வீணைத்தலைவர் இனி கொழும்பில் தங்கியிருப்பதில்லையென்ற முடிவிற்கு வந்துவிட்டாராம். கொழும்பில் முகாமிட்டு, பல கதவுகளையும் தட்டிப்பார்த்தார். பொறுங்கள்ஞ் காத்திருங்கள்ஞ் கவனிக்கிறோம் என்றுதான் பதில் சொன்னார்கள். பலனில்லை. கொழும்பில் காத்திருக்க, காத்திருக்க பலரும் போன் பண்ணி, ‘இன்னும் கிடைக்கலையா’ என கேட்கிறார்களாம். இது தலைவரை நன்றாக கிளறுகிறதாம். இனி கொழும்பே வேண்டாம் என்ற முடிவிற்கு வந்து விட்டாராம்.

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com



# பரீட்சைக்கு நீங்கள் தயாரா? வெற்றிக்கு சில வழிகள்

## க.பொ.த சாதாரணதர மாணவர்களிற்கு ஒரு வழிகாட்டல்

வருகின்ற டிசம்பர் மாதம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. மாணவர்கள் பாடசாலை, மாலை நேர வகுப்புக்கள், வீட்டில் தனிப்பட்ட வகுப்புக்கள் என எந்நேரமும் ஓய்வின்றி புத்தகமும் கையுமாகவே உள்ளனர். இவர்கள் எல்லோருடைய கனவும் ஒன்றுதான். எப்படியாவது பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்திற்கு சென்றுவிட வேண்டும்.

பரீட்சை நெருங்கிவிட்டதால் எப்படிப் படிப்பது? எதைப் படிப்பது? படித்ததை எப்படி ஞாபகம் வைத்திருப்பது? என எல்லோருக்கும் மனதுக்குள் ஆயிரம் குழப்பங்கள், பதற்றங்கள். பல வகுப்புக்களுக்கு ஓடி, ஓடி படிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும் என்றால் முதலில் பயத்தை தூக்கிப் போடுங்கள். பரீட்சை நெருங்கி விட்டதே என்ற பதற்றத்தில் பல வகுப்புக்களுக்கு ஓடித் திரிவதை நிறுத்துங்கள். இதனால், உடலும், மூளையும்தான் களைப்படையுமே தவிர நன்றாக பரீட்சை எழுத முடியாது. பரீட்சை ஆரம்பமாக இருக்கும் கொஞ்சக் காலத்தில் படித்து முடிக்க வேண்டியவற்றைப் படித்து, படித்தவற்றை துரிதமாக மீட்டல் செய்தாலே போதும் நிச்சயம் பரீட்சையில் உங்களுக்கு வெற்றிதான்.

### திட்டமிட்டுச் செயற்படுங்கள்!

எந்தவொரு வெற்றிக்கும் சரியான திட்டமிடல் அவசியம். எனவே, முதலில் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை திட்டமிடுங்கள்.

- யாருடைய தொந்தரவும் இல்லாத அமைதியான இடத்தை படிப்பதற்கு தேர்ந்தெடுங்கள்.
- நீங்கள் பலமாக இருக்கும் பாடங்கள், பகுதிகளையும், பலவீனமான பகுதிகளையும்ஒரு கொப்பியில் பட்டியல்படுத்தி, பலமான பகுதிகளை துரித மீட்டல் செய்தால்போதும். பலவீனமான பகுதிகளை சரியாக இனங்கண்டு. அவற்றின் மீது அதிக அக்கறை செலுத்துங்கள்.
- ஒரு நாளை அதிகாலை, முற்பகல், நண்பகல், மாலை, இரவு என பகுதி பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு நேரத்திலும் பொருத்தமான பாடத்தைப் படியுங்கள். அதிகாலையில் சற்றுச் சிரமமான பாட்களையும், மதியம், மாலை நேரங்களில் இலகுவான பாடங்களையும் தெரிவுசெய்து படித்தால் மூளை களைப்படையாமல் பார்த்துக்கொள்ளலாம்.
- எல்லாப் பாடங்களையும் படித்து முடிக்கவேண்டும் என்று பதற்றப்படாமல் முக்கியமான பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரக் கூடிய, இலகுவாக படித்து முடிக்கக்கூடியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேகமாகப் படியுங்கள்.
- அடிக்கடி புத்தகங்களை புரட்டிப்பார்க்காமல்கட்டாயம் நினைவில் வைத்திருக்க வேண்டிய சூத்திரங்கள், பதங்கள், அட்டவணைகள், வரைபடங்களை ஒரு தாளில் சுருக்கமாக உங்களுக்கு புரியக் கூடிய வகையில் குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். பரீட்சைக்கு செல்லும் முன் ஒரு தடவை பார்த்துக்கொள்ளலாம்.
- வெறுமனே படித்துவிட்டால் மட்டும் போதாது. பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு படிக்கும்போது ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களை மனதில் எழுப்பி அவற்றுக்கு விடையளிக்கும் விதத்தில் படியுங்கள்.
- தொடர்ந்து படிக்காமல் இடையிடையே ஓய்வெடுங்கள் அந்த நேரத்தில் இனிமையான பாடல் கேட்பது, சிறிய விளையாட்டுக்களை விளையாடுவதென மனதை இதமாகவும், மகிழ்சியாகவும் வைத்திருங்கள். இவை சுறுசுறுப்பாக மேலும் படிக்க உதவும்.
- தினமும் 6 மணி நேரமாவது தூங்குங்கள்.
- பல பாடங்ளை மீட்டிப் பார்க்கவேண்டிய நிலையில் தனியாக அன்றி நண்பர்களுடன் கூட்டாக இணைந்து மீட்டிப்பார்த்தால் ஒருவருக்கொருவர் தெரிந்தவற்றையும், தெரியாதவற்றையும் பகிர்ந்து கொள்ள முடியும்.



### பரீட்சை எழுதும்போது வனிக்க வேண்டியவை

பாடங்களை நன்றாக படித்தால் மட்டும் பரீட்சையில் சித்தியடைந்துவிட முடியாது, பரீட்சை எழும் முறையிலேயே வெற்றி தங்கியுள்ளது. நீங்கள் எவ்வளவு கற்றுள்ளீர்கள் என்பதைவிட பரீட்சைக்குத் தயாராக உள்ளீர்களா என்பது மிக முக்கியம். உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் அறிவு ரீதியாகவும் பரீட்சைக்குத் தயாராக இருப்பது பரீட்சையை வெற்றி கொள்ள உதவும்.

பரீட்சை பற்றிய பயம் நீங்கி "நான் பரீட்சையில் சித்தியடைவேன்" என்ற நம்பிக்கை உளரீதியாக உங்களிடத்தில் வரவேண்டும். உளரீதியாக இத்தகைய தயார்படுத்தல் நீங்கள் நம்பிக்கையுடன் பரீட்சையை எதிர்கொள்வதற்கான நம்பிக்கையைத் தரும். அதே நம்பிக்கையுடன் பரீட்சை எழுதும்போது பின்வரும் விடயங்களில் கவனத்தை செலுத்துங்கள்.

1. வினாத்தாள் உங்கள் கையில் கிடைத்ததும் முழுமையாக அதை ஒரு தடவை வாசியுங்கள். வினாத்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை கவனமாக படியுங்கள்.
2. வினாத் தெரிவு மிக முக்கியமானது. குழம்பாமல், நீங்கள் எந்தப் பகுதிகளில் கெட்டிக்காரரோ அவை தொடர்பான வினாக்களை சரியாகத் தெரிவு செய்யுங்கள்.
3. வினாத் தெரிவு முடிந்ததும் ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்க எவ்வளவு நேரம் பிடிக்கும் என்பதைக் கணித்துப் பாருங்கள். அந்தந்த நேரத்துக்குள் குறிப்பிட்ட வினாக்களுக்கு விடையளித்து முடியுங்கள். ஆரம்ப வினாக்களில் அதிகளவு நேரத்தைச் செலவிட்டுவிட்டு ஏனையவற்றுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறாமல், நேரத்தை இறுக்கமாகக் கடைபிடியுங்கள். ஒரு வினாவுக்கு குறித்த நேரத்துக்குள் விடையளிக்க முடித்துவிட்டு, கடைசியில் அந்த வினாவைக் கவனிக்கலாம்.
4. வினாத்தாளில் ஒவ்வொரு வினாக்கள், உப வினாக்களுக்குரிய புள்ளிகள் தரப்பட்டிருக்கும். அவற்றை உன்னிப்பாக அவதானித்து, அதிகளவு புள்ளிகளை ஈட்டக்கூடிய வினாக்களைத் தெரிவுசெய்யுங்கள்.
5. முழு வினாத்தாளிலும் மிகவும் இலகுவான, உங்களால் சுலபமாக பதிலளிக்கக் கூடிய வினாவுக்கு முதலில் விடையளியுங்கள். வினா எண் ஒழுங்கில் தான் பதிலளிக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை.வினா எண்ணைத்தெளிவாகக் குறிப்பிட்டால் சரி.
6. ஒரு வினாவுக்கு விடையளித்துக் கொண்டிருக்கும் போது, பிறிதொரு வினாவுக்கான முக்கிய விடயங்கள் ஏதும் ஞாபகத்திற்கு வந்தால் உடனே அதை ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு அதைப் பயன்படுத்திக் கொண்டு வேகமாக காரியத்தை முடித்துவிடலாம்.
7. ஒரு வினாவுக்கு விடையளிக்கும் முன் உங்களுக்கு நினைவில் வரும் விடயங்களை ஒன்றன் பின் ஒன்றாக ஒரு தாளில் குறித்துக் கொள்ளுங்கள். பின் இவற்றை என்ன ஒழுங்கில் எழுதப் போகிறீர்கள் என்று இலக்கமிட்டுக் கொண்டு, அந்த ஒழுங்கில் எழுத ஆரம்பியுங்கள். எழுத ஆரம்பித்த பின்னர் திடீரென நினைவுக்கு வருபவற்றையும் உடனுக்குடன் குறித்துக் கொள்ளுங்கள். இவ்வாறு செய்தால் உங்கள் விடைகள் ஒரு ஒழுங்கில், சீராக அமைந்து அதிகளவு புள்ளிகளைப் பெற்றுத்தரும்.
8. விடையளிக்க வேண்டிய எந்தவொரு வினாவுக்கும் விடையளிக்காமல் விடாதீர்கள். முடிந்தளவு அனைத்து வினாவுக்கும் விடையளியுங்கள். ஒரு வினாவுக்கு அதிகம் எழுதிவிட்டு, இன்னொரு வினாவுக்கு விடையளிக்காமல் விடுவதால் புள்ளிகள் விரயமாகிவிடும். கடினமான வினா என்றாலும், உங்களுக்கு முடிந்தளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள முயலுங்கள்.
9. பரீட்சை முடிவடைய இன்னும் 10 நிமிடங்களே உள்ளன. கடைசி வினாவுக்கு விடையளிக்க வேண்டும். இதற்கு 30 நிமிடங்கள் தேவை என்றால், பதற்றப் படாதீர்கள். அமைதியாக நாம் முன்னர் சொன்னது போல் முக்கியமான விடயங்களைக் குறிப்புக்களாகத் தயாரித்து வழங்குங்கள்.
10. ஒரு வினாவுக்கான விடை முழுமையாக தெரியாவிட்டாலும் முடிந்தளவு செய்யுங்கள். உதாரணமாக கணிதபாட வினாக்களுக்கு தீர்வுகளை முடிந்தளவு செய்ய முயன்றால், இறுதி விடை கிடைக்காவிட்டாலும் செயன்முறைப் படிகளுக்கான பள்ளிகளைப் பெற்று விடலாம்.
11. தெளிவான எழுத்து அவசியம். உருப்பாகவும், தெளிவாகவும், ஒழுங்காகவும் உங்கள் விடைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும். எழுத்துக்கள் விளங்காமல் ஒழுங்கின்றி இருந்தால், மதிப்பீடு செய்பவர் குழப்பமடைந்து புள்ளிகளை இழக்க வேண்டி ஏற்படும்.

**பரீட்சை முடிவடைய இன்னும் 10 நிமிடங்களே உள்ளன. கடைசி வினாவுக்கு விடையளிக்க 30 நிமிடங்கள் தேவை என்றால் பதற்றப் படாதீர்கள். முக்கியமான குறிப்புக்களாகத் தயாரித்து வழங்குங்கள்.**

என்ன எல்லோரும் பரீட்சைக்கு படிக்க தொடங்கிவிட்டீர்கள் தானே. நிச்சயம் வெற்றி கிடைக்கும். க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று உயர்தரத்தைதொடர வாழ்த்துக்கள்.





# தமிழ் மக்களின் சுயாட்சியை நோக்கிய பயணத்துக்கு


## மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன ?

வன்னியசிங்கம் ஜெயராஜா

இலங்கையில் வதியும் தமிழ் மக்களின் சுயாட்சி நாடி ஆரம்பத்தில் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களின் தலைமையில் இயங்கிய அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்னும் அரசியல் கட்சி ஒற்றையாட்சியின் கீழ் சம அந்தஸ்து எனும் எண்ணக்கருவை முன்வைத்து இக் கட்சியின் முக்கியஸ்தராக விளங்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள் அதிருப்தியடைந்து 1949 ஆம் ஆண்டு "இலங்கைத் தமிழரசுக் கட்சி" என்னும் புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்ததோடு இலங்கைத் தமிழ் மக்களின் சுயாட்சிக்குச் சமஷ்டி முறையிலான ஆட்சியே பொருத்தமான ஒன்றாக இருக்குமென வலியுறுத்திவந்தார்.

அந்த நாளில் வவுனியாத் தேர்தல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பி

நீங்கள் எழுதியவை...



னராக இருந்தவரும் "அடங்காத் தமிழர் முன்னணி" என்னும் அரசியல் அமைப்பின் தலைவராக விளங்கியவருமான சி.சுந்தரலிங்கம் அவர்கள் அக் கால கட்டத்திலேயே தமிழ் மக்களின் சுயாட்சிக்குத் "தனி நாடு" ஒன்று மட்டும் தான் தீர்வாக இருக்க முடியுமென மிகவும் ஆணித்தரமாக எடுத்தியம்பி இருந்தார். என்னும் அன்னாரின் அன்றைய அக் கோரிக்கை பின்னாளில் தமிழ் மக்களின் சீவனோபாயத்தோடு இணைந்ததாகவும் தமிழ் இளை யோரின் ஆத்ம அபிலாசைகளைப் பிரதிபலிக்கக்கூடியதாகவும் "பரியாமம்" பெற்ற போதுங்கூட அன்று அக் கோரிக்கை எவராலுமே கண்டுகொள்ளப்படவில்லை.

இவற்றை விடத் "தொழிலாளர் ஆட்சி" நாடிய தேசத்தின் இடதுசாரி அரசியல் கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் தமிழ் மக்களின் சுயாட்சிக்குச் சம அந்தஸ்தையும் நியாயமான உரிமைகளையும்; பரிந்துரைத்ததோடு அம் மக்களு டைய நிரந்தரமான அரசியல் விமோசனத்துக்குக்கம்யூனிய ஆட்சி முறைமையின் கீழான பிரதேச சுயாட்சி சரியானதும் நிரந்தர மானதுமான தீர்வாக இருக்க முடியுமென வலியுறுத்தி நின்றன.

எனினும் தமிழ்க் குறியீடுகளைக் கொண்ட அரசியல் கட்சிகளாக இருந்தாலும்சரிஇடதுசாரிஅரசியல் இயக்க ங்களாக இருந்தாலும் சரி தமிழ்மக்களின்சுயாட்சிதொடர்பில் கழுத்தறுப்பு வேலைகளை மேற்கொண்டு அம் மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக்கொடுக்க் தவறியிருந்தது மட்டுமல்ல பாரிய துரோகங்களையும்கூசாமல்இளைத் துள்ளார்களெனவே தேசத்தின் அரசியல் வரலாற்றுச் சக்கரத்தின் சுழற்சி செப்பி நிற்கின்றது.

தமிழ்க் குறியீடுகளைக் கொண்ட கட்சிகளின் ஆட்சிக்கு வரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்ந்த பக்கச் சார்பு தமிழ் மக்களின் சுயாட்சி தொடர்பில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியது. இவ் விடயத்தில் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் ஆரம்பத்திலேயே ஐ.தே.க சார்ந்த நலனைப் பிரதிபலித்திருந்தமை வெள்ளிடை மலை. 1965 ஆம் ஆண்டு ஐ.தே.க ஆட்சி பீடமேறிய போது எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் அவ்வர சங்கத்தின் அரமச்சரவையில் அந் நாளில் செனட் சபை உறுப்பினராக இருந்த திருச் செல்வம் என்பவரை அமைச்சராக்கி இணைந்து கொண்டது. இதன் மூலம் அக் கட்சியும் தனது ஐ.தே.க சார்ந்த நலனைப் பிரதிபலிக்கத் தவற வில்லை. இவ் விடயத்தில் தமிழ்க் குறியீட்டின்பாற்பட்ட அரசியல் தலைவர்களில் சி.சுந்தரலிங்கம் அவர்களும், தீவுப்பகுதி நாடா ளுமன்ற உறுப்பினராக விளங்கிய வருமான நவரத்தினம் அவர்களும் நேர்மை காத்து நின்றார்கள் என்பது உண்மையேயாகும். எனினும் முன்னவர் யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெருஞ் சாபக்கேடாக அந்நாளில் மிகுந்த வீச்சுடன் வலுப்பெற்றிருந்ததீண்டாமையைப் பேணிப் பாதுகாக்கும் விடயத்தில் முன்னணி வகித்திருந்தமை மிகவும் துரதிஸ்டவசமானவொன்று. சுருங்கக் கூறின் தமிழ் மக்களுக்குள் மையப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்ச் குறியீடுகளைக் கொண்ட கட்சிகள் அன்று தொடக்கம் இன்று வரை ஐ.தே.க சார்ந்த நலனைக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் சுயாட்சி நோக்கிய பயணத்தில் பெருந் தடைக்கல்லாக விளங்கி வருகின்றது.

இதைப்போலவே தொழிலாளர் ஆட்சி அதிகாரத்தை வலியுறுத்தி அதன்பாற்பட்ட சுயாட்சியைத் தமிழ் மக்களுக்கான தீர்வாக ஆரம்ப காலந் தொடக்கம் இன்றுவரை வலியுறுத்தி வருகின்ற தேசத்தின் முன்னணி இடதுசாரி அரசியல் கட்சிகள் அனைத்து இடதுசாரி அரசிய் கட்சிகளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவையில் இணைந்து தமிழ் மக்களின் சுயாட்சிக்கான பயணத்தில் பெருந் தடைக்கல்லாக விளங்கியது மட்டுமல்லாமல் துரோகமும் இழைத்துள்ளார்கள் இவ் விடயத்தில், முன்னைய விடயத்தில் சி.சுந்தரலிங்கம் தீவுப் பகுதி நவரத்தினம் ஆகியோர் தப்பிக்கொண்டமையைப் போல லங்கா சமசமாஜயக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கிய எட்மண்ட் சமரக்கொடி அவர்களும், இலங்கைக் கம்யூனிஸக் கட்சி (சீன சார்பு) பொதுச் செயலாளராக இருந்த நா.சண்முகதாசன் அவர்களுமே தப்பிக் கொண்டவர்கள் எனலாம்.

எனவேதான் கடந்த காலத்தைய தமிழ் மக்களின் சுயாட்சி தொடர் பிலான பயணத்தின் மீதான மேற்தரப்பட்ட இரு பாரிய தடைக் கற்களும் இன்றும்கூட சோபையிழக்காத துர்ப்பாக்கிய மான நிலையில் இந்த தடைக் கற்கள் இரண்டையும் முழுமையாக அகற்றுவதன் மூலம்தான் தமிழ் மக்களின் சுயாட்சியை நோக்கிய பயணத்தை வெற்றிகரமாக மேற் கொள்ளமுடியும்என்னும்முடிவுக்கு வரவேண்டியதாகவுள்ளது.

இத் தடைக்கற்களை அகற்று வதற்கான மிகப் பிரதானமானதும் உடனடியானதுமாகவுள்ள முதல் மார்க்ம் தமிழ்க் குறியீடுகளைக் கொண்ட தமிழ் மக்களுக்குள் வெகுஜன அபிமானத்தைப் பெற்றுக் கொண்ட கட்சிகள் தமது வழமையான ஐ.தே.க சார்ந்த நலனையும் பொதுவுடைமை நாடும் தோழர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடனான இணைவையும் உடன் கைவிட்டு தம் தனித்துவம் பேணித் தேசம் முழுவதும் குறிப் பாகப் பெரும்பான்மை சிங்கள மக்களுக்குள் தமிழ் மக்களின் சுயாட்சியை வலியுறுத்தி இரு தரப்போடுமே இணைந்து தொடர்ச் சியாக வெகுஜனப் போராட் டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும்.

# அஞ்சலி



புலம்பெயர் வாழ்வில் தவிர்க்க முடியாத கவிஞராக அடையாளப்பட்ட கவிஞர் திருமாவளவன் இயற்கை எய்தியுள்ளார். கனடாவில் குடும்பத்தினருடன் வசித்து வந்த திருமாவளவன், பனிவயல் உழவு, அஃதே இரவு அஃதே பகல், கலித்தொகை முதலான பல கவிதைதொகுப்புக்களின் சொந்தக்காரன். கடந்த பல மாதங்களாகவே நோய்களுடன் தீவிரமாக போராடிக் கொண்டிருந்தார். கடந்த 05ம் திகதி இயற்கை எய்தியுள்ளார்.

கனகசிங்கம் கருணாகரன் என்ற திருமாவளவனிற்கு வலி.வடக்கின் வறுத்தலைவிளான் சொந்த ஊர். உயர்பாதுகாப்பு வலயமாக உள்ள தனது ஊரிற்கு, பிறந்த வீட்டிற்கு செல்ல முடியாத துயரம் அவரை தொடர்ந்து அழுத்திக் கொண்டிருந்தது. அவரது கவிதைகளில் அது எதிரொலித்துக் கொண்டிருந்தது.

அவரது கவிதையொன்றின் சில வரிகள்

**தென்கடல் ஓரம்,**<br>
**திகழும் நிலாக்கொழுந்தே**<br>
**துரத்தே எம் தீவு இன்று**<br>
**துயராடும் தனித் திடல்.**

**என்பது எவ்வளவு உண்மையாது.**

**கவிஞருக்கு எமது அஞ்சலிகள்.**

# டூரிங் டாக்கீஸ்



## வித்தியாச விசாகா!

'கண்ணா லட்டு தின்ன ஆசையா' படம் நல்ல ஹிட்டானது. ஆனால் அதன் நாயகி விசாகா சிங்தான் பாவம். யாரும் கவனிக்கவேயில்லை. அதற்கு பின்னர் அவர் நடித்தது ஒரேயொரு படம்தான். 'வாலிபராஜா'. தற்போது ரிலீசுக்கு தயாராக உள்ளது. வீட்டிலிருந்து ஈயோட்டிக் கொண்டிருந்த விசாகா சிங்கிற்கு இன்னொரு வாய்ப்பு வந்துள்ளது. 'லபக்' கென பற்றிவிட்டார். 'பயம் ஒரு பயணம்' என்ற படம். படப்பிடிப்பு பிசியாக நடந்து வருகிறது. இது பேய்ப்பட சீசன்தானே. அதனால் இந்தப்படமும் அப்படித்தான் இருகும் என்கிறார்கள். திரையில் உங்கள் எல்லோரையும் விசாகா மிரட்டுவார் என்கிறார் இயக்குனர் மணிசர்மா. விசாகாவை விட மீனட்சி தீக்சித்தும் படத்தில் உண்டாம்.

## இந்த நடிகைகளுக்கு அது இல்லையாம்

நடிகைகளுக்கு அதுவும் அழகான நடிகைகளுக்கு எது இருக்கிறதோ இல்லையோ, ஈகோ கண்டிப்பாக இருக்கும். ஆனால், இந்த நடிகைகளுக்கு அது இல்லையாம்.புலி படத்தைப் பார்த்த தமன்னா தனது ட்விட்டர் பக்கத்தில், ஸ்ருதி நீங்க ரொம்ப அழகு, பிரமாதமாக இருக்கீங்க என்று புகழ்ந்து தள்ளியிருக்கிறார். பொதுவாக எந்த நடிகையும் மற்றொரு நடிகையை புகழ மாட்டார். அப்படியே புகழ்ந்தாலும் நடிப்பைத்தான் புகழ்வார், தமன்னாவைப் போல் அழகை எல்லாம் வர்ணிக்க மாட்டார். இது கோடை மழை அல்லவா. குளிர்ந்து போன ஸ்ருதியும், நன்றி தெரிவித்ததோடு தமன்னாவை புகழ்ந்துள்ளார். கார்த்தி நடிக்கும் தோஸ்த் படத்தில் ஸ்ருதி ஒப்பந்தமாகி, அவர் விலகிக் கொண்டதால் இப்போது அந்த வேடத்தில் தமன்னா நடித்து வருகிறார். இப்படியொரு பின்புலம் இருந்தும் இருவரும் ஈகோ இல்லாமல் பரஸ்பரம் பாராட்டிக் கொண்டது திரையுலகுக்கே ஆச்சரியம்தான்.





## ரகசியமாக நடந்தது நிச்சயதார்த்தம்

இந்தி மற்றும் தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வந்த இலியானா தமிழில் 'கேடி' மற்றும் விஜய் நடித்த 'நண்பன்' ஆகியப் படங்களில் நடித்துள்ளார். அவருக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இலியானாவுக்கும் ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆண்ட்ரூ என்பவருக்கும் காதல் மலர்ந்துள்ளதாக ஏற்கனவே கிசுகிசுக்கள் வந்தன. இலியான சமீப காலமாக புதுப்படங்களில் ஒப்பந்தமாகவில்லை. காதலருடன் ஜாலியாக சுற்றி திரிந்தார். இந்த நிலையில் இலியானாவுக்கும் ஆண்ட்ரூவுக்கும் ரகசியமாக திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இலியானா தனது விரலில் விலை உயர்ந்த மோதிரம் அணிந்து இருக்கிறார். இந்த மோதிரம் நிச்சயதார்த்ததின் போது ஆண்ட்ரூ அணிவித்தது என்று கூறப்படுகிறது. திருமண நிச்சயதார்த்தத்தில் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே கலந்து கொண்டதாவும் தகவல் வெளியாகி உள்ளது.



## சட்டத்தை மதிப்பவன்

புலி படம் வெளியாகவிருந்த சமயத்தில் விஜய் வீட்டில் வருமானவரித்துறை அதிரடியாக சோதனை நடத்தியது. இது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. சோதனையில் என்ன சிக்கியதென்பது தெளிவாகவில்லை. ஆனால் ஊடகங்களில் நிறையகதைகள் வந்தன. விஜய் ஐந்து வருடங்களாக வருமானவரி செலுத்தவில்லையென்றெல்லாம் செய்திகள் வந்தன. இவற்றைப்பார்த்து விஜய் கொதித்து விட்டார். உடனே ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். 'நான் சட்டத்தை மதிப்பவன். வருமானவரியை ஒழுங்காக செலுத்திக் கொண்டிருக்கிறேன். சோதனை நடத்தியவர்களிற்கும் ஒத்துழைத்தேன். வீணாண புரளி கிளப்பாதீர்கள்' என அதில் கூறியுள்ளார்.



## பாலித்தீவு காதல்

தயாரிப்பாளர் காசில் வெளிநாட்டு சுற்றுப்பயணம் செய்யும் நடிகைகள்தான் பெரும்பாலானவர்கள். படப்பிடிப்பிற்கு கூட்டிச் செல்லும் தயாரிப்பாளர்கள், வெளிநாடுகளில் நடிகைகள் படுத்தும்பாட்டை பார்த்து இரத்தக்கண்ணீர் வடிப்பார்கள். இந்த பட்டியலில் த்ரிஷாவும், காஜலும் இல்லை. அவர்கள் வித்தியாசமானவர்கள். சொந்தக்காசில் வெளிநாட்டு ட்ரிப் அடிக்காவிட்டால் அவர்களிற்கு தூக்கமே வராது ரகம். த்ரிஷ் அடிக்கடி தோழிகளுடன் வெளிநாடு பறப்பது வழக்கம். காஜலும் இப்பொழுது அந்த ரகம்தானாம். அண்மையில்க்கூட குடும்பத்தினருடன் வெளிநாட்டு சுற்றுலா சென்று வந்திருக்கிறார். ஆபிரிக்கா முதல் ஐஸ்லாந்து வரை சுற்றிவிட்டு வந்தாலும், தனக்கு பிடித்தது பாலித்தீவுதான் என்கிறார். பாலித்தீவின் அழகை நாள் முழுவதும் ரசித்துக் கொண்டே இருக்கலாமென்கிறார்.



## காதலில் விழுந்தார் அனுஷ்கா!

இறுதியில் அனுஷ்காவும் சர்ச்சையில் சிக்கிவிட்டார். இதை சர்ச்சையில் சிக்கினார் என்று சொல்லாதீர்கள், காதலில் சிக்கினார் என சொல்லுங்கள் என கிசுகிசுக்கிறார்கள் திரைத்துறையினர். 'பாகுபலி' நாயகன் பிரபாசுடன்தானாம் காதல். பாகுபலி படத்தில் நடித்த சமயத்தில் காதல் தீ பற்றிவிட்டதென்கிறார்கள். இந்த காதலிற்கு இரண்டு வீட்டாரும் பச்சைக்கொடியும் காட்டிவிட்டார்களாம். அண்மைக்காலமாக பொதுநிகழ்ச்சிகளில் அவர்கள் காட்டிவரும் நெருக்கம், காதலை உறுதிப்படுத்துகிற தென்கிறார்கள் அவர்கள். 'பாகுபலி 2' திரைக்கு வந்ததும், இருவருக்கும் 'டும் டும்' என்கிறார்கள்.



## லேடி சூப்பர்ஸ்டார் நயன்தாரா

லேடி சூப்பர் ஸ்டார் விஜயசாந்தியை பலர் மறந்து விட்டனர். தமிழ், தெலுங்கில் கொடி கட்டிப்பறந்தார். நாயகர்களிற்கு இணையாக இருந்தார். அவருக்காகவே கதைகள் எழுதப்பட்டன. அதிக சம்பளம் பெற்ற நாயகியும் அவர்தான். பின்னர் அரசியலுக்கு போனார். படங்களை கைவிட்டார். அதன்பின், 'லேடி சூப்பர்ஸ்டார்' நாற்காலி காலியாகத்தான் இருக்கிறது. அனுஷ்கா அதற்கு முயற்சித்து பார்த்தார். பாகுபலி, ருத்ரமாதேவி ஆகிய படங்களின் மூலம் மிரட்டினார். ஆனால் அவரால் முடியாததை நயன்தாரா முடித்துவிட்டார் என்கிறார்கள். தனிஒருவன், மாயா என்ற இரண்டு வெற்றிப்படங்களின் மூலம் மார்க்கெட்டை நன்றாக உயர்த்திவிட்டார். தற்போது ஒருபடத்திற்கு இரண்டரைகோடி சம்பளமாக வாங்குகிறார் என்கிறார்கள். அப்படியானால் அவர்தானே லேடி சூப்பர்ஸ்டார்!

# தூரப் போகும் நாரைகள்

தாட்சாயணி
thadsayanee@gmail.com

விழிப்படலத்தில் விழுந்தவை மங்கிய காட்சிகள் தான். ஆனாலும் அவற்றையெல்லாம் தாண்டிக் கொண்டு நெல் வயல்கள் பாரம் தாங்காமல் சாய்ந்து கொண்டிருப்பது பார்வதி ஆச்சியின் மனக் கண்ணில் தெரிகிறது. அறுகு வெளியின் நினைப்பு இந்த உயிர் போக முன்பு எப்படிப் போகும்? வேதனைத் திரைகள் படிந்து சுருங்கிப் போன முகத்தில் பேரக் குழந்தைகளைத் தேடும் ஆவல் போல ஒன்று, அந்த மெல்லிய இளம் பயிர்களையும் தேடும் சோகத்தை நெஞ்சில் இழையோட வைத்தது.

"அம்மா... கொஞ்சம் பால் குடியுங்கோ அம்மா..." மகளின் குரல் தடிமன்காரக் குரல் போல அடைசலுற்றுக் காதில் விழுந்தது. கூடவே மெல்ல நிமிர்த்தி பேணியைச் சாய்த்துப் பால் புகட்டும் மகளின் அன்பு... அதற்கு அப்பாலும் மிகுந்த அன்பை அந்தக் கிராமத்திலிருந்து அவளைத் தேட வைக்கிறது.

அறுகுவெளி...வயல்கள் சூழ்ந்த அந்த இனிப்பான ஊர் ஏன் இவர்களைத் தள்ளி வைத்தது? ஆச்சியும், அப்புவுமாய் அந்தச் சின்ன வீட்டைத் தென்றல் தழுவி வரும் இடத்தில் அமைத்து, வயலோரக் காற்றின் வாடையிலேயே உயிர் சுமந்து வாழ்ந்தவர்கள். எந்த இடப் பெயர்வுமே அசைக்காதிருந்த அவர்களை இந்த இடப் பெயர்வு மட்டடும் எப்படி அசைத்தது? காரணம் அப்பு போன வருடம் அப்பு செத்துப் போனார். ஆச்சிக்கு உறுதியான பிடிமானமாயிருந்த அந்த தூண் விழுந்த பிற்பாடு ஆச்சியால் உறுதியான முடிவுகள் எடுக்க இயலவில்லை. கடைசிவரை அப்புவின் இறுதி நாள் வரை கூட அந்த மண்ணைவிட்டு ஒரு பிரிவு வருமென்று ஆச்சி நினைத்திருக்கவில்லை.

பிள்ளைகள் படித்து முன்னுக்கு வந்து அவர்களுக்கென்று ஒரு வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்த பின்னரும் கூட அவர்கள் அந்த மண்ணோடு இசைந்திருக்கவே விரும்பினார்கள். நகரத்தில் வீடு கட்டிக்கொண்டுவசதியாய் வாழ்ந்த பிள்ளைகள் வருந்தி வருந்திக் கூப்பிட்டாலும் பிடிவாதமாய் மறுக்க, அப்போது அப்பு இருந்தார். அந்தப் பிடிமானத்தில் வாழ்வு அர்த்தமாய் இருந்தது. பிள்ளைகள் உத்தியோகத்தில் இருந்த போதிலும் ஆளாளுக்கு வயல் வைத்திருந்தார்கள்.

"உத்யோகம் இருக்கெண்டாப் போலை வயலைக் கவனிக்காமல் விடாதயுங்கோ... அதுதான் தெய்வம்... உங்களை வளத்து... படிப் பிச்சது... முன்னுக்குக் கொண்டு வந்தது.... எல்லாம் இந்த மண்தான். அந்த மண்ணைக் கும்பிட வேணும்..."

அவர்களுக்கு அந்த உண்மை புரியும். சின்ன வயதில் ஆளாளுக்கு களை பிடுங்குவதிலும், நாற்று நடுவதிலும், சூடு மிதிப்பதிலும் என்று ஒவ்வொரு சின்ன அலுவல்களிலும் ஈடுபட்டுப் பழகிப் போனவர்கள் அவர்கள். என்றாலும் உத்யோகச்சுமை அழுத்த அழுத்த, வயல் வேலைகள் அவர்களைச் சலிப்புறச் செய்தது உண்மை தான். அப்போது அப்புவுக்கும் ஆச்சிக்கும் தான் இவர்களது வயல்களைக் கவனிக்கும் பொறுப்பும் கூடும். விதைப்புக் காலங்களில் உரம் போடுகையில், சூடு மிதிப்புக் காலங்களில் என்று பிள்ளைகள் வருகின்ற வேளைகளில் பேரப் பிள்ளைகளோடு வருவார்கள். பேரக் குழந்தைகள் சரியாக சுட்டிகள். ஓர் இடத்தில் இராமல் சுற்றித் சுற்றித் திரியுங்கள். வயல் நிலங்கள் பூராவையும் அளவெடுத்து நாரைகளைத் துரத்துங்கள்...

நாரைகள்... எவ்வளவு சொந்தமான உறவுகள்! இந்த நெற் பயிர்களைப் போல... பருவ காலத்துக்குத் தக்கபடி கூட்டங் கூட்டமாக வந்து பறக்கின்ற செங்கால் நாரைகள். வயல் வரப்புகளுடே ஆடி அசைந்து ஒய்யாரமாய் நடக்கும். ஒன்றோடொன்று அன்பாய் சிறகு கோதும். காத்திருந்து இரை பொறுக்கும். சாரி சாரியாய் சிதறிப் பரந்து பச்சைக் கடலாய் விரிந்த வயலுக்கிடையே... வெள்ளைப் பந்துகளாய் ஒளி காட்டும். யாரேனும் வருவதைக் கண்டால் 'ஜிவ்' வென்று ஒன்றொன்றாய் எழும்பித் தூரப் போய் அமரும். ஆபத்துக்கள் அண்மிக்க, அண்மிக்கத் தூரப் போய்க் கொண்டிருக்கும். பருவ காலங்களுக்கு அமையவும் எதிர்க்கும் மனிதர்களுக்கு அமையவும் இசைவுபடுத்தப்பட்ட வாழ்க்கை பரந்த சிறகுகளை வெண்மைச் சாமரமாய் விரித்தபடி பறக்கும் அழகு..!

இந்த நாரைகளோடு பிரியம் வைக்க முனைந்து தோற்றுப் போனவன் சுட்டா. பார்வதி ஆச்சியின் கடைசிப் பேரன். கொஞ்சம் சின்ன வயதில் பெண்மைத்தனமான மென்மையான செய்கைகள். அவனுக்குள் வன்மத்தைக் கிளப்பியவை அந்த நாரைகள். கொஞ்சம் பயந்த சுபாவமுள்ள அவன் அடிக்கடி நாரைகளுக்குப் பின்னே திரிவான். அவனோடொத்த மூத்த பேரக் குழந்தைகள் வைக்கோற் போரில் ஏறி உருண்டு கொண்டிருக்கிற வேளைகளில் இவன் பச்சைப் பசேல் என்ற வயல்கள் வெறிச்சோடி இருப்பதை ஒரு சோகத்தோடு; பார்ப்பான். அவனுக்கு வயல் பசுமையாய் இருப்பது தான் பிடிக்கும். அதனை யாரும் வெட்டி விடக் கூடாது. இந்த நாரைகள் எப்போதும் அங்கு திரிந்து கொண்டே இருக்க வேண்டும் என்பது அவன் விருப்பம்.

வரப்போரம் மெல்ல நடப்பான். தூரத்தில் நாரைகள் தெரிகின்ற இலக்கை நோக்கி அவற்றின் கவனம் கலைந்து சிதறாமல் இருக்கும் பொருட்டு சத்தமிடாமலே பதுங்கிப் பதுங்கி நடப்பான். நெருங்க நெருங்க மனது சந்தோசமுறும். 'நான் உங்களைப் பிடிக்க மாட்டேன். நீங்கள் என்னோடு விளையாடலாம்' என்பதாய் அவன் கண்கள் சேதி சொல்லும். ஆனால் நாரைகள் அவன் கண்களைப் பார்ப்பதில்லை: அவனது எண்ண ஓட்டங்களைப் புரியும் சக்தியும் அவற்றுக்கு இருப்பதாய்த் தெரியவில்லை. ஏதேனும் ஒரு நாரை, ஒரு மனிதனின் வரவு அது ஒரு சிறுவனாய் இருந்தாலும் கூட உணர்ந்து எழுந்து துரத் தள்ளிப் போய் உட்காரும். மளமளவென்று செய்தி உணர்ந்தாற் போல ஒன்றொன்றாக நிதானம் தவறாமல் எழுந்து போய்த் தள்ளி உட்காரும். இவன் சலிப்பில்லாமல் மேலும் தொடர்வான். அதற்கு அப்பால், அப்பால்... அப்பாலுக்கப்பால்... வயல்களே இல்லையா என்றாற் போல் நாரைகள் சுற்றிச் சுற்றி, மாற்றி மாற்றி வட்டங்களை உருவமைக்கும். கால் வலிக்கும் வரைக்கும் நாரைகளைத் தொடர்வது அவனுக்குச் சலிப்பைத் தருவதில்லை. அப்படியாயின் அவனுக்குக் காலே வலிப்பதில்லை என்று அர்த்தம். ஆனால் அவன் நாரைகளைத் தொடர்வதை நிறுத்த வேண்டி வரும். பார்வதி ஆச்சியின் தொடர்ச்சியான வற்புறுத்தல்களால் சுற்றிச் சுற்றித் திரிந்து நீண்ட தூர அலுப்பில் இருக்கும் அவனைப் பார்வதி ஆச்சியின் அன்பும் கேலியுமான குரல் தாக்கும்.

"இண்டைக்கு எத்தனை நாரை பிடிச்சாப்போலை..." அவனுக்கு ஆச்சியின் கிண்டல் கோபத்தைச் சுரக்க வைக்கும்.

"பாருங்கோ ஆச்சி, ஒரு நாளைக்கு இல்லாட்டி ஒரு நாள், நான் உந்த நாரைகளிலை ஒண்டையாவது சுட்டு நாரையிறைச்சி கொண்டு வந்து தாறன் உங்களுக்கு..." நாரைகளை வசியப்படுத்த முடியாக் கோபத்தில் சொல்வான்.

"சீச்சீ சீச்சீ அதுகள் பாவம். என்னத்துக்கடா பிள்ளைக்கு உந்த நினைப்பெல்லாம். உயிர்களைக் கொல்லக் கூடாதடா..." ஆச்சி அவனை வாரியெடுத்து அணைத்துக் கொள்வார்.

அப்போது தான் அவனுக்கு அவ்வளவு நேரமும் வலியெடுக்காத கால்கள் வலியெடுப்பதாய்த் தோன்றும். கால்வலியை மீறி நாரைகள் கிடைக்காமற் போன ஆற்றாமை கண்களில் வழியும்.

"ஆச்சி ஏன் ஆச்சி... என்னட்டை மட்டும் நாரைகள் வராதாம். என்னைப் பார்க்க பயமாயோ கிடக்கு..:" சின்ன மனதில் தாங்கல் ஏற்பட்டு சிதறும்.


"ஆர் சொன்னதடா அப்படி? நாரைகளெண்டா அப்பிடிதான். எங்களைப் போல எல்லாரும் இருக்கேலாதானையடா. நாரைகளை வேட்டையாடவும் ஆக்கள் இருக்கினை தானை. அது தான் அது எல்லாரைப் பார்த்தும் விலகி விலகிப் போகுது. வேண்டாத தொந்தரவுகளை ஏன் விலைகுடுத்து வாங்குவானெண்டுதான்... தூரத் தள்ளிப் போறது எதுக்கும் நல்லது தானை..."

"ம்...ஹூம்... இது எனக்கு விளங்கேல்லை". அவன் ஆச்சியின் முகத்தோடு முகம் இழைத்துக் கொண்டு சிணுங்குவான். எல்லாம் ஆச்சியின் வீடு வரும்வரைக்கும் தான். வீட்டுக்கு வந்த பிறகு எல்லாம் மறந்து போவான். சுற்றி வரப் பேரக் குழந்தைகளை அமர்த்தி நிலா வெளியில் ஆச்சி கதை சொல்லும் வரைக்கும் தான்.

ஆச்சியின் கதைகளும் நிலவுக்குள் பாக்கு இடிக்கிற ஔவைப் பாட்டியின் தோற்றமும் அவனுள் பரவசத்தைக் ஏற்படுத்தும். அதையும் விட அதிகமாய் பூவரசம் இலைகளை ஒவ்வொருவரிடமும் கொடுத்து விட்டு மத்தியானச் சோற்றையும் கறிகளையும் போட்டுப் புரட்டிய குழையல் சோற்றை வயது பேதமின்றி எல்லாருக்குமாய் ஆச்சி உருட்டி உருட்டித் தருகின்ற போது அவனுக்குப் பெரிய பரவசமாய் இருக்கும். அப்புவைப் போல வண்டி மாடுகளை ஓட்டும் பெரியவராய் அவருக்கு சமதையாகி விட்டாற் போலத் தோன்றும். அதே போல அலுவலகத்தில் பைல்களோடு போராடும் தந்தைக்குச் சமனாகிவிட்டது போலவும் பள்ளிக் கூடத்தில் 'சோக்' கட்டியோடு படிப்பித்து மிரட்டுகின்ற மாமாவுக்குச் சமனாகிப் போனது போலவும்... இன்னும் அம்மாவுக்கு, அண்ணாக்கு, அக்காவுக்கு என்று எல்லோருக்கும் சமனாகி விட்டது போலவும் தோன்றும். பொச்சடித்து பொச்சடித்துச் சாப்பிடுவான். அந்த வேளைகளில் அவனை மற்றப்




**வயலைக் கவனிக்காமல் விடாதயுங்கோ... அதுதான் தெய்வம்... உங்களை வளத்து... படிப்பிச்சது... முன்னுக்குக் கொண்டு வந்தது.... எல்லாம் இந்த மண்தான். அந்த மண்ணைக் கும்பிடவேணும்...**





பேரன்கள் கேலி செய்வார்கள். தாங்கள் செய்த பெரிய கூத்துக்களை யெல்லாம் விலாவாரியாக விவரிப் பார்கள். "இவனைப் போல ஒரு பெட்டைப் பிள்ளை ஒரு இடமும் இல்லை..." என்று வம்புக்கு இழுப்பார்கள்.

"பெட்டைப் பிள்ளையோ? நாங்கள் கூட மரமேறுவம் அவன் அதுவுமில்லை. ஆக அவன் பெட் டையுமில்லை...." என்று மச்சாள் காரிகள் சீண்டுவார்கள். அவன் கோபம் தலைக்கேற சோற்றுக் கையை உதற முனைவான். பார்வதி ஆச்சி பரிவாய் கைப்பிடித்துத் தடுப்பா.

"என்ரை பிள்ளை தங்கமெல் லோடா. உதுகள் எல்லாந்தான் குழப்படிக் கூட்டம்..."

அவன் அவர்களைப் பெருமை யாய் பார்ப்பான். மற்றதுகள் வாய்க்குள் நெளித்துத் தங்களுக்குள் இரகசியம் பேசிச் சிரிக்குங்கள். இவன் ஆச்சியின் மிருதுவான நூல் சேலைக்குள் முடங்கிப் படுத்துக் கொண்டு வானத்தைப் பார்ப்பான். வானத்தில் நட்சத்திரங்கள் சிரிக்கும். எட்டாத்தொலைவில் இருந்து கொண்டு "அருகே வா... வா..." என்றழைக்கும். அவன் கற்பனைக்குள் கரைந்து போவான். ஒரு இனிமையான உலகைச் சிரு'டித்து அதற்குள்ளேயே லயித்துப் போவான். அந்த உலகில் மற்றச் சிறுவர்களுக்கு இடமில்லை. ஆனால் பார்வதி ஆச்சிக்கு நிச்சயமாய் இடமுண்டு.

> **நாரைகள்... எவ்வளவு சொந்தமான உறவுகள்! இந்த நெற் பயிர் களைப் போல... பருவ காலத்துக்குத் தக்கபடி கூட்டங் கூட்டமாக வந்து பறக்கின்ற செங்கால் நாரைகள். வயல் வரப்புகளூடே ஆடி அசைந்து ஒய்யாரமாய் நடக்கும்**

ஆச்சியின் வீட்டில் அருமையான ஒரு கிணறு உண்டு. ஐம்பத்தெட்டில் கட்டிய கிணறு. வற்றாத தண்ணீர் சவர் படாத... உப்புக் கலக்காத சுத்தமான தண்ணீர். இளநீர் போல... என்று அதைப் பருகுபவர்கள் சொல்லாமற் போவதில்லை. பல காலமாக அங்கு வசிப்பவர்கள் அங்கு தான் தேவைக்கு நீரெடுக்க வருவார்கள். ஊர்ப் பெண்கள் வருகிற போது ஊர்த்துளாவார மெல்லாம் அங்கு தான் அடிபடும். அதுவே ஒரு சந்தோசமாய் மலரும். அந்த சந்தோசங்கள் கடந்த சில வருடங்களில் குறுகிக் கொண்டு போயின. யுத்தம் அப்படி நெடு நேரம் நின்று பேச விடுவதில்லை. அன்றியும் சற்றுத் தள்ளி 'பாசறை' அமைந்திருக்கும் 'அவர்கள்' கிணற்றுக்கு அடிக்கடி வந்து போவார்கள். கிணற்றில் குளிக்கவும் துணி துவைக்கவுமென்று வந்து கிணற்றடியை அல்லோல கல்லோ லப்படுத்தி விட்டுப் போவார்கள். ஆச்சியையும் அப்புவையும் பேச்சுக்குஇழுத்து வம்படிப்பார்கள்.

"பேரன்கள் .... சரியான குழப்படிப் பிசாசுகள்..." ஏன்று தோன்றும் எண்ண ஓட்டம் ஒவ்வொருவராய்க் களத்துக்குப் போக விடை பெற வருகையில் கண்ணில் குளமாய்த் தேங்கும்.

பிறகு 'அவர்கள்' போனார்கள். 'மற்றவர்கள்' வந்தார்கள். 'மற்றவர் களுக்குரியகிணற்றடியும் அதுவாய்த் தான் மாறிப் போனது. குளிப்பும் துவைப்பும் பரிகாசப் பேச்சுக்களு மாய் கிணற்றடி கலகலக்கும். ஆனாலும் கிணற்றடிப் பூவரசுகள் மௌனத்தோடு எதுவுமே பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கும். அமைதியான இந்தப் பூமி ஒருநாள் வேட்டுக்களால் சடசடக்கக்கூடும். அப்போது இந்தக் கிணற்றடியில் ஒவ்வொரு 'சீசனிலும்' மாறி மாறிக் குளித்தவர்கள் தங்களுக்குள் அடிபடக் கூடும்.

ஆச்சிக்கு அரசியல் பிடிப்ப தில்லை. 'மனிதர்கள்' என்ற சொல் மட்டும் பிடிக்கும். அந்தக் கிணறு இனமத பேதமின்றி எல்லாருக்கும் நீர் சுரப்பது மாதிரி எல்லாருக்கும் அன்பைச் சுரக்க ஆச்சியால் முடியும். அப்பு இடைக்கிடையே அலுத்துக் கொள்வதுமுண்டு.

"உவங்களோடை உனக்கென்ன கதை...?"

அப்புவும் போய்விட்டார். போன வருடம் வயல் விதைப்பின் போது வயலுக்குள் சளி பிடித்துக் கொண்டது. பிறகு காய்ச்சலாகி ஆஸ்பத்திரியில் வைத்திருந்து மூளை மலேரியா என்று 'சேர்ட்டிபிக்கேற்' கொடுக்கப்பட்டு இரண்டு நாளில் அப்பு செத்துப் போனார். ஆச்சிக்கு வெறுமையாயிற்று வாழ்வு. வெறுமையைப் போக்க ஆச்சிக்கு கிடைத்த துணை சுட்டா.

தங்களோடு இருக்கச் சொல்லி வற்புறுத்திய ஒவ்வொரு பிள்ளையின் வேண்டுகோளையும் ஆச்சி ஏற்கவில்லை.

"நான் இந்த இடத்தை விட்டு வாறன். அயலுக்கை உள்ள சனம் ஏதேனும் ஒண்டெண்டாப் பாக்காதே..."

பிள்ளைகளது வற்புறுத்தல்க ளெல்லாம் தேய்ந்து போக ஆச்சியின் சேலைத் தலைப்புக்குள் முடங்கிக் கொண்டிருந்த சுட்டா எஞ்சி நின்றான்.

"வாடா போவம்" கைப்பற்றி யிழுத்த தாயின் பிடிக்குள் அடங் காமல் சிணுங்கலோடு சொன்னான்.

"நான் ஆச்சியோட இருக்கப் போறன்..."

"ஆச்சியோடையோ்..." சின்ன மகனைத் தன் கைப்பிடிக்குள்ளேயே வைத்து வளர்த்தவள் அவனை விட்டுப் போக மனமின்றிக் கேட்டாள்.

"அதுக்கென்ன அம்மாவையும் தனிய விடக்கூடா. ஒரு மாசமெண் டாலும் அவன் நிக்கட்டும். இப்ப பள்ளிக் கூடமும் லீவுதானை"

கடைசியில் அதுவே தீர்மான மாய் ஆயிற்று.

சுட்டாவின் நெஞ்செல்லாம் பூக்கள் பூத்துச் சிரித்தன. அவன் வீட்டுக்குப் போவதற்கிடையில் ஒரு நாரையையாவது வசப்படுத்திவிட மாட்டானா...

ஆச்சிக்கு அந்த வேதனையான காலகட்டத்தில் சுட்டாவின் அருகாமை நிரம்பவே இதமாக இருந்தது. அப்புவுடனான தன் வாழ்க்கையின் இனிய ராகங்களைச் சுட்டாவிற்கு முன் திரும்பவும் மீட்டிப் பார்க்க முடிந்தது. சுட்டா வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டு ஆச்சி மீட்டு கின்ற அந்த ராகங்களைக் கேட்டுக் கொண்டிருப்பான்.

அந்த ராகங்கள் திடீரென்று நின்றன. பதிலாகப் பயங்கரச் சத்தங்கள் செவிப்பறையை மோதின. வேட்டுகளின் ஆங்காரத் தில் நாரைகள் பறந்தன. தூரத் தூரப் போகும் நாரைகள்... இன்னும்... இன்னும்... அப்பாலுக்கு அப்பால் பறக்க வேண்டிய தேவை உணர்ந்து கொண்டிருந்த நாரைகளிலொன்று பொத்தென... விழுந்தது பச்சை வயல்களுக்கிடையே.

பஞ்சைத் தோற்கடித்த வெள் ளைச் சிறகுகள் குருதியில் தோயத் துடிதுடித்து அரும்பத் தொடங்கிய நெற்பயிர்களுக்கிடையே குருதி வடித்துக் கிடந்தது. கூடப் பறந்த நாரைகள் சுற்றிப் பறந்து கரைந்தன. எதுவுமே செய்ய முடியாமல் அழுது கரைந்து அடுத்த வெடிச்சத்தத்தின் பின் தாக்குப் பிடிக்க முடியாமல் அவலத் தொனியில் கத்திக் கொண்டே பறந்து போயின.

ஆனால் சுட்டாவை அவர்கள் விட்டுப் போகவில்லை. பார்வதி கதறிக் கதறி வரண்ட தொண் டைக்குள் இன்னும் வார்த்தை களைத் தேடியபடி இரத்தமாகிப் போன சுட்டாவைக் கைகளில் ஏந்தியபடி ஓடி வந்து கொண்டி ருந்தா. மறித்துச் சுட்ட ஹெலியின் சடசடப்புக்கு அஞ்சிப் பதுங்கிய போதும், ஆச்சியின் கரங்கள் தளராமல் அவனைப் பற்றியிருந்தன.

"ஐயோ என்ரை பிள்ளை..."

ஆச்சியின் கைகளில் சுட்டவைப் பார்த்த சுட்டாவின் தாய் தாளமாட் டாமல் மயங்கி விழுந்தாள்.

மற்றச் சிறிசுகள் வெறித்தபடி நின்றன.

ஆச்சியோ துக்கமும் வருத்தமும் களைப்பும் ஒரு சேர நோயில் விழுந்தா.

" ஆச்சி நான் இஞ்சையிருக் கிறன்..." பிஞ்சுக் குரல், மென்மையின் சாயல் படிந்தபடி.

"எங்கேயடா... எங்கை...?"

பச்சை வயல்களின் நெற்கதிர் களைப் பிடித்து அசைத்தபடி ஒளிக்கிறான் அவன்...

"ஆச்சி நான் ஒரு நாரை பிடிச்சிட்டன்...."

வயலுக்குள் செத்துக் கிடந்த நாரை அவன் கைபட்டுச்சிறகசைத்து அவனோடு விளையாடுகிறது.

"ஆச்சி வாங்கோ ஆச்சி, அறுகு வெளிக்கு..."

"சுட்... டா நான் வாறண்டா..."

"என்னம்மா செய்யுது..?

"என்ன ஆச்சி...?

"சுட்... டா, சுட்... டா கூப்பிடுறான்..."

"அக்கா... பால் குடக்கா"

ஆச்சியின் வாய்க்குள் மகள் பால் ஊற்றுகின்றாள்.

"சுட்... டா"

ஆச்சியின் தலை சரிந்து விழுகிறது.

# 'புலி'யை கழுவி ஊற்றும் இணையவாசிகள்


விஜய் நடித்த 'புலி' படத்திற்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் பாலாபிசேகம் செய்து ரசிகபெருந்தகைகள் முதல்க்காட்சி கண்டு களித்தார்கள். விஜய் நடித்த எல்லாப்படங்களையும் பார்த்துவிட்டு வெளியில் வந்து சொல்லும் 'படம் சூப்பர்' டயலொக் தாராளமாக கேட்க முடிந்தது. இதற்குள் யாரோ ஒரு அப்பாவி, யாழ்ப்பாணம் திரையரங்கொன்றில் படத்தை பார்த்துவிட்டு 'மொக்கை' என கொமண்ட் அடித்துள்ளார். பிழைக்கத் தெரியாத அப்பாவி. ரசிகர்கள் ஒரேபோடாக போட்டு மண்டையை பிளந்து விட்டார்கள்.


இப்படி மண்டையை பிளந்து, விமர்சனத்தை தடுக்க முடியுமா? இணையத்தளங்களில் 'புலி'யை கிண்ணடலடித்து நிறைய பதிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் எது உண்மையானது, எது விஜயை பிடிக்காதவர்கள் பரப்புவதென்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.




Thala My Hero @iamRajcitizen · Oct 1
இது #சுறா என்னும்
வரலாற்று காவியத்தை மறக்க வைத்து வரலாறு படைத்த #புலி :-)







வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com
0776284687



# வெறும்இலை அல்ல, வெற்றிலை

வெற்றிலை எனும் போது நம் நாட்டில் உள்ள அரசியல்கட்சியொன்றின் ஞாபகம் வருவதை தவிர்க்க முடியாதுதான். ஆனால் இங்கு தமிழர் வாழ்வியலில் வெற்றிலை பெறுகின்ற முக்கியத் துவம் அதற்கு காரணமான அதன் மருத்துவ குணங்கள் பற்றி நோக்குவோம்.

தமிழர் விழாக்களிலும் சடங்கு சம்பிரதாய விருந்துகளிலும் முக்கிய மாக இடம்பெறும் ஓர் கொடி யினத்தை சேர்ந்த மூலிகையே வெற்றிலையாகும்.

இது தன் மருத்தவ குணத்தால் தெய்வீகம் பொருந்தியதாக போற்றப் படுகிறது.

வெற்றிலையில் 84.4% நீர்ச் சத்தும், 3.1% புரதச் சத்தும், 0.8% கொழுப்புச் சத்தும் நிறைந்துள்ளது. இதில் கல்சியம், கரோட்டின், தயமின், ரிபோபிளேவின் மற்றும் விற்றமின் சியும் உள்ளது.

தற்போதைய ஆராய்ச்சியில், வெற்றிலையில் மிகவும் வீரியமிக்க நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட சவிக்கால் (Chavicol) என்னும் பொருள் இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளது. வெற்றிலையில் கல்சியம், இரும்புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது.

**"மண்ணில் வேந்தனை மாமலை யாட்டியை**
**உண்ணும் சோற்றுக்கு உறுதுணை யானவனை**
**கண்ணில் மூக்கில் காதில் பிழிந்திட**
**விண்ணுக்கு சென்ற உயிர் மண்ணுக்குமீளுமே** என்பது ஓர் மருத்துவப் பாடல்.

இதில் மண்ணில்வேந்தன் எனப்படுவது வெற்றிலை

மாமலையாட்டி என்பது மிளகு

உண்ணும் சோற்றுக்கு உறுது ணையானவன் உப்பு அதாவது வெற்றிலை, மிளகு, உப்பு மூன்றை யும் கசக்கி கண்ணில் மூக்கில் காதில் பிழிய விசம் நீங்கும் என்பது பொருள்.

வெற்றிலை மிளகு சேர்த்து செய்த குடிநீர் உணவின் விசத்தை நீக்குகிறது



### சளி இருமலுக்கு

வெற்றிலைச்சாற்றை வசம்புத் தூள் சேர்த்து தேன் கலந்து கொடுக்க இருமல் சளி என்பன நீங்கும்.

இதை விட, வெற்றிலையின் நடுநரம்பை நீக்கி ஆடாதோடை இலையுடன் 10 மிளகு, ஒரு பிடி துளசி இலைகளை சேர்த்து ஒன்றாக இடித்துக் கொள்ள வேண்டும். அதனுடன் 300 மில்லி நீர்விட்டு மூடிய பாத்திரத்தில் நன்றாக கொதிக்க வைத்து 75 மில்லி ஆனவுடன் வடிகட்டி குடிக்க வேண்டும். இதேபோல் தினமும் 2 அல்லது 3 வேளை சளி, இருமல் இருக்கும் வரை குடிக்கலாம்.

சித்த மருந்துக்கடைகளில் கிடைக்கும் சுவாசகுடோரி மாத்தி ரையுடன் 2மிளகும் சேர்த்து, அதை ஒரு வெற்றிலையில் வைத்து வாயில் போட்டு நன்கு மெல்லவேண்டும். தினம் 2 வேளை இவ்வாறு மென் றால் ஆஸ்துமா, மூச்சுக்குழல் அலர்ஜி படிப்படியாக குணமாகும்.

வெற்றிலை சாற்றில் திப்பிலித் தூளை ஊறவைத்துலர்த்தி சூரணித்து தேனில் தர சளி இருமல் நீங்கும்

### வீரிய விருத்திக்கு

ஆண்மையை அதிகரிக்கசெய்யும் குணம் வெற்றிலைக்கு இருக்கிறது. அதனால்தான் இரவுசாப்பிட்டபின் தாம்பூலம் தரிப்பது தமிழர் மரபாகி இருக்கலாம்.

வெற்றிலை சாற்றில் சாதிக்காய் தூள் கலந்து சாப்பிட வீரிய விருத்தி உண்டாகும். வெற்றிலையோடு சாதிக்காய், கராம்பு சேர்த்து சாப்பிடும் பழக்கம் மன்னர் காலத்தில் இருந்தே இருக்கிறது.

### வயிற்று ரோகங்களுக்கு

வயிற்றுப்பொருமல், செரியாமை, மாந்தம் என்பவற்றிக்கு வெற்றிலை மருந்தாகிறது.

வெற்றிலையைம் ஓமத்தையும் மென்று தின்ன வயிற்றுப்பொருமல் நீங்கும். வெற்றிலச் சாறும் இஞ்சிச் சாறும் தேனும் கலந்து அருந்த வயிற்றுப் பொருமல், செரியாமை நீங்குகிறது. இது காய்ச்சலையும் கட்டுப்படுத்துகிறது.

வெற்றிலை சாற்றையும் அவுரி இலை சாற்றையம் கலந்து வெறும் வயிற்றில் தர வயிற்றில் உள்ளபூச்சிகள் வெளிப்படுகின்றன.

### வெற்றிலைச்சாற்றெண்ணை

ஆயுர்வேத மருத்துவத்தில் வெற்றிலை சாற்றெண்ணை சிறப்பானதொரு மருந்தாகும். வெற்றிலை சாறு, தேசிப்பழச்சாறு, எள்ளெண்ணெய், பசுநெய் கலந்து அதில் பசும்பால் விட்டரைத்த கரும்சீரக விழுதைப்போட்டு பதமாக காய்ச்சி வடித்து தலைக்குவைத்து வர ஒற்றை தலைவலி, பீனிசம், மூக்கில் நீர் வடிதல், கண்மங்கல் என்பன நீங்கும் யாழ்ப்பாணத்தில் அனேக மருத்துவர்களால் இவ்வெண்ணெய் பாவிக்கப்படுகிறது.

வெற்றிலை, அகத்தி, எருக்கன், பழுப்பு முருங்கைப்பட்டை, வசம்பு சம அளவெடுத்து அரைத்து எண்ணெய் கலந்து காய்ச்சி காதில் சொட்டு மருந்தாக பயன்படுத்த காது வலி நீங்கும். இதை விட சருரோகங்ளுக்கும் இது தீர்வாகிறது

தீப்புண் குணமாக வெற்றி லையில் நெய் தடவி லேசாக வதக்கி புண்ணின்மீது பற்றாக போட வேண்டும். விரை வில் அந்த புண் குணமாகும்.

100 மி.லி. தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலையை போட்டு சூடாக்கி வெற்றிலை சிவந்தவுடன் வடிகட்டி போத்தலில் அடைத்து வைத்துக் கொண்டு சொறி, சிரங்கு படை இவைகளுக்கு தடவி வந்தால், எளிதில் குணமாகும்.

வெற்றிலை போடுதல் கெட்ட பழக்கம் என்று கூறுப்பட்டாலும் நரை, திரை, மூப்பு, சாக்காடு போன்றவற்றை நீக்கி உடலை என்றும் நோயின்றி காக்கும் தன்மை கொண்ட கற்ப மூலிகைகளில் வெற்றிலையும் ஒன்று. அதனால்

இவ்வளவு மருத்துவ பயன் கொண்ட வெற்றிலையை பயன்படுத்துதல் நலம் தானே.

"இனி வெற்றிலையை போட்டேண்டி சக்தி கொஞ்சம் ஏறுதுடி" என பாடலாம் அல்லவா.



பாதுகாப்பான உணவு மற்றும் நிலையான விவசாயம் என்ற தொனிப் பொருளில் ஆரம்பான தேசிய உணவு உற்பத்தி திட்டத்தை ஜனாதிபதி கிளிநொச்சியில் ஆரம்பித்து வைத்தார். யாருமே எதிர்பாராத விதத்தில் சாரத்துடன் கலந்து கொண்ட ஜனாதிபதி, திடீரென சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு வயலில் இறங்கியது கூட்டத்தையே வாய்பிளக்க வைத்தது.


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கு.ரவிராஜ், க.தருண் 172, இ.பிரியங்கா 167, கு.சாருக்கன் 161, கௌ.அபினா 161, ந.ரயிதன் 156, வ.விக்னேஸ் 154, கி.டினோஜன் 153 ஆகிய 8 மாணவர்களுடன் அராலி சரஸ்வதி மகாவித்தியாலய அதிபர், பிரதி அதிபர் மற்றும் வகுப்பாசிரியர்களான திருமதி.நா.அச்சுதன், திருமதி.ப.மோகனசிங்கம் ஆகியோரும்...



| | | | |
|---|---|---|---|
| மீனம் குரு ஆட்சி | மேடம் செவ்வாய் ஆட்சி | இடபம் சுக்கிரன் ஆட்சி | மிதுனம் புதன் ஆட்சி |
| கும்பம் சனி ஆட்சி | இராசிக் கட்டங்களும் கிரகங்களுக்குரிய சொந்த வீடுகளும் | | கடகம் சந்திரன் ஆட்சி |
| மகரம் சனி ஆட்சி | | | சிங்கம் சூரியன் ஆட்சி |
| தனு குரு ஆட்சி | விருச்சிகம் செவ்வாய் ஆட்சி | துலாம் சுக்கிரன் ஆட்சி | கன்னி புதன் ஆட்சி |

# சோதிடம் தரும் பன்னிரண்டு பாவநிலை நியதிகளும்

## போதகன் வேதகன் பாசகன் காரகன் ஆகியோர் நிலைகளும்





சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



சோதிடத்தை விரும்புபவர்களுக்கும் நம்பிக்கை கொண்டுள்ளவர்களுக்கும் இப்பகுதி பிரயோசனமாயிருக்கும் என நம்புகிறோம். சோதிடம் பன்னிரண்டு பாவங்களைக் கொண்டு எமக்கு பலன்களை விபரிக்கின்றன. இதை விட போதகன் வேதகன் பாசகன் காரகன் ஆகிய நான்குகிரகதெசை தொழில் அதிபதிகளும் எமது அன்றாட வாழ்வில் நடைபெறும் மகாதெசைப் பலன்களுக்கு எத்தகைய நிலையில் உதவும் என்பதையும் சோதிடநூல்கள் விபரிக்கின்றன. எனவே வாசக அன்பர்கள் இதனைத் தெரிந்து கொள்வது நன்மை தருவதாயமையும்.

***1ம் பாவம் (லக்கினம்):*** உயிர் என அழைக்கப்படும். ஒருவரது தோற்றம், புத்திவிவேகம், செல்வம் சேமிப்பு நிலை, தெய்வ வழிபாடு, என்பவற்றைக் குறிக்கும்.

***2ம் பாவம்:*** குடும்பஸ்தானம், வாக்குவல்லமை, தனம் தானிய சேர்க்கை, வித்தியாநிலைமை, என்பவற்றைக் கூறும். கண்கள் இருதயம் சார்ந்தவை பற்றியும் கூறும்.

***3ம் பாவம்:*** சகோதரம், வீரம் தைரியம், உணவு வகை, குடும்ப உறவு, இவை பற்றி விபரிக்கும். காது உறுப்பு குறித்தும் விபரிக்கும்.

***4ம் பாவம்:*** இல்லற சுகம், வாகன நன்மை தீமை, இனசனபந்து சுகம், மனை அமைதல், வியாபார முயற்சிகள், காணி நிலம், மற்றும் சலம் சார்ந்த நோய்கள் குறித்தும் தெரிய வைக்கும்.

***5ம் பாவம்:*** புத்திரபாக்கியம், தந்தைநிலை, மாமன் வர்க்கம், சுயமாகக் கற்கும் நிலை, கைகால்கள் நோய் பிணி மற்றும் பெண்களது கர்ப்பம் தரிக்கும் நிலை குறித்தும் அறிய முடியும்.

***6ம் பாவம்:*** எதிரி பகையாளி, நோய் பிணி துன்பம், கடன் பளு, ஆயுதங்களால் கெடுதி, சிறைவாசம் குறித்தும் சொல்லும்.

***7ம் பாவம்:*** களத்திர நிலை. ஆயுள்நிலை மாரகம், மறுதாரம், விவாகம் நிகழ்தல், நல்ல வெகுமதி கிடைத்தல், பொதுசன கௌரவம் புகழ் குறித்து உரைக்கும்.

***8ம் பாவம்:*** மரணம் சம்பவித்தல், ஆயுள் பலம், நோய் பிணி துன்பம் துயரம், ஆயுதங்களால் பாதிப்பு, எதிரிபகையாளி, மற்றும் விஷம் சார்ந்தவை குறித்து எடுத்தியம்பும்.

***9ம் பாவம்:*** தகப்பனார் நிலை, தானதர்மம் நிலை, செல்வநிலை, திருத்தொண்டு, சொத்து சுகம், மற்றும் தனித்த நிலை, அஷ்ட சித்திகள் குறித்தும் விளக்கும்.

***10ம் பாவம்:*** ஜீவனஸ்தானம், தொழில்நிலை, அறிவு புகழ், நல்ல காரியம், புண்ணிய தலம், கருணை மற்றும் ஆடை ஆபரணம் குறித்தும் தெரியத் தரும்.

***11ம் பாவம்:*** இலாபம் குறித்த விபரம், மூத்த சகோதரநிலை, பணம் பொருள் செல்வம், மனச்சந்தோஷம் இவை குறித்து தெளிவுபடுத்தும்.

***12ம் பாவம்:*** சயனம், மோட்சம், விரயம், தேச சஞ்சாரம், திரவிய நாசம், கௌரவம் குறித்து துலங்க வைக்கும்.

இந்த பன்னிரண்டு பாவங்களிலும் (ஸ்தானங்களிலும்) கிரகங்கள் நிற்பதில்லை. காரணம் உள்ளது 9 கிரகங்களே ஆகும். எனவே சில ஸ்தானங்களில் இரண்டு மூன்று நான்கு ஐந்து என கிரகங்கள் சேர்க்கை பெற்றுள்ளதையும் நாம் சிலரது ஜனன நிலை கிரக அமைப்பில் காணக்கூடியதாயிருக்கும். இத்தகைய நிலை கொண்ட சாதகத்தில் பன்னிரண்டு பாவங்களுக்கும் உள்ள அதிபதிகளை அறிய வேண்டும். அவற்றின் நட்சத்திர நியதிகளையும், சாதகரது நட்சத்திர நிலையையும் தெரிந்து கொண்டு குறித்த பாவத்துக்குரிய பலாபலன்களை அறிய முற்பட வேண்டும். இதனடிப்படையில் சோதிடர் பன்னிரண்டு பாவ நிலைகள் மூலம் ஒருவர் தனது வாழ்நாளில் அனுபவிக்கக்கூடிய பொதுவான சிறப்பியல்புகளை விளங்கவைப்பார்.

முன்விபரிக்கப்பட்டவற்றோடு ஒருவர் தனது ஜனன குறிப்பில் காணப்படும் தெசாபுத்திப் பலன்களுடன் போதகன் வேதகன் பாசகன் காரகன் எனத்தொழிற்படும் கிரகநிலை எவையென்பதை அறிந்து தத்தமது கருமங்களில் ஈடுபடுவது சாதகரது கஷ்ட நஷ்டங்கள் குறையவும், பாதிப்புக்களிலிருந்து விடுபடவும் வழிசமைக்கும். இந்த நான்கு தொழிற்படு கிரககாரர்களில் வேதகன் மாத்திரம் நற்பலன்களுக்கு கெடுதியைச் செய்பவர் ஆகிறார். ஏனைய மூவரும் நற்பலன், உத்தம பலன், விஷேடபலன் என அந்தந்த கிரகங்களின் மகாதெசையில் செய்வர் என்க. இதனைத் தெரிவிக்கும் பாடல் ஒன்று கீழே தரப்படுகின்றது.

**கூறுபலனைக் கொடுவென்பான் போதகனும்**
**வேறுபண்ணித் தட்டுவிப்பான் வேதகனும் தேறுபலன்**
**கூட்டுவிப்போன் பாசகனும் கோலமகா திசைக்கே**
**ஈட்டுப்பொருள் காரகனீவான்**

சூரிய தெசையில் சனி பகவான் பாசகன். சுக்கிர பகவான் வேதகன். குரு காரகனாகும். செவ்வாய் போதகனாகும். இவற்றை நோக்கினால் சூரிய மகாதெசையில் கிரகம் நின்ற ஸ்தானம், தெசாபுத்திப்பலன், தெசாநாதன் கொடுக்கும் பலன், சம்பந்தப்படும் இராசியில் கிரகங்கள் நிற்கின்ற பலன் என்பன எல்லாவற்றையும் அனுசாஜீத்து சோதிடர் பலன்களை எடுத்துரைப்பார். சிறப்புக்களை அறிய முடியும்.

சந்திர தெசையில் சுக்கிர பகவான் பாசகன். புதன் வேதகன். சனிபகவான் காரகன். செவ்வாய் போதகன். சந்திர பகவான் கடக ராசியில் நிற்கும் போது குரு உச்சநிலை கொண்டிருப்பின் மிதுன இலக்கினத்தில் பிறந்த சாதகர்க்கு சில சிறப்புத் தரும்.

செவ்வாய் தெசையில் சூரியன் பாசகன். சந்திரன் போதகன். புதன் வேதகன். சனி காரகன். செவ்வாய் மகரத்தில் இருக்கும் போது தனு லக்கினமாயிருந்தாலும், சந்திரன் ஆறாமிடமாகிய இடபத்தில் இருந்தாலும் அபிடமத்தானமாகிய கடகத்தில் இருந்தாலும் பலனை விமரிசையாகக் கொடுப்பார்.

புதன் தெசையில் குருபகவான் போதகன். சந்திரன் பாசகன். செவ்வாய் வேதகன். சுக்கிரன் காரகன். குருபகவான் மீன இலக்கினத்தில் ஆட்சி பெற்றிருக்கும் போது கன்னி லக்கினமாய் இருந்து புதனும் இலக்கினத்தில் ஆட்சி உச்சமாய் பலம் பெற்றிருப்பினும் குரு புத்தியில் விசேட பலன் கிட்டி பிரபு போன்றிருக்க பலன் செய்யும்.

குரு தெசையில் சூரிய பகவான் வேதகன். செவ்வாய் போதகன். சந்திரன் காரகன். சனிபகவான் பாசகன். ஜனன இலக்கினம் தனு அல்லது மீனமாயிருந்து குருபகவான் ஆட்சி பெற்றிருந்தால் தனது தெசையில் பலனைத் தருவார். சூரியன் வேதகனாய் இருப்பினும் சிங்கம் இராசியில் ஆட்சி பெற்றிருந்தால் கஷ்டம் அணுகாமல் சுகலாபத்தையே அனுபவிக்கச் செய்வார்.

சுக்கிர தெசையில் வியாழன் போதகன். புதன் பாசகன். சூரியன் காரகன். சனி வேதகன். சுக்கிரன் மீனம் லக்கினத்தில் இருக்கும் போது குரு தனு ராசியில் ஆட்சி பெற்றும், சூரியன் சிங்கம் ராசியில் ஆட்சி பெற்றும் காணப்படும் தனு லக்கினத்தில் பிறந்த சாதகர் பிரபு போன்று வாழ்வதற்கு பலன் அமையும்.

சனி தெசையில் சந்திரன் போதகன். செவ்வாய் வேதகன். சுக்கிரன் பாசகன். குருபகவான் காரகன். எனினும் கும்பம் லக்கினத்தில் ஜனித்தவர்க்கு சனி துலாம் இராசியில் உச்சம் பெற்றிருந்தால் அந்த சாதகர் சனி தெசையில் விஷேட பலன்களை அனுபவிப்பர். அத்தோடு செவ்வாய் வேதகனாய் இருப்பினும் கும்ப லக்கினத்தில் செவ்வாயும் மீனத்தில் குருவும் இருந்தால் அந்த சாதகர் கல்வியில் நல்ல தேர்ச்சிகள் பெறவும் நல்ல அரச உயர் பதவிகள் பெறவும் பலன்கள் கிடைக்கும்.

ராகு கேது கிரகங்களுக்கு எதுவுமே சொந்த வீடாக பன்னிரண்டு இராசிகளிலும் இல்லாத காரணத்தால் முன் சொல்லப்பட்ட போதகன் வேதகன் பாசகன் காரகன் நிலைகள் எதுவும் பலாபலன்களுக்கு அமைவதில்லை.

இவ்வாறு பலாபலன்களை சோதிடர் மூலம் கேட்டறிந்து தத்தமது கருமங்களை முன்னெடுப்போர் எல்லோரும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆதாரமாய் விளங்கும் தெய்வ வழிபாடுகளையும் சிறப்பு அர்ச்சனை வழிபாடுகளையும் செய்வது அவசியமாகும். விபரம் பின்வருமாறு:

**சூரியன்** - சிவன் வழிபாடும் சூரிய நமஸ்காரமும்.
**சந்திரன்** - அம்மன் வழிபாடும் லக்ஷ்மி நமஸ்காரமும்.
**செவ்வாய்** - முருகன் வழிபாடும் வைரவர் வழிபாடும்
**புதன்** - மகாவிஷ்ணு வழிபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும்
**வியாழன்** - தெட்சணாமூர்த்தி வழிபாடும் குரு வழிபாடும்
**வெள்ளி** - துர்க்கை வழிபாடும் லக்ஷ்மி நமஸ்காரமும்
**சனி** - சனீஸ்வரர் வழிபாடும் ஆஞ்சநேயர் வழிபாடும்.
**இராகு** - பத்திரகாளி வழிபாடும் விநாயகர் வழிபாடும்.
**கேது** - அம்மன் வழிபாடும் விநாயகர் வழிபாடும்.

எந்த தெசை எந்த தெசாபுத்தி என்பதை அனுசாஜீத்து மேற்படி வழிபாடுகளைச் செய்ய வேண்டும். சிறப்பு அர்ச்சனை எனச் சொல்லும் போது மலர்கள் பட்டுக்கள் தானிய நிவேதனம் நெய்தீபம் எள்தீபம் என்பவை அடங்கியிருக்கும். சாதாரண அர்ச்சனையில் பெயர் நாமம் நட்சத்திரம் மட்டுமே அடங்கியிருக்கும் என்பதையும் அறிவீர்களாக.

**"எல்லோரும் எல்லாமே பெற வேண்டும்**
**இங்கு இல்லாமை இருள் நீங்க வேண்டும்."**



# சூழல் மாசுக்களில் இருந்து முகத்தை பாதுகாக்க

## வாரம் ஒரு பேசியல்

**அழகுக்கலை நிபுணர் சுகந்தினி**
New lovers corner

நாம் அழகாகஇருக்கவேண்டும் என்று நினைக்காத பெண்களேம் இல்லை. இதனால் அழகுக்கலை நிலையங்களிற்கு செல்லாத பெண்களும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். பெண்கள் தமது அழகிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் அவ்வளவு.

ஆனால் எமது நாட்டை பொறுத்தவரை குறிப்பாக வடக்கில் பெண்களின் அழகிற்கு எதிரி சூழல்மாசுகளும், சூரியக்கதிருமே.

இவற்றில் இருந்து எமது முகத்தை பாதுகாக்கவும் பொலிவாக வைத்திருக்கவும் இலகுவாக வாரம் ஒரு முறை செய்யும் பேசியல் பற்றி பார்ப்போம். இப் பேசியல் இலகுவானதுடன் விலை குறைந்தது மட்டுமன்றி இதன் பயன் முகத்தில் உள்ள அழுக்குகளை நீக்கி சுத்தப்படுத்துவதும் ஆகும்.

**தேவையான பொருட்கள்**

பேஸ்வோஸ் (பேசியல் செய்து கொள்ளப் போபவரின் தோளின் தன்மைக்கு ஏற்ப அல்லது அவர் வழமையாக பயன்படுத்தும் பேஸ்வோஸ் சிறந்தது), கிளீன் ஸ்கின், மில்க், ஸ்கிறப், ரோனர், மசாஜ் கிறீம், பக் (மாஸ்க்), சன் லோசன்

**செய்முறை**

பேஸ்வோசினை கொண்டு இரண்டு நிமிடங்கள் நன்கு முகத்தை சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் கிளீன் ஸ்கின் மில்க் போட வேண்டும் அதன் பின்னர் தேவைக்கேற்ப ஸ்கிறப்பை கொண்டு மசாஜ் செய்ய ஆரம்பிக்க வேண்டும். இந்த ஸ்கிறப் மசாஜ் மூலம் முகத்தில் உள்ள கரும் புள்ளிகளை அகற்ற முடியும்.

இதனை செய்யும் பொழுது கழுத்துப் பகுதிக்கு உள்ளங் கைகளால் கீழிருந்து மேலாக மசாஜ் செய்து கன்னப் பகுதிக்கு நான்கு விரல்களையும் கொண்டு கீழிருந்து மேல் நோக்கி அல்லது மேலிருந்து கீழாக மசாஜ் செய்து கொள்ளும் பொழுது மூக்கின் இரு பகுதியையும் பெரு விரல் கொண்டும், தாடைப்பகுதியை உள்ளங்கை கொண்டும், உதடுகளின் மேல், கீழ்ப்பகுதியை சுட்டு விரல் நடுவிரல் கொண்டு இரு கைகளாளும் வலது இடம் என்றும், நெற்றிப் பகுதியை நடு மூன்று விரல் கொண்டும் மசாஜ் செய்து கொள்ள வேண்டும்.

இப்படி ஒவ்வொரு பொருளையும் பயன்படுத்தி செய்யும்போதும் கொட்டன் பஞ்சு கொண்டு முகத்தை துடைக்க வேண்டும். அவ்வாறு கொட்டன் பஞ்சு கொண்டு துடைத்து விட்டு ரோனர் போட்டுக் கொள்ள வேண்டும்.

அதன் பின் நான்கு நிமிடங்கள் கடந்ததும் மசாஜ் கிறீம் போட்டு எட்டு வடிவம் உடைய மசாஜ்சினை செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்த பின் கொட்டன் துணியால் நன்கு முகத்தை துடைத்து விட்டு மாஸ்கினை முகம், கழுத்து, காது, என மசாஜ் செய்த இடங்களுக்கு நன்கு போட்டு இருபது நிமிடங்கள் விட்ட பின்னர் கழுவுதல் வேண்டும் அதன் பின்னர் சன் லோசன் போட வேண்டும்.

இப்படி வாரம் ஒரு முறை நீங்கள் உங்கள் கைகளால் சுயமாகவோ இல்லை அழகுக்கலை நிலையங்களிற்கு சென்று குறைந்த



செலவுடன் இதனை செய்து கொள்ளும் பொழுது உங்கள் முகம் பழிச்சென்று பரு மற்றும் கருவளையங்கள் இல்லாமல் எப்பொழுதும் அழகாக தோன்றும்.

“வீட்டில் இருந்து சுயமாக செய்வது கடினம் எமக்கு நாமே செய்யும் பொழுது கையுழைவு ஏற்படுவதால் நன்றாக மசாஜ் செய்ய முடியாமல் போகும். பயன் குறைவாகி விடும்.

# பேரீச்சம் பழத்தின் மருத்துவ குணம்


பேரிச்சம் பழம் என்றாலே விரும்பி உன்பவர்கள் அதிகமானவர்கள். ஆனால் இனிப்புதன்மைகூடஎன்பதனால் சிலர் ஒதுக்கி விடுகின்றார்கள். அத்தோடு விலையும் அதிகம் என்பதனால் அதிகமானவர்கள் இதனை வாங்கி உண்பது குறைவு. ஆனால் இதில் உள்ள மருத்துவ குணம் பற்றி அறிந்து கொண்டால் இனி இதனை உட்கொள்ள தவறமாட்டீர்கள்.

கண்பார்வை குறைபாட்டை குணப்படுத்த சிறந்த மருந்து பேரீச்சம் பழமே. இதில் விட்டமின் 'ஏ' அதிகமாக உள்ளது. மாலைகண் நோயால் பாதிக்க பட்டவர்கள் தேனுடன் பேரீச்சம் பழத்தை கலந்து ஊற வைத்து சாப்பிட்டு வர உடலுக்குதேவையான அனைத்து சத்துக்களும் கிடைக்கும்.

எந்த காரணமும் இன்றி உடல் இளைத்திருந்தாலும், அவர்கள் பேரீச்சம்பழத்தைத் தாராளமாகச் சாப்பிடலாம். பேரீச்சம்பழத்தை முறையாக உணவோடு சேர்த்துக் கொள்வதால், மெலிந்த உடல் தேறும். களைப்பு நீங்கும். தாது விருத்தியும் பலமும் உண்டாகும்.

பேரீச்சம் பழத்தை விதை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சிய பசும்பாலில் சேர்த்துக் கலந்து, தேன் 2 ஸ்பூன், ஏலக்காய் 3, குங்குமப்பூ 5 இதழ்கூட்டிக் கலந்து பருகலாம். இதற்கு இணை யான ஒரு டானிக் கிடையாது.

தினமும் இரவில் படுக்க செல்லும் முன்னர் ஒருடம்ளர் காய்ச்சிய பசும் பால் மற்றும் இரண்டு பேரிச்சம்பழத்தினையும் உண்டுவந்தால் உடல் நல்ல பலம் பெறும். புதிய ரத்தம் உண்டாகும். தோல்பகுதிகள் வழுவழுப்பாகவும் மிருதுவாகவும் இருக்கும்.



# சமையலறையினை சுத்தமாக வைத்திருக்க ஐந்து வழிகள்

என்ன தான் காலம் வேகமாக சென்றாலும் நம்ம வீட்டு அம்மா மாரிடம் மாற்ற முடியாத சில பழக்கங்கள் இருக்கவே செய் கின்றன. ஆப்படியான சின்ன சின்ன பிரச்சினைகள் சமையலறை யின் சுத்தம் மற்றும் அழகை கெடுத்து விடுகின்றன என்பதனை மறந்து விடக் கூடாது. ஆகவே சமயலறை யினை அழகாக வைத்திருக்க சில டிப்ஸ் உங்களுக்காக.

1 பாத்திரங்களை சமைத்தவுடன் உடனுக்குடன் கழுவி துணி கொண்டு துடைத்து அடுக்கி வைப்பதே சிறப்பானதாகும். இதனால் பாத்திரங்கள் துரப்பிடிப்பது கறல்கள் படிவது போன்ற விடயங்களில் இருந்து பாத்திரங்களை நீண்ட நாள் பாதுகாக்க முடியும்.

2 பொருட்களை சரைகளில் நம்ம கடைகளில் சரைகளில் தான் சுற்றி கொடுப்பார்கள் அல்லவா. ஆதை வாங்கி வந்து நம்ம வீட்டு அம்மாமார் அப்படியே போத்தல்களில் சரையுடனே வைத்து மூடி வைப்பார்கள். இதனால் சீரகம் கடுகு தூல்வகைகள் போன்ற பொருட்கள் இளகி போகவும் பூஞ்சனம் பிடிக்கவும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது. ஆக்வே அவற்றை ஒரு முறை அவில்த்து பெட்டியில் பரவி காயவிட்டு அதன் பின்னர் ஈரம் இல்லாத போத்தல்களில் இட்டு நன்றாக மூடி வைப்பதால் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

3 தேங்காய் துருவியவுடன் பல வீடுகளில் தேங்காய் துருவாளை அப்படியே துடைத்து விட்டு வைத்து விடுவார்கள். அதனால் தான் துருவலில் கொசு வந்து அடுக்கலை முழுதும் கொசு வரும் வாய்ப்பு உருவாகின்றது. எனவே திருவியவுடன் கழுவி துணி கொண்டு துடைத்து துருவும் பகுதிக்கு கவர் போட்டு வைப்பதே சிறந்த சுகாதாரம் ஆகும்.

4 உப்பினை போத்தலில் இடும் பொழுது பலரும் போத்தலின் தன்மையினை கவனிப்பது இல்லை. அதனால் தான் சில வீடகளில் எவ்வளவு தான் உப்பு போட்டாலும் உப்பு சுவை உணவில் இருப்பதில்லை. எனவே உப்பினை கறுத்த போத்தல்களில் போட்டு சூரிய வெப்பம் அடுப்பின் வெப்பம் மின்சாரத்தின் வெப்பம் படாத வகையில் வைக்க வேண்டும். காரணம் இந்த ஒளி வெப்பத்தில் அயடீன் கரைந்து விடும். ஆதனால் தான் சுவையும் குறைகின்றது. அயடீன் சத்தும் உடலில் சேராமல் போகின்றது.

5 சமைக்கும் பொழுது காய்கறி கழிவுகளை பேப்பர் ஒன்றில் போட்டு அதனை கழிவு பெட்டிக்குள் போட்டுவிடலாம். ஆனால் பல வீடுகளில் சமயல் தட்டில் வைத்து வெட்டி விட்டு அப்படியே கழிவுகளை அள்ளி பெட்டிக்குள் போடுவார்கள் பல அம்மாமார். இதனால் கொசு மற்றும் கயர் என்பன வரக் கூடும். அத்தோடு காய்கறிகள் யாவும் தற்காலத்தில் மருந்து அடிக்கப்பட்டவை என்பதால் வெட்டுவதற்கு முன்னர் 2மணி நேரம் தண்ணீரில் ஊற விட்டு அதன் பின்னர் வெட்ட வேண்டும்.

### 1-ம் பக்க தொடர்ச்சி

இருந்த கூட்டணி, மகிந்த ராஜபக்ச அதனை உடைக்க தலைகீழாக நடந்தும் முடியாமலிருந்தது எப்படி இப்பொழுது நடக்கிறதென ஆராயப் புறப்பட்டால், பெரிய பூதமே கிளம்புகிறது. அமைதியாக இருந்த தமிழ் அரசியலிற்குள் அமெரிக்கா புகுந்து விளையாடிய அதிர்ச்சிக்கதைகளெல்லாம் வெளியாகிறது.

இந்த சிக்கலின் அடிப்படையே, 'அது கிடக்குது ஓரமா' பாணியில் கூட்டணி தர்மங்களை புறந்தள்ளி தமிழரசுக்கட்சிக்காரர்கள் நடந்து வருவதுதான் காரண மென்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

தமிழ்தேசிய கூட்டமைப்பென்று இயங்கி வந்தாலும், அதன் தீர்மானங்களை தமிழரசுக்கட்சியின் இரண்டு, மூன்று பேர்தான் எடுக்கிறார்கள் என பல காலமாகவும், அவர்களின் தீர்மானங்கள் மக்கள் நலன் சார்ந்ததல்ல என அண்மைக்காலமாகவும் மற்றக் கட்சிக்காரர்கள் தொடர்ந்து கூறி வந்ததுடன் குடைச்சலும் கொடுத்து வருவதையடுத்தே இந்த தீர்மானத்திற்கு கட்சி தலைமை வந்ததாக தெரிகிறது. எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு 'சாமி தரிசன சுற்றுப்பயணம்' ஒன்றை செய்திருந்தார். அந்த பயணத்தின் நோக்கமே மக்களின் உணர்வுகளை நாடிபிடித்து பாரப்பதுதானாம்.

போர்க்குற்ற விசாரணை விவகாரம் மற்றும் ஜெனீவா அமர்வுகளில் மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்க தமிழரசுக்கட்சியின் பிரதிநிதிகள் தவறிவிட்டனர் என பரவலாக விமர்சனங்கள் எழுந்து வரும் நிலையில், இரண்டாம் மூன்றாம் மட்ட தலைவர்கள் போனால் மக்கள் நாக்கைப் பிடுங்கும் கேள்வி கேட்பார்கள், நானே சென்று சமாளிக்கிறேன் என தலைவரே களமிறங்கினார் என்கிறார்கள்.

#### புலிகள் போட்ட பிள்ளையார் சுழி

தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு பிள்ளையார் சுழி போட்டவர்கள் விடுதலைப்புலிகள். தமிழர் விவகாரம் சர்வதேச பிரச்சனையாகி சர்வதேசநாடுகள் பல சம்பந்தப்பட தொடங்கியதும், புலிகளிற்கு ஒரு ஜனநாயக முகம் தேவைப்பட்டது. உடனே தமிழ்தேசிய கூட்டமைப்பை உருவாக்கினார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ போன்ற கட்சிகள் அப்பொழுது அங்கத்துவம் பெற்றன. புளொட் பேச்சுவார்த்தையுடனேயே பின்வாங்கிவிட்டது. புலிகள் விதித்த நிபந்தனையொன்று புளொட்டிற்கு ஒத்துவரவில்லை. அதாவது கூட்டமைப்பில் இணைபவர்கள் புலிகளை ஏகபிரதிநிதிகள் என பகிரங்கமாக ஒத்துக்கொள்ள வேண்டும். தமிழரசுக்கட்சி உள்ளிட்ட நான்குகட்சிகளும் ஒத்துக்கொண்டு கட்சியமைத்தன.

அதன்பின்னர் புலிகள் இருந்தவரை எல்லோரும் நல்ல பிள்ளைகளாக இருந்தனர். 'உச்சா' போவதென்றாலும் கிளிநொச்சிக்கு போன் பண்ணி சொல்லாத குறையாக பவ்வியம் காட்டினார்கள். அதிலும் நமது வயதான தலைவர்களின் பவ்வியத்திற்கு ஒரு அளவில்லாமல் இருந்ததாம். புலிகளின் அரசியல்த்துறை பிரமுகர் ஒருவர் அப்போது சொல்லியிருந்தாராம் 'இவர்கள் இவ்வளவு நல்லவர்களாயிருக்கிறார்களே' என.



#### அறுபட்ட மூக்கணாங்கயிறு

ஆனால் இந்தப்பவ்வியமெல்லாம் 2009 இல் பறந்துவிட்டது. புலிகள் இயக்கம் அழிந்தபின்னர், 'ஓ... அவையா... நாம் வன்முறையை ஏற்றுக்கொள்ளவில்லை... அவர்களின் வீரத்தை மெச்சுகிறோம்' என கூலாக பேசிவிட்டு செல்லத் தொடங்கினார்கள் நமது தலைவர்கள்.

மூக்கணாங்கயிறு அறுபட்டால்பிறகென்ன?. நாலுகட்சிக்காரர்களும் நாற்பது பக்கத்தில் நின்றனர். மாறிமாறி குற்றம் சுமத்தினார்கள். ஏன் இந்த பிச்சல் பிடுங்கல் என கேட்டால் மாறிமாறி கைகாட்டினார்கள்.

புலிகள் இல்லாமல் போனதுமே தனித்து செல்லும் போக்கை தமிழரசுக்கட்சி தொடங்கிவிட்டதென்பது மற்ற கட்சிகளின் குற்றச்சாட்டு. முக்கிய தீர்மானங்கள் எடுக்கும்போதோ அல்லது இராஜதந்திர சந்திப்புக்களின் போதோ மற்றக்கட்சிகளை ஒதுக்கும் நடவடிக்கையில் தமிழரசுக்கட்சி ஈடுபடுகின்றதென்பது மற்ற மூன்று கட்சிகளினதும் நீண்ட நாள் குற்றச்சாட்டு. இதற்கு தமிழரசுக்கட்சி உத்தியோகபூர்



வமாக இதுவரை பதிலளிக்கவில்லை. ஆனால் சில உள்ளூர் தலைவர்கள் 'நாங்கள்தானே பெரிய கட்சி. அப்படித்தான் நடப்போம்' என எகத்தாளமாக பேசியதாகவும் கூறப்படுகிறது.

தமிழரசுக்கட்சிக்கு தனித்துச் செல்லும் நோக்கம் நீண்டகாலமாக இருக்கிறதென்பதற்கு ஆதாரமாக மற்றக்கட்சிக்காரர்கள் சொல்லும் காரணம் கொஞ்சம் வலுவானதுதான். கூட்டமைப்பை பதிவு செய்யும் விவகாரம் இழுபறியில் செல்வதுதான் அது.

நான்கு கட்சிகளும் பிச்சல் பிடுங்கல் பட்டுக்கொண்டிருப்பதை பார்த்து சனங்களே வெறுத்துப் போய், 'கூட்டமைப்பை பதிவு செய்து, உங்களிற்குள் ஒரு முறையான நிர்வாக கட்டமைப்பை ஏற்படுத்துங்கள்' என பகிரங்கமாகவே முணுமுணுக்கும் நிலையேற்பட்டுவிட்டது. பலகாலமாக பலரும் இதனை வலியுறுத்தி வருகிறார்கள். மன்னார் ஆயர் இதற்காக தீவிர முயற்சியே செய்து பார்த்தார். ஆயர் பக்கவாதத்தில் விழுந்ததுதான் மிச்சம். தமிழரசுக்கட்சி அசைந்து கொடுக்க மாட்டேன் என்றுவிட்டது.

கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டுமென சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைகீழாகவே நடந்து பார்த்தார். விளைவுஞ் அவர் தேர்தலில் தோல்வியடைய வேண்டியதாகிவிட்டதென் கிறார்கள் ஆதரவாளர்கள். அதாவது, சுரேஷ் பிரேமச்சந்திரனின் தோல்வியும், கூட்டமைப்பிற்குள் அவர் செய்ய 'ஜனநாயகப் போராட்டமும்' ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை என்பது அவரது ஆதரவாளர்களின் வாதம்.

#### பரிதாப பங்காளிகள்

இந்த பேச்சு எழுந்து சர்ச்சையாகும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், 'பேசலாம், பதியலாம்' என்ற பாணியில் தமிழரசுக்கட்சி தலைவர்கள் நீண்டகாலமாக பதிலளித்துக் கொண்டு வந்தார்கள்.

நான்கு கட்சிகளிற்குமிடையில் ஒப்பந்தமொன்றை செய்வோம், அதற்கான யாப்பை தயார் செய்யுங்கள் என ஒரு கட்டத்தில் பங்காளிக்கட்சிகளிடம் கூறியுள்ளனர். பங்காளி கட்சிகள் மூன்றும் இழுத்துப்போட்டுக்கொண்டு உட்கார்ந்து ஒரு யாப்பை தயாரித்தார்கள்.

கட்சிக்குள் எப்படி சமத்துவத்தை பேணுவதென்பதை அடிப்படையாக கொண்டு ஒரு முழுமையான யாப்பை தயாரித்து, கட்சித்தலைமையிடம் கொடுத்திருக்கிறார்கள்.

கொடுத்துவிட்டு காத்திருந்தார்கள். காத்திருந்தார்கள்... காத்திருந்தார்கள். காத்திருப்பின் எல்லைவரை காத்திருந்தார்கள். பல மாதங்களின் பின்னர் அண்மையில்த்தான் இது பற்றிய சர்ச்சை மீண்டும் எழுந்தது. அப்போதும் தமிழரசுக்கட்சிக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'பதியச் சொல்லி குடைச்சல் கொடுக்கீறீர்கள்.. சரி, நான்கு கட்சியும் எப்படி இயங்குவதென்ற யாப்பை தயார் செய்யுங்கள்' என.

பங்காளிகள் பதகளித்துப் போய், ஏற்கனவே ஒன்று தயாரித்து தந்தோமே. அதைக்கூட மறந்துவிட்டீர்களா என கொதித்திருக்கிறார்கள். 'அப்படியொன்று தந்தீர்களா' என அவர்கள் ஆளையாள் பார்த்திருக்கிறார்கள். தலைவர் சம்பந்தனும், 'அப்படியொன்று வரலயேப்பா' என கையை விரித்திருக்கிறார். கடைசியில் சுரேஷ் பிரேமச்சந்திரன்தான், 'பாராளுமன்ற அறைத்தொகுதியில் வைத்து நான்தானே உங்களிடம் தந்தேன்' என ஞாபகப்படுத்தியுள்ளார். 'ஓ.. வயசாயிடுச்சில்ல.. அதான். வீட்டில இருக்கும்' என அசால்ட்டாக சொல்லிவிட்டு போய்விட்டாராம்.

#### ஆப்பு வைத்த அமெரிக்கா

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பிளவு பகிரங்கமாகவும், தமிழரசுக் கட்சி தனி வழியில் செல்லவும் அமெரிக்காவும் காரணம் என்றால் உங்களிற்கெல்லாம் தலைசுற்றுமல்லவா.

அமெரிக்காவும் இந்த சிக்கலிற்கு மறைமுகமான காரணங்களில் ஒன்று என்பதுதான் அதிர்ச்சியான உண்மையென்கிறார்கள் மற்றக் கட்சிக்காரர்கள்.

மகிந்த ராஜபக்சவை வீட்டுக் கனுப்ப வரிந்து கட்டிக்கொண்டு ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் தீர்மானத்திற்கு மேல் தீர்மானம் கொண்டு வந்து மகிந்த ராஜபக்சவின் தலைமுடியை பிடித்து உலுப்புஉலுப்பியது.

மகிந்த வீட்டிற்கு போய்விட்டார். இனி தீர்மானத்திற்கு வேலையில்லை. யு ரேர்ன் அடித்து திரும்ப வேண்டும். ஆனால் வெளியில் தெரியக்கூடாது. இதுவரை காலமும் தமிழர்களின் காவலன் பாத்திரம். கதாநாயகன் ஒரேநாளில் வில்லனாக முடியாதல்லவா? அதற்கு தமிழரசுக்கட்சியின் உதவியை நாடினார்கள். சர்வதேச விசாரணை கோரி சங்கடப்படுத்தாதீர்கள் என்பது அமெரிக்காவின் வேண்டுகோள். இதற்கு தலையசைத்து, சர்வதேச விசாரணை கோரிக்கையை கைவிட்டு விட்டது தமிழரசுக்கட்சி. இது மற்றைய கட்சிக்காரர்களின் கறாரான குற்றச்சாட்டு. அமெரிக்கா புகுந்த நாடு உருப்பாடாதென்பது அவர்கள் வாதம்.

அமெரிக்கா தீர்மானத்தை வரவேற்பதாக தமிழ்தேசிய கூட்டமைப்பின்பெயரில்ஒருஅறிக்கையை தமிழரசுக்கட்சிக்காரர்கள் வெளியிட, அதை மறுத்து தமிழர்கள் கோரியது இந்த தீர்மானத்தையல்ல, தீர்மானத்துடன் எமக்கு உடன்பாடில்லையென பங்காளிகள் அவசர மறுப்பு வெளியிட்டதெல்லாம் இந்த சர்ச்சைகளின் தொடர்ச்சிதான்.

#### ஐயாவிடம் திட்டமிருக்கு!

தமிழரசுக்கட்சிக்காரர்களிடம் இது பற்றி கேட்டால் அவர்கள் வேறுவிதமாக பேசுகிறார்கள். 'சர்வதேச விசாரணையை நாங்கள் ஒரேயடியாக கைவிட்டுவிட்டோமென சொல்ல முடியாது. வல்லரசு நாடுகள் எடுக்கும் முடிவுகளை நாங்கள் எதிர்க்க முடியாது. ஒத்துழைத்து செயற்பட்டுத்தான் ஏதாவது வாய்ப்பு வருகிறதா என்பதை பார்க்கலாம். எப்படியோ தலைவர் ஐயா எல்லாவற்றையும் சமாளிப்பார். ஐயாவிடம் திட்டமிருக்கும்' என்கிறார்கள்.

தமிழரசுக்கட்சிக்காரர்கள் ஒரு சிலரிடம் தமிழ்மக்களின் உரிமையை அடகுவைக்க மாட்டோம் என பங்காளிகளும், எல்லாவற்றையும் கேள்விகேட்டு பங்காளிகள் குடைச்சல் தருகிறார்கள் என தமிழரசுக்கட்சிக்காரர்களும் சிந்திப்பதே பிரச்சனையின் அடிப்படை.

இதற்குள் வடக்கு முதல்வர் வேறு தமிழரசுக்கட்சிக்கு தலையிடி கொடுக்கிறார். சிலவேளைகளில் முதல்வர், பங்காளிகள், தமிழ்தேசிய மக்கள் முன்னணியெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் சேரலாம், நாங்கள் எதுவும் செய்யவில்லையென சொல்லி அவர்கள் தனிவழி சென்றால் சிக்கலாகிவிடும், முந்திக் கொள்ள வேண்டுமென நினைத்தே தமிழரசுக்கட்சி தனிவழி செல்லும் முடிவை எடுத்ததாக சொல்லப்படுகிறது.

ரணில்விக்கிரமசிங்கா என்றாலே, 'எச்சரிக்கையாக இருக்க வேண்டும்' என்பதுதான் தமிழர்கள் கற்ற பாலபாடம். அரசியலில் அப்படியொரு சாணக்கியன். உடைக்க முடியாதென இருந்த அனைத்தையும் உடைத்துப் போட்ட தந்திரசாலி; தமிழரசுக்கட்சிக் காரர்களுடன் ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது நல்ல நெருக்கமாக இருக்கிறார். இந்த விபரீதத்தின் பின்னணியும் அதுதான் என்றும் சிலர் கூறுகிறார்கள்.

தமிழரசுக்கட்சி தனிவழி செல்லும் ஆயத்தநடவடிக்கைகளில் இறங்கிவிட்டதாக தெரிகிறது. அண்மையில் கட்சி உயர்மட்ட கூட்டத்திலும் இதனை ஆராய்ந்தார்கள் என்று கூறப்படுகிறது. வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அதிகளவில் தமிழரசுக்கட்சிக்கரார்களை களமிறக்கி வெற்றி பெற வைத்துவிட்டால் போதும். அவர்களை வைத்தே பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்றுவிடலாமென தமிழரசுக்கட்சி தலைமை கணக்குப்போட்டுள்ளது.

எது எப்படியோ, அப்படியொரு நிலை வருவது தமிழ் மக்களிற்குத்தான் பெரிய பின்னடைவாக ஆகப் போகிறது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைக்க முன்னைய அரசு தலைகீழாக நின்றும் எதுவும் முடியாமல் போனது. ஆனால், அமெரிக்கா, ரணில் கூட்டணி அதை சாதிக்கப் போகிறது போலவே தென்படுகிறது.

பத்து வருடங்களின் முன்னர் தமிழர்கள் மத்தியில் ஏற்பட்ட பிளவின் ரணங்கள் இன்னும் ஆறாமல் சுமந்து கொண்டிருக்கையில் இன்னொருபிளவென்றதும் ஆத்மா நடுங்குகிறது. மக்களிடம் மட்டுமல்ல, நமது அரசியல்வாதிகளிடமும் விழிப்புணர்வு அவசியம்!



பி.சியா
siyapj27@gmail.com



# திருமணம் என்னும் சுவாரஸ்யம்

'கல்யாணம் என்பது ஆயிரம் காலத்து பயிரம்மா அதை புரிஞ்சுகிட்டா தான் நீயும் பெண்ணம்மா' என்று நம்ம கலியுக கவிஞன் சும்மாவா சொன்னார்.

திருமணம் என்பது வௌவேறு குடும்பங்களில் பிறந்து வேறு வேறு வளர்ப்பினை அனுபவித்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒன்றினைவது மட்டும் அல்ல. இரு குடும்பங்கள் சொந்தமாவதும் கூட. இவர்களுக்கு ஏறப்ப அவர்கள் பழக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஏற்ப்ப இவர்கள் பழக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் புதிய உறவுகள் புத்துணர்வுடன் சந்தோசமாக வாழ முடியும். மொத்ததில் மனித வாழ்வின் இசை வாக்கத்தை திருமண சடங்கு தெளிவாக காட்டுகின்றது.

திருமணம் என்பது ஒரு நாள் அல்ல இந்துக்களின் முறையில் பல நாட்கள் கொண்டாடப்படும் நிகழ்வு.ஒவ்வொருநாளும்ஒவ்வொரு சடங்கு முறை ஒவ்வொன்றும் மிக மிக அவசியமான கருத்துடையவை. அவ்வாறு 30 சடங்கு முறைகள் காணப்படுகின்றன.

மணவறையில் உட்காரப்போகும் தம்பதிகளுக்கு அந்த திருமண முறைகள் எல்லாம் புதிதாகவே தெரிகின்றது. அரிவரியில் ஆசிரியர் கைபிடித்து 'அ' எழுதிவித்தது போல் இன்று பூசகர் அவர்களின் கைகளை பிடித்து இப்படி செய்யுங்கள் அப்படி செய்யுங்கள் என்று அவர் தனக்கு தெரிந்தவரை கட்டாயமான வழக்கத்தில் மாறாத சடங்குகளை செய்வீத்து தாலிகட்டும் மணவறை நிகழ்வை குறைந்தது 20 நிமிடத்தில் முடித்து விடுகின்றமை சிந்திப்பதற்குரியதே.

> **ஒருவரை ஒருவர் பிரியாதிருப்போம் என்று கையைப் பிடிக்கிறேன் என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்கவேண்டும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடித்தல் வேண்டும்.**

இவ்வாறு இடம்பெற வேண்டிய நமது சடங்கு முறைகள் எவை? அந்த முறைகள் யாவும் நமது முன்னோர் களால் எதற்காக எப்படியான முறை களில் கடைப்பிடிக்கப்பட்டன? ஆனால் இன்று அவை எப்படி மாறியுள்ளன என்று பாரப்போமா..

## நிச்சயதார்த்தம் செய்தல்

இரு வீட்டாரும் முதலில் ஜாதகப் பொருத்தத்தை ஆராய்வார்கள். ஜாதகம் பொருத்தமாக அமைந்தால் பெண்பார்பார்ப்பார்கள். முன்னர் பெண்பார்க்கும் பெழுது வீட்டில் தான் பார்ப்பது வழக்கம் ஆனால் இன்று பெண்ணை பொது இடங் களில் பார்ப்பது வழக்கமாக மாறி வருகின்றது. மணப்பெண்; மணமக னுக்கும் மணமகன் வீட்டாருக்கும் பிடித்திருந்தால் பெண் வீட்டாருக்கு தமது சம்மதத்தைத் தெரிவிப்பார். அதன்பின் நிச்சயதார்த்தத்தை உறுதி செய்யப்படும். ஆனால் இப்பல்லாம் வழக்கத்துக்கு மாறாக பெண்ணும் சம்மதம் சொல்லனும் பெண்ணிற்கு சம்மதம் இல்லையோ மாப்பிளை வந்த வழி பார்த்து கிளம்ப வேண்டியது தான்.

அதன் பின்னர் பெண் வீட்டார் நல்ல நாள் பார்த்துச் தாம்பூலம் பலகாரம் பழங்களோடும் உறவினர் களோடும் மணமகன் வீட்டிற்கு செல்வர். இதன்பின் இருவீட்டாரும் திருமணநாளைச் சோதிடரிடம் கேட்டு நிச்சயிப்பர். அத்தோடு பொன்னுருக்கலிற்கும் ஒரு நாளை நிச்சயிப்பர். ஆனால் இன்று சோதிடரை வீட்டிற்கு அழைத்து நாள் குறிக்கும் காலம் போய் சோதிடரை நாடி கோவிலுக்கு போய் நாள் குறித்து வருகின்றனர். அதுவும் பெண் வீட்டார் தான் நாள் வைப்பது ஆண் வீட்டார் தான் நாள் வைப்பது என்பது போய் யாருக்கு வசதியோ அவர்கள் நளை குறித்து தொலைபேசியில் நிச்சயம் வைக்கும் காலமாகி விட்டது.

## பொன்னுருக்கல்

திருமண நாளுக்கு முன்பு ஒரு சுப நாளில் மணமகன் இல்லத்தில் அல்லது ஆசாரி தொழில் செய்யும் இடத்தில் பொன்னுருக்கல் நிகழ்வு நடைபெறும். இதில் மணமகனும் உறவினர், நண்பர்களும், மணப் பெண்ணைத் தவிர பெண்ணின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்துகொள்வர். பெண்வீட்டார் ஓர் இனிப்புப் பண்டம் (கொழுக் கட்டை மோதகம்) கொண்டு செல்லுதல் சம்பிரதாய வழக்கம். இவற்றை வீட்டில் செய்து தான் கொண்டு செல்வர். ஆனால் இன்று கடையில் வாங்கு கின்றனர் இல்லை வேறேதும் இனிப்ப பாண்டம் இல்லையேல் சிம்பிலாக கர்க்கன்டுடனே விசயம் முடிந்து விடுகிறது.

மணமகன் வீட்டு வாசலில் முறைப்படி நிறைகுடம் குத்து விளக்கு பன்னீர்தட்டு குங்குமம் சந்தனம் வைத்து பொன்னுருக்கும் இடத்தில் ஒரு நிறைகுடம் குத்து விளக்குகள் தேங்காய் மாவிலைகள்



வெற்றிலை பாக்கு வாழைப்பழம் மஞ்சள்கட்டை (துண்டு) தேசிக்காய் அறுகம்புல் பூக்கள் ஒரு சட்டியில் தண்ணீர் தேங்காய் உடைக்கக் கத்தி விபூதி குங்குமம் சந்தனம் பிள்ளையார் (மஞ்சளினால் அல்லது சாணத்தினால்) சாம்பிராணியும் தட்டும் கற்பூரம் முதலிய முக்கிய மாகத் தேவைப்படும் பொருட்க ளாகும்.

திருமாங்கல்யத்திற்குரிய தங்க நாணயத்தை (பவுணை) ஆலயத்தில் (இறைவனிடத்தில்) வைத்து பூசை செய்து ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு மஞ்சள் குங்குமம் பூ பழத் துடன் நாணயத்தையும் வைத்துக் கொண்டு வந்து பூஜையறையில் வைக்கவேண்டும். பொன்னுருக்கும் நாளன்று அதை மணமகனின் பெற்றோர் அல்லது பெரியோர் எடுத்து மணமகனிடம் கொடுக்க அவர் அதை ஆச்சாரியாரிடம் கொடுத்து உருக்கவேண்டும்.

ஆச்சாரியார் கும்பம் வைத்து விளக்கேற்றி தூபதீபம் காட்டி வெற்றிலை பாக்கு வாழைப்பழம் முதலியவை வைத்து தேங்காய் உடைத்துப் பூசை செய்து பொன்னை உருக்குவார். உருக்கிய பின் தாய்மாமன் தேங்காய் உடைத் துப் பூசை செய்து அந்த இளநீரை உருக்கிய தணலில் ஊற்றி தீயை தணிப்பார். பின் ஒரு தட்டில் வெற் றிலை பாக்கு பழம் பூ மஞ்சள் குங்குமம் தேசிக்காய் வைத்து வெற்றிலைமேல் உருக்கிய தங்கத் தையும் வைத்து மணமகனிடம் ஆசாரியார் கொடுப்பார். அதை மணமகன் வந்துள்ள சபையோ ருக்குக் காண்பித்து, அதன் பின் ஆசாரியாரிற்கு அரிசி காய்கறியுடன் தட்சணை அளித்து உருக்கிய தங்கத்தைத் திருமாங்கல்யம் செய்ய ஒப்படைக்கவேண்டும்.

பின்னர் விருந்துபசாரத்தில் அனைவரும் கலந்து கொள்வர். மணமகன் வீட்டில் இருந்து தோழி விருந்தில் ஒரு பகுதியை மணமகளின் வீட்டிற்குச் சென்று மணமகளிடம் கொடுப்பர். இதே நாளில் இரு வீடுகளிலும் திருமணத்திற்குரிய பலகாரங்கள் செய்யத்தொடங்குவார்கள். முதன் முதலாக இனிப்புப் பலகாரங்கள் செய்யவேண்டும் என்பதால் சீனி அரியதரம் செய்யலாம். அதற்குரிய மாவைக் குழைத்து வைத்தால் கன்னிக்கால் ஊற்றியபின் பலகாரம் சுடலாம். இந்த நாளில் இருந்து திருமண நாள்வரை மணமக்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடாதென்பது சம்பிரதாயம். ஆனால் இன்று அறைக்குல் பூட்டி வத்தா கூட பறவாயில்லைஎங்களால் பார்க்காமல் இருக்க முடியா நாங்கள் ஸ்கைப்பில் பார்போமே என்று தலைகிழா மாறிவிட்டது சடங்கு. பொண்ணுருக்கிய பின்னர் பலகாரம் சுடத் தொடங்கும் காலம் போய் பலகாரம் போன் பண்ணி ஓடர் கொடுக்கும் காலமாகிவிட்டது.

## கன்னிக்கால் ஊன்றல்

இதே நாள் பெண் வீட்டிலும் மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்கள் வளவில் ஈசான (வட கிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். அதற்கு கலியாண முள்முருங்கை மரத்தில் ஒரு தடியை வெட்டி அதன்மேல் நுனியில் 5 மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிறால் கட்டி இடையில் ஒரு மஞ் சள் பூசிய வெள்ளைத் துணியில் ஒரு செப்புக்காசு முடிந்து கட்டிவிட வேண்டும்.

பெரியவர் ஒருவர் அத்தடியை நிலத்தில் ஊன்றியதும் அதற்கு தேங்காய் உடைத்து சாம்பிராணி கற்பூரம் காட்டவேண்டும். அதனடி யில் நவதானியத்தொடு பவளம் அல்லது நவமணிகள் இட்டு நீர் பால் ஊற்றி (3 சுமங்கலிப் பெண்கள்) மரத் திற்குத் திருநீறு சந்தனம் குங்குமம் சார்த்தவேண்டும். இது நன்கு வளரவேண்டும் என்று நினைத்து கும்பத்தண்ணீரை ஊற்றுவர்.

மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து வெற்றிலை பாக்கு பழம் வைத்து தேங்காய் உடைத்துத் தீபம் காட்டி பந்தல்கால் ஊன்றுவார்கள். மணமகள் வீட்டில் ஊன்றிய பின் மணமகன் வீட்டிற்கும் செய்ய வேண்டும்.

முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்குபெறுதல் கூடாது. தவறுதலாக வீட்டில் ஏதும் துக்க நிகழ்வு நடந்தால் அது அவசகுனம் என்ற திருமணத்தை அத்தோடு நிறுத்தி மீதி சடங்குகளை பிற்பொடுவார்கள். அது வரை தம்பதிகள ஒருவரை ஒருவர்; பார்க்கவே முடியாது.

ஆனால் இன்று நவதானியம் இடுகிறார்கள் ஆனால் கன்னிக் காலுக்கு கீழே பவளமும் நவமணி யும் இருக்கும் என்று தோன்னி பார்க்காதீர்கள் ஏமாந்து விடுவீர்கள்.

திருமணம் முடியும் வரையும் பக்கத்து வீட்டில் துக்க நிகழ்வு நடந்தா அப்ப கல்யாணத்தால தப்பிச்சம் போக தேவயில்லை என்று பீத்தி கொள்வர். ஆனால் அதே அவர்கள் வீட்டில நடந்தா பொண்ணு மாப்பிளையிட்ட தான் சொல்ல கூடா சொல்லாதீங்க

பொடி ஆஸ்பத்திரியிலயே இருக்கட்டும் திருமணம் குடிந்ததும். வேறு எங்காவது வைத்து அழதிட்டு அப்படியே கொணட சுடலேல எரிப்பம் என்று திருமணத்த அவசர அவசரமா முடிக்கிறவர்கள் தான் அதிகர்த்து செல்கின்றது. காலத்தின் வேகத்திற்க ஏற்ப்ப.

**முளைப்பாலிகை போடல்**

பெண் வீட்டில் மூன்று அல்லது ஐந்து மண்சட்டிகளில் மண்பரப்பி நீர் ஊற்றவும். பாலில் ஊறவைத்த நவதானியங்களை 3 அல்லது 5 சுமங்கலிப் பெண்கள் அச்சட்டிகளில் தூவி நீரும் பாலும் தெளிக்கவேண்டும். (3 முறை). இவற்றைச் சாமி அறைக்குள் வைத்து திருமணத்தன்று மணவறைக்குக் கொண்டு போக வேண்டும். அநேகமாக பொன்னுருக்கலன்று செய்வார்கள் (இதை 3 நாட்களுக்கு முன்னாவது செய்தால் நவதானியம் வளர்ந்து இருக்கும்.

முளைப்பாலிகை இடுவதன் நோக்கம் திருமணம் செய்து மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டு பல்கிப் பெருகி வாழ வேண்டும் என்பதே நவதானியம் ஆவன நெல் கோதுமை பயறு, துவரை மொச்சை எள் கொள்ளு உளுந்து கடலை என்பனவாம்.

ஆனால் இன்று பல வீடுகளில் குறிப்பாக சொன்னால் 100ற்கு 80வீதமான வீடுகளில் இந்த சடங்கு முறை மறைந்த விட்டது.

**பந்தல் அமைத்தல்**

முகடுடைய பந்தல் அமைக்கும் பழக்கம் அக்காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. பந்தலின் உள்பகுதியில் மேலுக்குதுணிகளைக் கட்டுவார்கள். அழகுக்காகவும் திருமணச்சடங்குகள் நடக்கும் பொழுது பந்தலின் மேலிருந்து தூசி அழுக்குப் பொருட்கள் பல்லி போன்றன விழுந்துவிடாமல் இருப்பதற்காகவும் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பந்தலை கமுகு வாழை தென்னை ஓலைகளால் அலங்கரிப்பர்.

வாழைமரம் ஒருமுறைதான் குலைபோடும் அதுபோல் எமது வாழ்விலும் திருமணம் ஒருமுறை தான் என்பதை உணர்த்துகிறது. பாக்கு கொத்துக் கொத்தாகக் காய்ப்பதால் இது தம்பதிகள் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. வாழையும் தென்னையும் கற்பகதரு இவை அழியாப்பயிர்கள் ஆகும். தென்னை நூற்றாண்டு வாழக்கூடியது. 'வாழையடி வாழையாக' வளர்வது தேங்காயும் வாழைப்பழமும் இறைவழிபாட்டில் முக்கியமாகின்றது. தம்பதிகள் நிலைத்து நின்று அனைவருக்கும் பயன்படக்கூடியதாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தையே உணர்த்துகிறது.

திருமணம் வசதிக்கேற்ப பெண் வீட்டிலோ கோயிலிலோ அல்லது வேறுமண்டபத்திலோ வைக்கலாம். அப்படி வேறு மண்டபத்தில் வைப்பதானால் இருவரது வீட்டு வாசல்களிலும் மண்டபவாயிலில் மாவிலை தோரணம் வாழைமரங்களால் அலங்கரிக்கப்படவேண்டும்.

வாழைமரம் கட்டுவதன் நோக்கம் வாழையடி வாழையாக வாழைமரம் தழைத்து வருவது போல நமது சந்ததியும் பெருக வேண்டும் என்பதாகும். மாவிலை தோரணங்கள் மங்கள முறையாகக் கட்டவேண்டும். வாசலில் நிறைகுடம் வைக்க வேண்டும். வசதிக்கேற்ப வீடுகளையும் மண்டபத்தையும் அலங்கரிக்கலாம். மண்டபத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டே மணவறை கிழக்கு நோக்கி அமைக்கப்படவேண்டும். மணவறையின் முன்பு சுவாமி அம்பாள் கும்பங்கள், சந்திரகும்பம் விநாயக பூஜை பஞ்சகௌவ்விய பூசைகென ஒரு கும்பம் அக்கினி கிரியைக்குரிய பாத்திரம் அம்மி மஞ்சள் நீர் ஆகியவை வைக்கப்படும்.

அரசாணியைச் சுற்றி 4 விளக்குகள், 4 நிறைகுடங்கள் வைக்கப்படும் சந்திர கும்பத்திற்கு முன்பாக முளைப்பாலிகைசட்டிகள் வைக்கப்படும்.

குருக்கள் தன் முன்பாக புண்ணியதானத்திற்குரியவற்றை வைத்து அதன் பக்கத்தில் மஞ்சள் பிள்ளையாரும் ஒரு கிண்ணத்தில் பஞ்சகவ்வியமும் வைத்திருப்பார். அரசாணி மரமும் அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதற்கு ஒரு பக்கம் பாலிகைச் சட்டியும் நடுவில் அம்மியும் அதன் பின் சிவன் பார்வதி கும்பங்களும் மறுபக்கம் நவக்கிரக கும்பங்களும் ஆக முன்பாக அரசாணிப்பானையும் நான்கு கும்பங்களும் வைத்து கல்யாண மண்டபம் மேல் கூறியபடி அமைக்கப்பெற்றிருக்கும்.

ஆனால் இன்றய சந்ததியினருக்கு இதை வாசிக்கும் பொழுதே வியப்பாக தான் இருக்கும். இப்ப நாங்கள் மண்டபத்தில காச கொடுத்து புக் பண்ணி அந்த நேரத்திற்குள் திரமணத்தை அவசர அவசரமா முடித்து கொண்டு வீட்டிற்கு கிழம்புகினட்றோம். வீட்டிலும் இடத்திற்கு ஏற்ப முழத்திற்கு கணக்கு பார்த்து காச கொடுத்தா நாளு தகரத்தையும் நாளு செயற்கை பூவையும் கொண்டு வந்த பந்தல் என்ற சோடிச்சிட்டு போவங்க வாறவர்கள் இனல் கான. இது தானே இப்ப நமக்கு தெரியும்.

**திருமணத்தின் அன்று செய்யப்படுபவை.**

மணமகனை தோயவார்த்தல், கடுக்கண் பூணல், தலைப்பாகை வைத்தல் ,மணமகன் புறப்படுதல், பலகாரத் தட்டம், தேங்காய்த் தட்டம், கூறைத்தட்டம், பெண் புறப்படுதல், மாப்பிள்ளை அழைப்பு, மணமகளை அழைத்தல்.



**அரசாணிக்கல்:** திருமணப் பந்தலில் கலியாண முருங்கை மரக்கிளை ஒன்றை வைத்து அதற்கு பட்டுச்சாத்தி அலங்கரித்து வைத்திருப்பர்.

**அங்குரார்ப்பணம்:** வித்திடுதல் என்று அர்த்தம். அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பது. இதன் அர்த்தம் நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதிகளின் வாழ்வும் செழுப்புடையதாக அமைய வேண்டும் என்பதாகும்.

**காப்புக்கட்டல்:** தொடங்கிய கருமம் நிறைபெறும் வரை எந்தவித தீட்டுக்களோ இடையூறுகளோ துக்கங்களோ மணமக்களைச் சாராதிருக்க வேண்டிய பாதுகாப்புக் கருதி செய்யப்படுவது.



**கன்னிகாதானம்:** மணமகளை அவரின் பெற்றோர் மணமகனிடம் ஒப்படைப்பதை (தாரைவார்த்துக் கொடுப்பதை) கன்னிகாதானம் என்பர். இரு வம்சம் தழைக்கவும் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய 4 பேறுகளைப் பெற வேண்டியும் கன்னிகாதானம் செய்து தருகின்றேன். எல்லாவித செல்வமும் பெற்று எனது மகளைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக் கொள்வார்.

**தாலி கட்டுதல்:** கூறை உடுத்தி வந்த மணமகள் வரும்போது ஒரு மாலையுடன் வந்து அதை மணமகனுக்கு அணிவார். கெட்டிமேளம் முழங்க பூசகர் மந்திரம் கூற மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க பெரியோர் அட்சதை மலர்கள் தூவ ஒரு சுமங்கலிப்பெண் பின்னால் தீபம் பிடிக்க மணமகன் மேற்கு திசை நோக்கி திரும்பிப் பெண்ணின் கழுத்தில் முன்பு மூன்று முடிச்சிடுவர் இப்பொழுது திருமாங்கல்யம் பூட்டுவார்.

**மாலை மாற்றுதல்:** மாலை மாற்றுதலின் பொருள் இருமனம் கலந்து ஒரு மனமாகி இல்வாழ்க்கையை ஆரம்பித்தல். மூன்று முறை மாலை மாற்ற வேண்டும்..

**பால்பழம் கொடுத்தல்:** திரை ஒன்று முன்னால் பிடிக்கப்படும். முதன் முதலில் தம்பதிக்களுக்குக் கொடுக்கும் இனிப்புப் பதார்த்த மாகையால் வாழ்க்கை இனிமையாக இருக்கவேண்டும் என்று உணர்த்தவே இச் சடங்கு.

**கோதரிசனம்:** இல்லறவாழ்வு தொடங்கும் தம்பதியர் வாழ்விற்கு வேண்டிய அட்ட ஐஸ்வரியங்களையும் வேண்டி பசுவை இலட்சுமிதேவியாக வணங்குதல் ஆகும்.

**கைப்பிடித்தல்:** ஒருவரை ஒருவர் பிரியாதிருப்போம் என்று கையைப் பிடிக்கிறேன்' என்று கூறி மணமகளின் கையைப் பிடிக்கவேண்டும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடித்தல் வேண்டும்.

**ஏழடி நடத்தல்:** மணமகள் வலது காலை மணமகன் கைகளாற் பிடித்து ஏழடி எடுத்து வைக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்லப்படும். ஏழடிகள் நடந்த நாமிருவர்கள் சினேகிதரனோம். இருவரும் சேர்த்து அனுபவிப்போம். என்னுடன் கூடவா என்னும் பொருளில் இந்நிகழ்ச்சி அமையும் .

ஆனால் தற்காலத்தில் இந்த மந்திரங்களில் பாதி சொல்லப் படுவதே இல்லை. அப்படி சொன்னாலும் பல இடங்களில் பூசகர்தான் இதை சொல்லுகின்றார்.

**அம்மி மிதித்தல்:** வாழ்கையிலும் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்து நடக்கவேண்டும் என்று உணர்த்துகிறது.

**கணையாழி எடுத்தல்:** மூன்றாம் முறை அக்கினியை வலம் வரும் போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தைத் தேடி எடுக்கவேண்டும். இது தம் வாழ்க்கையிலும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது

**அருந்ததி பார்த்தல்:** நிரந்தரக் கற்பு நடசத்திரமாக மின்னுவேன்' என்று ஆணையிடுவதாகும்.

> **கெட்டிமேளம் முழங்க பூசகர் மந்திரம் கூற மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் தேங்காய் உடைக்க மணமகன் மேற்கு திசை நோக்கி திரும்பிய் பெண்ணின் கழுத்தில் முன்பு மூன்று முடிச்சிடுவர்**

**பொரியிடல்:** அக்கினிபகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும். என வேண்டிக் கொண்டு பொரியிடுதல் வேண்டும். நெல் பொரியாக மலர்வது போல் நம்வாழ்வு மலரவேண்டும் என்பதே தத்துவம்.

**ஆசிர்வாதம்:** மணமக்களை கிழக்கு முகமாக நிற்க வைத்தக் குருக்கள் பிராத்தனை செய்து மந்திரத்துடன் மணமக்களுக்கு ஆசிர்வாதம் சொல்லி மணமக்களுக்கு சிரசில் அட்சதையிட்டு ஆசீர்வதிப்பர்.

அட்சதை: பெரியோர் இரண்டு கைகளாலும் அறுகரிசி எடுத்து 'ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் முழுமையாய்ச் சூழப் பதினாறு பேறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்தி உச்சியில் 3 முறை இடவேண்டும்

**நிறைவு:** மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்புக்களை அவிழ்த்து பவித்திரங்களை கழற்றி அவற்றுடன் பெற்றோரின் பவித்திரங்களையும் வெற்றிலையில் வைத்து குருக்களின் தட்சணையும் சேர்த்து குருக்களிடம் கொடுக்க வேண்டும்.

**ஆராத்தி:** வீட்டு வாசலில் ஆரத்தி எடுத்து வலது காலை முதலில் வைத்து வீட்டுக்குள் செல்வர். முதலில் பூசை அறை சென்று வணங்கி பெற்றோர் காலிலும் விழுந்து வணங்குவர்.

**பூதாக்கலம்:** மணமக்கள் ஒரே இலையில் மணமகள் உணவு பரிமாறி மணமகனுக்கு முதலில் தன் கையால் உணவூட்டிய பின் மணமகன் மணமகளுக்கு உணவூட்ட வேண்டும்.

**வந்தோருக்கு விருந்தோம்பல்:** வந்தோரை வரவேற்றல் தமிழர் பண்பு. அந்த வகையில் இந் நாளிற்காக நாம் அழைத்தவரகளை சிறப்பாக உணவு பரிமாறி கவனிப்பது கூட ஒரு சடங்கு தான். வாழை இலை போட்டு சைவ உணவில் அறுசுவை உணவு சமைத்து இரு வீட்டு பக்கத்தாரும் சேர்ந்து உணவுபரிமாறி வந்தவர்களை இனிதே வரவேற்கும் சடங்கிது. ஆனால் இன்று மண்டபங்கள் 'செல் ப் சேவிஸ' வாறவர்கள் தமக்கு வேண்டிய உணவை தாமே போட்டு சாப்பிட்டவுடன் கிழம்ப வேண்டியது தான். இங்கே நமது வரவேற்றல் என்ற பண்பு அருகிப்போவதை அவதானிக்க முடிகின்றது.

**நாலாம்நாள் சடங்கு:** இச்சடங்கு இன்றும் பின்பற்றப்படுகின்றமை சந்தோசமான விடயம் தான். மாப்பிளை வீட்டில் இருந்த தம்பதிகள் 4ம் நாள் பெண்ணின் வீட்டிற்கு வருவர். அன்று உறவினர்களையும் மற்றும் திருமணத்தன்று வர முடியாதவர்களை எல்லாம் அழைத்து அசைவம் உண்பவர்களாயின் அசைவமும் சைவம் உண்பவர்களாயின் சைவமும் சமைத்து பரிமாறி சந்தோசமாக அன்றய நாளை கொண்டாடுவார்கள்.

இப்படியாக இரு மனங்கள் இனையும் இரு புதிய குடும்பங்கள் ஒன்றாகும் இந்த திருமணம் என்னும் மாங்கள்ய நிகழ்வு நமது சம்ரதாயப்படி நீடித்து வாழ வேண்டும். சடங்குகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பொக்கிஸமான கருத்துக்கள் உள்ளன. அதனால் தான் அவற்றை நம் முதாதையர்கள் கட்டாயப்படுத்தி நம் கைகளில் தந்து சென்றுள்ளனர் என்பதனால் அவற்றை சரி வர கடைப்பிடித்து எம் சந்ததியை ஒழுக்கம் என்ற கட்டுக்கள் செல்வதற்கு வழிசமைப்போம்.

# இலட்சங்களில் மிதக்கும் மீன்கள்



ரஜிந்தன்
rajinthan2011@gmail.com

சந்தைக்கு போய் சூடையோ, சுறாவோ வாங்கி வந்து வாய்க்கு இதமாக வறுத்துச்சாப்பிட மட்டுமே மீன்கள் படைக்கப்பட்டன என நம்பும் ரகமா நீங்கள்?. பாஸ்... நீங்கள் மகா அப்பாவி. காலம் நன்றாக மாறிவிட்டது. மீன்வளர்ப்பு பெரும் பணம்புழங்கும் விடயமாக இப்பொழுது மாறிவிட்டது.

முன்னர்தான் நூறு ரூபா, இருநூறு ரூபா முதலீட்டில் மீன் வளர்க்கலாமென இருந்தது. இப்பொழுது அதற்குசூடை மீன்கூட வாங்க முடியாது. கேட்டால் உங்கள் தலை சுற்றும். இப்பொழுதெல்லாம் இலட்சங்களை நெருங்குகிறது மீன்களின் விலை. இதெல்லாம் எங்கோ அமெரிக்காவிலோ, அந்தாட்டிக்காவிலோ நடக்கும் சங்கதியல்ல. உங்கள் வீடுகளிற்கு பக்கத்து வீடுகளில்த்தான் நடக்கிறது.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மிருக வளர்ப்பு பணம் கொழிக்கும் வர்த்தகமாக மாறிவருகிறது. பலருக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால் உயர்ரக நாய், மீன்கள் வளர்த்து சுளையாக காசு அள்ளும் பல புத்திசாலிகள் நமக்குள் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் பல பகுதி களிலும் உயர்ரகநாய், மீன்கள் வளர்ப் பவர்கள் உள்ளனர். அவர்களிற்குள் ஒரு வலைப்பின்னல் கூட காணப் படுகிறது. நாய்களின் விலை நீங்கள் அறிந்திருப்பீர்கள்தான். ஆனால் அவற்றையே தூக்கிச்சாப்பிடும் விதமாக மீன்களின் விலையும் உள்ளதென்பதை அறிவீர்களா?






லக்கி பிஸ் (அறோவ்னா - Arowana) என பொதுவாக அழைக்கப்படும் மீனினம் ஐந்து ஆயிரம் ரூபாவில் இருந்து இரண்டு லட்சம் வரை விற்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் சில வீடுகளில் இந்த மீனை காணமுடிகிறது. இந்தவிலை விற்றாலும், இதனை வாங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் பலர் தவம் கிடக்கிறார்கள் என்கிறார் ஒரு லக்கி பிஸ் உரிமையாளர். என்றாலும், சாதாரண குடும்பங்களினால் இதனை வாங்கி வளர்க்க முடியாது. பெரும் செல்வந்தர்கள் அல்லது வெளிநாடுகளிலிருந்து கண்ணைமூடிக்கொண்டு காசு அனுப்புபவர்கள் வீடுகளில்த்தான் இவற்றை காண முடியும்.

அப்படி இந்த மீனில் என்ன தான் சிறப்பு இருக்கு? ஏன் இந்த மீனுக்கு இத்தனை விலை? ஏன் இந்த விலை கொடுத்து இதனை வாங்க வேண்டும்? இதையெல் லாம் விசாரித்தால் ஒரே வரியில் பதில் வருகிறது. இந்த மீனை வீட்டில் வளர்த்து வந்தால் அந்த வீடு எப்போதும் சந்தோசமாக இருக்கு மாம். இந்த மீனை சிறியதாக கொண்டு வந்து வளர்க்க வேண்ட மாம். அது எப்படி வளர்ந்து கொண்டு வருகிறதோ, அப்படி வீட்டின் சந்தோசமும் வளர்ந்து, குடும்பமும் நல்லநிலைக்கு வருமென்று நம்புகிறார்கள்.

அதிஸ்ரம் நிறைந்த இந்த லக்கி பிஸ்கள் வீட்டில் இருக்கும் வரை அந்த வீடு எப்போதும் செல்வாக் கானதாகவும். அங்கு இருப்பவர்கள் நலமாகவும் இருப்பார்கள் என்பதும் இவர்களின் நம்பிக்கையாகவும் கருத்தாகவும் உள்ளது.

இதில் இன்னொரு விபரீதமும் உள்ளது. இந்த மீன்கள் வீட்டில இருப்பதால்த் தான் அவர்கள் எல்லாரும்வசதியாகஇருக்கிறார்கள் என எண்ணிப் பல மத்தியதர வர்க்கத்தினரும் இதனை வளர்க்க ஆரம்பிக்கிறார்கள்.

லக்கி பிஸ் என சொல்லப்படும் அறோவ்னா (Arowana)வகையைச் சேர்ந்த மீனினத்தில் சில்வர், கோல்ட் இனங்கள்தான் விலை கூடியவை. அதிலும் கோல்ட் அதி உச்ச விலை கொடுத்தாலும் கிடைக்காது என்ற நிலைதான் காணப்படுகிறது.

பெரும் பணச்செலவில் வாங்கப் படும் இந்த மீன் வகைகளை பராமரிப்பதும் இலேசான காரிய மல்ல. சில இலட்சங்கள் தேவைப் படும். ஆனால் விற்கும்போது அதனை ஈடுகட்டலாமென நினைக் கிறார்கள்.

இனி மீனம்மா.. மீனம்மா, தங்கம் மீனம்மா என்றுதான் பாட வேண்டும்!

---



மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் இரண்டு வீதிகளின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எழுத்தூர்சந்தி முதல் தலைமன்னார் பிரதான வீதி வரையான வீதியும், தாழ்வுப்பாடு தேவாலயத்திலிருந்து கடற்கரை செல்லும் வீதியும் புனரமைக்கப்படவுள்ளது. வடக்கு வீதி அபிவிருத்தி அமைச்சர் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளை மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியபாடசாலை பெற்றுள்ளது. மாவட்டத்தின் முதல் மூன்று இடங்களையும் இந்த பாடசாலை மாணவர்களே பெற்றனர். ஐ.எரிக் கிறேஸ்மன் 183, ஜே.ரைற்றஸ் அனோஜ் 183, என்.அபிசேக் 182 புள்ளிகளையும் பெற்று அசத்தியுள்ளனர்.









# கெந்திக்கோடு

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

இன்று மறைந்துவரும் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் கொக்கான், கிளித்தட்டு, கிட்டியும் புள்ளும், தாயம் ஆகிய நான்கு விளையாட்டுக்கள் பற்றி கடந்த வாரங்களில் வெளிவந்த எமது "தீபம்" பத்திரிகையில் படித்திருப்பீர்கள். அதுமட்டுமல்ல இந்த ஆக்கங்கள் தமது அந்தக்காலத்து ஞாபகங்களை மீட்டிப் பார்க்க வைத்ததாக ஏராளமானவாசகர்கள் தெரிவித்திருந்ததுடன், தொடர்ந்து இதுபோன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் பற்றி பிரசுரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்கமைய இந்த வாரமும் "கெந்திக்கோடு" விளையாட்டுப் பற்றி உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

உடலுக்கு சிறந்த உடற்பயிற்சியாகவும், பொழுதுபோக்குமிக்கதுமான இவ்விளையாட்டை பெரும்பாலும் சிறுவர்களே அதிகம் விரும்பி விளையாடுவார்கள். இவ்விளையாட்டு பொதுவாக வெளியான (வீட்டு முற்றங்களில்) இடங்களிலேயே விளையாடப் படும். இட வசதி இருந்தால், உள்ளக விளையாட்டாகவும் விளையாடலாம். விளையாடுபவர்களுடைய எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. எத்தனை பேரும் விளையாடலாம். ஆனால், ஒவ்வொருவரும் தனித்தனிப் போட்டியாளராகவே பங்குபற்ற வேண்டும்.

அந்தக் காலத்தில் பெண் பிள்ளைகள் எல்லோரும் முழுப்பாவாடை சட்டைதான் அணிவார்கள். முழுப்பாவாடையுடன் கெந்திக் கெந்தி விளையாடுவ தென்றால் கஷ்டம். இருந்தாலும், கைகளால் பாவாடையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு விளையாடுவார்கள். அதற்குள் அழாப்பல்கள், சின்னச் சண்டைகள், கோபங்கள் என்பன நிச்சயம் இருக்கும்.

**சரி விளையாட ரெடியா?**

கெந்திக்கோடு விளையாடுவதற்கான களத்தில் தொடராக 8 சதுரப் பெட்டிகள்(கட்டங்கள்); அமையக்கூடியவாறு கோடுகள் வரையப்பட்டிருக்கும். பெட்டிகளின் அளவு ஒருகட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்குக் கெந்திப் பாய்வதற்கு (ஒற்றைக் காலில் பாய்தல்) வசதியாக அமைந்திருக்கும். இவ் விளையாட்டுக்கு அண்ணளவாக ஒரு அங்குல விட்டமுள்ள சிறிய, தடிப்புக் குறைந்த மட்பாண்டத் துண்டோ அல்லது மாபில் துண்டோ பயன்படுத்தப்படுகின்றது. இதைச் "சில்லி" அல்லது "சிப்பி" என்று அழைப்பார்கள்.

எட்டுச் சதுரங்கள் கொண்ட பெட்டியில் இடது பக்கம் நான்கு பெட்டிகளும், வலது பக்கம் நான்கு பெட்டிகளும் இருக்கும். விளையாட்டை இடது பக்கம் இருந்தே தொடங்க வேண்டும். இடது பக்கமாகப் போகும் போது ஐந்தாவது பெட்டி அதாவது வலது பக்கத்தின் மேற்பெட்டி வீடு என்று அழைக்கப்படும். இங்கு காலாறி ஓய்வெடுக்கலாம்.

முதலாவதாக சிப்பியை இடது பக்க முதற் பெட்டியில் கோடுகளில் படாதவாறு போட்டு, ஒற்றைக்காலால் கெந்தி, அந்தச்சிப்பியை மிதிக்கவேண்டும்.ஒருகெந்தலிலேயே மிதித்து விட வேண்டும். மிதித்த சிப்பியை குனிந்து கையால் எடுத்துக் கொண்டு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பெட்டிகளுக்குள் கெந்திக் கெந்தி தாவி ஐந்தாவது பெட்டிக்குள் இரண்டு கால்களையும் வைத்து நின்றுவிட்டு, மீண்டும் ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் கெந்தி வெளியில் போக வேண்டும்.

இதே முறையில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போட்டு இதே ஒழுங்கில் சென்று மிதித்து, எடுத்துக் கொண்டு வெளியில் போக வேண்டும். ஆறாவது, ஏழாவது, எட்டாவது பெட்டிகளுக்குள் சிப்பியைப் போடும் போது இடது பக்க மூலையில் நின்றே போட வேண்டும்.

எட்டுப் பெட்டிகளும் விளையாடி முடித்த பின்னர், இப்போது சிப்பியை முதற் போலவே போட்டு, ஒற்றைக்காலால் கெந்தி மிதிக்க வேண்டும். ஒரு கெந்தலிலேயே மிதித்து விட வேண்டும். மிதித்த சிப்பியை குனிந்து கையால் எடுத்து, தூக்கி வைத்திருக்கும் கால் பாதத்தில் விரல்களின் மேல் வைத்துக் கொண்டு கெந்த வேண்டும். கெந்தும் போது சிப்பி கீழே வீழ்ந்து விடக் கூடாது. எட்டாவது பெட்டிக்கு வந்ததும் சிப்பியை பெட்டிக்கு வெளியில் போட்டு விட்டு கெந்தி அதை மிதிக்க வேண்டும்.

**விளையாட்டு விறுவிறுப்பாக மாறும் தருணம்**

அடுத்து, சிப்பியை தலையில் வைத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டு கோடுகளில் கால் படாதவாறு, ஒற்றைக்கால் முதற்பெட்டியிலும் மற்றையகால் இரண்டாவது பெட்டியிலும் என்று வைத்து போது "றைற்றா?", "றைற்றா?" (சரியோ? சரியோ?) என்று கேட்டவாறே நடக்க வேண்டும். கால் விரல்கள் கோடுகளில் பட்டுவிட்டால் ஆள் அவுட். கண்களால் பெட்டிகளைப் பார்க்கக்கூடாது. ஐந்தாவது பெட்டியில் இரண்டு கால்களையும் வைத்து நின்று கண்களைத் திறந்து பார்த்து விட்டு, மீண்டும் ஆறாவது, ஏழாவது பெட்டிகளைக் கடந்து எட்டாவது பெட்டிக்கு வந்ததும் தலையில் உள்ள சிப்பியை கண்களை மூடிய படி நின்று வெளியில் வீழ்த்தி விட்டு கண்களைத் திறக்க வேண்டும். பின் கெந்தி மிதிக்க வேண்டும்.

சரியாகச் சிப்பியில் மிதித்து விட்டால், சிப்பியை கையில் எடுத்து எட்டுக்கோட்டுக்கு புறமுதுகு காட்டி நின்று கொண்டு, சிப்பியை தலைக்கு மேலால் எட்டுக்கோட்டுக்குள் எறிய வேண்டும். சிப்பி கோடுகளிலோ, வெளியிலோ, ஐந்தாவது பெட்டிக்குள்ளோ விழக் கூடாது. எறிவதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் தரப்படும். சிப்பி எந்தப் பெட்டிக்குள் விழுகிறதோ அந்தப் பெட்டி உங்களுக்குச் சொந்தம். அது உங்கள் பழம். நீங்கள் அதற்குள் காலாறிப் போகலாம். மற்றவர்கள் அதைக் கடந்துதான் போகலாம். அவர்கள் அதற்குள் கால் வைக்க முடியாது.

அடுத்த பழத்துக்கு மீண்டும் முதலிலிருந்து விளையாட வேண்டும்

இரண்டு பேருக்கு அடுத்தடுத்த பெட்டிகளில் பழம் வந்து விட்டால் மற்றவர்கள் எப்படியாவது பாய்ந்து இரண்டு பெட்டிகளையும் கடக்கவேண்டும். யார் கூடிய பழங்கள் எடுக்கிறாரோ அவர்தான் போட்டியின் வெற்றியாளர்.








## மகளிற்காக நிர்வாணப்படம்

யுவதியொருவருடன் சமூகவலைத்தளத்தில் நண்பனாக பழகிவந்த வாலிபன் ஒருவன், யுவதியிடம் நிர்வாணப்படத்தை அனுப்பிவைக்குமாறு சில்மிசம் பண்ணியுள்ளான். இதனால் அதிர்ச்சியடைந்த யுவதி, தனது தந்தையிடம் விடயத்தை கூற, அவர் கொடுத்த அதிர்ச்சி வைத்தியத்தை பாருங்கள்.



## கசிப்பு வேட்டை

ஏறாவூரில் உள்ள வீடொன்றில் இரகசியமாக கசிப்பு காய்ச்சப்படுவதாக பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அந்தப்பகுதிய அதிரடியாக சுற்றிவளைத்தனர். பொலிசாரின் சுற்றிவளைப்பில் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள், கசிப்பு என்பன மீட்கப்பட்டன.




## அண்ணனின் விழுதுகள்

100வது திருட்டிற்கு போஸ்டர் அடித்து ஒட்டிவிட்டு திருடச் சென்ற வடிவேலுவின் வாரிசுகளையும் வென்ற திருடனாக இருப்பான் போல இவன். அமெரிக்காவை சேர்ந்த இந்த திருடன், தனது காதலியுடன் வங்கியொன்றில் திருடியுள்ளான். திருடிய பின்னர் சத்தமில்லாமல் இருக்காமல், பணத்துடன் செல்பி எடுத்து பேஸ்புக்கில் வெளியிட்டுள்ளான். பிறகென்ன, பொலிஸ் வந்து இருவரையும் கூட்டியள்ளிக் கொண்டு சென்றுவிட்டது.

## பொலிஸ் போஸ்

போக்குவரத்து பொலிசாரே வில்லங்கத்தில் மாட்டிவிட்டார்கள் என நினைத்து விடாதீர்கள். அண்மைக்காலமாக அதிகரித்து செல்லும் விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக கல்குடா பொலிசார் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களிற்கு போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்ச்சி நடவடிக்கையில் இறங்கினார்கள். விழிப்புணர்வு நடவடிக்கையில் 'கிளிக்' செய்த காட்சி.



## கொண்டயாவின் சகோதரன்

சிறுமி சேயா கொலையில் இறுதியாக சிக்கிக் கொண்டுள்ள சந்தேகநபர் கொண்டயாவின் சகோதரன். கொண்டயா என்ற பெயர் கடந்த சில வாரங்களாக ஊடகங்கள் வாயிலாக எல்லோருக்கும் அறிமுகம். இப்பொழுது கொண்டயாவின் சகோதரன் சிக்கியுள்ளான். யன்னல் வழியாக சிறுமியை கடத்திச் சென்று சீரழித்து கொன்றதாக வாக்குமூலமளித்துள்ளான்.






## மகளிற்காக போராடிய அப்பா

பொத்துவில் அல்இர்பான் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியொருவரை பரீட்சை எழுத விடாமல் அதிபர் தடுத்ததாகவும், தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதிகேட்ட மாணவியை தகாத வார்த்தைகளினால் அதிபர் திட்டியதாகவும் கூறப்படுகிறது. அதிகாரிகளிடம் முறையிட்டும் மாணவிக்கு நீதி கிடைக்காததையடுத்து, பொத்துவில் பிரதேச செயலகத்தின் முன்பாக மாணவியின் பெற்றோர் உண்ணாவிரதப் போராட்டத்தின் குதித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகள், விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக கொடுத்த வாக்குறுதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.



## நாங்கள் 'லவ்வர்ஸ்'

இரண்டு வாலிபர்கள் ஒரு யுவதியை மூர்க்கத்தனமாக தாக்கும் வீடியோ அண்மையில் வெளியானது. வீடியோவில் காணப்பட்டவர்கள் தொடர்பில் தகவல் தருமாறு பொலிசார் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். கைமேல் பலன் கிட்டியது. கட்டுநாயக்காவை சேர்ந்த வாலிபர்களும், யுவதியும் அடையாளம் காணப்பட்டு, வாக்குமூலம் பதியப்பட்டது. அப்பொழுதுதான் தெரிந்தது, அது காதல் ஜோடியொன்று. 2004 இல் பதியப்பட்ட வீடியோவாம். மொபைல்போனை திருத்த கொடுத்த இடத்தில், கடைகாரர் வீடியோவை எடுத்து பரவவிட்டுள்ளார். தாங்கள் விரைவில் திருமணம் செய்யப்போவதாகவும் காதல்ஜோடி கூறியுள்ளது.

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 11.10.2015 அன்று வெளியிடப்பட்டது